கல்கி

KALKI 24.5.98
ரூ. 4.50



கம்ப்யூட்டர் கல்வி:

வேலை கிடைக்குமா? வயிறு நிறையுமா?

உங்கள் முதலீட்டை வரி சிக்கனமாகவும் மற்றும் சுலபமாக ரொக்கமாகவும் ஆக்குவது எப்படி

அறிமுகப்படுத்துகிறோம்

யூடிஐ
பாண்ட் ஃபண்ட்

சுமையற்றது	நுழைவுத்திட்டம்	அன்றாட என்ஏவி	மூலதன ஆதாயம்	இன்டெக்சேஷன்	கவர்ச்சிகரமான வரிக்கு பின்னான வருவாய்

யூடிஐ பாண்ட் ஃபண்ட் ஒரு 100 சதவீதம் தூய கடன் ஃபண்டாகும். இத்திட்டத்தில் வந்து சேரும் தொகை அனைத்தையும் கடன் மற்றும் பணச் சந்தைப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும். ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் மூலதன வளர்ச்சி மறு முதலீடு செய்யப்பட்டு என்ஏவி யின் வளர்ச்சியாக பிரதிபலிக்கப்படும். இந்த ஃபண்டின் கீழ் வருவாய் விநியோகம் கிடையாது. "நோ லோட்" சிறப்பம்சத்தின் அர்த்தம் என்னவெனில் அன்றாட அடிப்படையில் வெளியிடப்படும் என்ஏவி-யில் விற்பனை மற்றும் மறு கொள்முதல் செய்யப்படும்.

யூடிஐ பாண்ட் ஃபண்டின் மற்ற முக்கிய சிறப்பம்சங்கள்.

- கவர்ச்சிகரமான வரிக்குப்பின்னான வருவாய். என்ஏவியில் ஏற்படும் மூலதன வளர்ச்சி வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 48 மற்றும் 112ன் கீழ் இன்டெக்சேஷன் மூலதன ஆதாயச் சலுகையாகக் கருதப்படும்.
- குறைந்தபட்ச முதலீடு : ரூ 10,000/- உச்ச வரம்பு கிடையாது. போர்ட்போலியோக்களின் கீழ் செய்யப்படும் பின்னான முதலீடுகள் குறைந்தபட்சம் ரூ 500/- ஆக இருக்க வேண்டும்.
- சிறந்த பணப் புழக்கம்: இந்த பாண்ட் ஃபண்ட் சுமையற்ற அன்றாட அடிப்படையில் என்ஏவி அறிவிக்கப்படும். என்ஏவியின் அடிப்படையில் விற்பனை/மறு கொள்முதல் செய்யப்படும். ஃபண்ட் முடிவுற்ற 30 நாட்கள் கழித்த பிறகு ஆரம்ப ஃபண்டின் விற்பனை / மறு கொள்முதல் துவங்கும்.
- நோ லோட் : ஒரு ஆண்டு கழித்து திட்டத்திலிருந்து விலகினால் ஒருவித கழிப்பும் விதிக்கப்பட மாட்டாது. ஒரு ஆண்டுக்கு முன்பு விலகினால் என்ஏவியின் மேல் ஒரு நிர்ணயமான நாளிலிருந்தும் விற்பனை கட்டணமாக 1.5% விதிக்கப்படும்.
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 54இஏ மற்றும் 54 இஃபி-ன் கீழ் மூலதன ஆதாய வரிவிலக்கும் கிடைக்கிறது.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான நாளைக்கு

உங்கள் யூடிஐ முகவர் அல்லது நிதி ஆலோசகரை இன்றே அணுகவும்!

ஆரம்ப வழங்கீடு 4 மே முதல் 17 ஜூன் 1998 வரை நடப்பிலிருக்கும்.

எல்லா மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவையாகும். மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டைப் பாதிக்கும் அம்சங்கள் மற்றும் சக்திகளைப் பொறுத்து ஃபண்டின் என்ஏவி ஏறிடவும் / இறங்கிடவும் செய்யும். கடந்தகால சாதனை வருங்கால முடிவுகளைச் சுட்டிக்காட்டுவதாகாது. யூடிஐ பாண்ட் ஃபண்ட் என்பது ஃபண்டின் பெயர் மட்டுமே தவிர, இது எவ்விதத்திலும் ஃபண்டின் தரத்தை, அதன் வருங்கால வளர்ச்சியை அல்லது வருமானத்தை சுட்டிக்காட்டுவதாகாது. திட்டத்தின் ஃபண்டின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதியளிக்க முடியாது. முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101.

கிளை அலுவலகங்கள் : • கோயம்புத்தூர் போன் : 214973 • சென்னை போன் : 517101, 517190 • மதுரை போன் : 38186 • திருச்சி போன் : 760060

027/98 C TAM B



• கஸ்தூர்பா காந்தி விக்ரகம்...

காங்கிரஸ் தலைவர்கள் கண்டு கொள்ளாத காந்தி கோயில்...

“இன்றைய தேதிக்கு, கோயில் கும்பாபிஷேகம் முடிஞ்சு 15 மாசம் ஆயிடுச்சு. ஒரே குறை இன்னைக்கு வரைக்கும் எந்தக் காங்கிரஸ் தலைவர்களும் இங்கே வந்து எட்டிப் பார்க்கலை என்பதுதான்!”

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி அருகே சலங்கபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட செந்தாம்பாளையம் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் 'மகாத்மா காந்தி' கோவிலைச் சுற்றி இந்தப் பேச்சுக்களே அடிபடுகின்றன.

“தேர்தல்ல ஜெயிச்சவுடனே ஏதாச்சும் ஒரு தலைவர் சிலைக்கு ஆள் உயர மாலையப் போடறாங்க... போட்டோவுக்கு போஸ் கொடுக்கறாங்க. போய் பதவியேற்கிறாங்க. ஆனா இங்கே வர்றதுக்கு 'டைம்' கேட்டா நேரமில்லைங்கறாங்க...!”


நம்மிடம் எடுத்த எடுப்பில் இப்படிப் புகார் கூறியது மகாத்மா காந்தி கோயில் டிரஸ்ட்டி எஸ். ஆறுமுகக் கவுண்டர்.

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalki@md2.vsnl.net.in

அவரை வழி மொழிந்தார், சலங்கபாளையம் பேரூராட்சித் தலைவர் எஸ்.பி. அண்ணாமலை.

"காந்தி கோயில் கட்டி முடித்தவுடனே கும்பாபிஷேகத்தை ஒரு காங்கிரஸ் தலைவரைக் கூப்பிட்டே நடத்த வேண்டும் என்றே திட்டமிட்டோம். அதன்படி த.மா.கா தலைவர் மூப்பனாருக்கு அழைப்பு விடுத்தோம். அவரை நேரடியாக அண்ட விடவில்லை சுற்றியிருந்தவர்கள். 'வருவார்' என்றும் 'நேரம் இல்லை' என்றும் பல்வேறு தகவல்கள். த.மா.கா. முன்னாள் மத்திய அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தனைக் கூப்பிட்ட போதோ 'இப்போது டைம் இல்லை. கவுந்தப்பாடியில் ஒரு கட்டடத் திறப்பு விழா இருக்கிறது. அந்தத் தேதிக்குக் கும்பாபிஷேகத்தை மாற்றி வையுங்கள்' வருகிறேன் என்றார். உள்ளூர் பிரமுகர் (ஆப்பக்கூடல்) கைத்தறித்துறை அமைச்சர் என்.கே.கே. பெரியசாமியைக் (தி.மு.க.) கூப்பிட்ட போதோ 'டைம் இருந்தால் வருகிறேன்' என ஒப்புக்குக் கூறினார். இப்படி ஆளாளுக்கு காந்தி கோயிலை உதாசினப்படுத்தவே வேறு வழியில்லாது கர்நாடக அமைச்சர்களை அழைத்தோம். அவர்களும் வந்து கௌரவித்ததோடு இந்தியாவிலேயே ஒரு அதிசயமாய் காந்தி கோயில் உருவாக்கியிருப்பதற்கு பாராட்டுத் தெரிவித்து வாழ்த்தினர்.


"பின்னாளில் மூப்பனார் கவனத்திற்கே இது வரவில்லை எனத் தகவல் வந்தது. நான் தெரியாமல்தான் கேட்கிறேன். 'காங்கிரஸ்காரர்கள்' என்று மார்தட்டிக் கொள்கிறவர்களே இப்படி என்றால் மற்றவர்கள் எப்படியிருப்பார்கள்? இப்போது உண்மையைச் சொல்லுகிறேன். இங்கு இதுவரை வெளியூர்களில் - வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம் ஏன் வெளி நாட்டினர் சிலர் கூட வந்து பார்த்துப் புகைப்படம் எடுத்துப் போகின்றனர். பயபக்தியோடு காந்தியைத் தொழுது நெற்றியில் திருநீறு இட்டுக் கொண்டு செல்கின்றனர். ஆனால் நம் மாநிலக் காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் இதுவரை இங்கு வந்ததில்லை!"



• அண்ணாமலை

– என்று நம்மிடம் தமது உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளியிட்ட பஞ்சாயத்துத் தலைவர் த.மா.கா.க்காரர்!

"அவர்கள் வராவிட்டால் என்ன? அவர்கள் வராததால் கோயில் புனிதமடையாது போய் விட்டதா?" எனக் கேட்டதுதான் தாமதம்.



• ஆறுமுகக் கவுண்டர்

"என்ன இப்படி சொல்லிட்டீங்க? முருக பக்தன் பழனிக்குப் போவான், திருச்செந்தூர் போவான். வெங்கடாசலபதி பக்தன் திருப்பதி போவான். சுதந்தரம் வாங்கித் தந்த மகாத்மா நினைவா ஒரு கோயிலை உருவாக்கியிருக்கோம். அதுக்குக் காங்கிரஸ்காரர்களே வராட்டா அசிங்கமில்லையா?"

– சுற்றுப்புற இளைஞர்கள் சண்டைக்கே வந்து விடுவார்கள் போல ஒரு வேகம்.



• வையாபுரி முதலியார்

"ஏதோ ஒரு புண்ணியவான் (வையாபுரி முதலியார்) சொந்தப் பணத்தையும், சொந்த பந்தங்க பணத்தையும் போட்டு இதைக் கட்டி முடிச்சு, இப்போதைய அன்றாடச் செலவுகளுக்கும் பொறுப்பேற்று நடத்தி வர்றார். ஆனா வாயளவுல நேசிக்கிறவங்க வந்து கோயிலைப் பார்த்துட்டுப் போகக்கூட கஷ்டப்படறாங்களே!" என்று ஆதங்கப்பட்டனர்.

நாம் போனபோது மகாத்மா காந்திக்கு உச்சிகால பூஜை நடந்து கொண்டிருந்தது. தினம் முக்கால பூஜையும் தவறாது நடத்த கோயில் டிரஸ்ட் ஓர் இளம் அர்ச்சகரை நியமித்துள்ளது. கோயில் கும்பாபிஷேகத்திற்குப் பின் பல்வேறு அர்ச்சகர்கள் காந்திக்கு தீபாராதனை காட்டவும் அர்ச்சனை செய்யவும் மறுத்து விட்டனராம். காந்தி என்னதான் தேசப் பிதா என்றாலும் மனிதர்தானே. அவருக்கு

பூஜை செய்யமாட்டோம் என மறுதலித்த நிலையில் 'இவருக்கு பூஜை செய்வதுதான் நிஜமான பூஜை.. இவரைக் கும்பிடுவது தான் ஆத்மார்த்தமான வழிபாடு' என்று சொல்லிக் கொண்டு வந்தாராம் இந்த இளம் அர்ச்சகர். பரசுராமர் என்னும் அந்த அர்ச்சகர் முகத்தில் இன்னும் பால் மணம் வடிகிறது. அவ்வளவு இளமை. அவரிடம் இது பற்றிக் கேட்டபோது.

"நாம் தெய்வத்தைப் பார்த்தது கிடையாது. இவர் (காந்தி) மனித உருவில் வந்த மகாத்மா... கோடானுகோடி இந்திய மக்களுக்கு தெய்வம்... அதனாலேயே இதுதான் நிஜ ஆராதனை என நான் ஒப்புக் கொண்டேன். சிவபெருமானுக்கு எப்படி அர்ச்சனையோ அதே மாதிரிதான் இங்கு



பூஜையின் போது...

காந்திக்கும் செய்கிறோம். அதோடு இங்கே காந்தி, கஸ்தூர்பா (காந்தி விக்ரகத்திற்கு நேர் எதிரே) விக்ரகம் தவிர்த்து விநாயகர், சனீஸ்வரர், நவகிரகங்கள், துர்க்கை எல்லாம் இருப்பதனால் அனைத்துத் தரப்பினரும் பய பக்தியுடன் வந்து சாமி கும்பிட்டுச் செல்கின்றனர்...!"

"நீங்கள் காந்திக்கு பூஜை செய்வது பற்றி உங்கள் பெற்றோர் எதிர்க்க வில்லையா?" எனக் கேட்டபோது அவர்கள்தான் இங்கு பூஜை செய்யச் சொல்லி வலியுறுத்தியதாகக் கூறுகிறார்.

இக்கோயிலுக்கு வருடந்தோறும் விழா எடுக்க ஏற்பாடு. அக்டோபர் 2ல் நடந்த விழாவில் அம்மனுக்குச் செய்வது போலவே பெருந்தலையூர் ஆற்றிலிருந்து (பவானி) தீர்த்தம் எடுத்து வந்து அபிஷேகம் செய்திருக்கின்றனர். அதே போல் பக்கத்து பள்ளிக் குழந்தைகளுக்கு ஆகஸ்டு-15 அன்று இங்கு திருவிழா நடத்தி இலவசச் சீருடை (அனைத்துப் பிள்ளை களுக்கும் ஜாதிப் பாகுபாடின்றி) கொடுக் கப்பட்டிருக்கிறது. இனி வரும் காலங் களில் காந்திக்கு சப்பரம் தூக்கவும் உற்சவ மூர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

"காந்தி கோயிலைக் கட்டும் எண்ணம் எப்படி உதித்தது. இதற்கு எதிர்காலத் திட்டங்கள் ஏதும் உண்டா?" என்று இதன் ஸ்தாபகரும் ஈரோடு கலைக் கல்லூரி டிரஸ்டில் துணைத் தலைவராய் அங்கம் வகிப்பவருமான வையாபுரி முதலியாரிடம் கேட்டோம்.

"மகாத்மாவுக்குச் சிலைகள் அமைக்கப்பட்டு அதன் மீது அசிங் கங்கள் உதிர்க்கப்பட்டு கவனிப்பாரற்றுக் கிடப்பதை விட அவருக்குக் கோயில் கட்டி ஆராதிக்கலாமே என்ற எண்ணம் ரொம்ப காலமாகவே இருந்து வந்தது. இப்போதெல்லாம் காந்தியைப் பற்றி அரசியல்வாதிகள் வாயளவில் பேசுவது கூடக் கிடையாது. இந்த நிலையில் சமீபத்தில் காந்தி சிலை உடைப்புக்கள் வேறு... இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஐந்தாறு வருடம் முன்பு நானே ஊருக்குள் காந்தி கோயில் கட்ட முயற்சி செய்தேன். வேறு நோக்கம் எதுவும் இல்லை! கோயிலுக்குள் காந்தியக் கொள்கைகளை வலியுறுத்துகிற மாதிரி படங்கள், வாசகங்கள் எழுத முடிவு செய்துள்ளோம். ஏற்கெனவே கோபுரத்தை சுதந்தரப் போராட்ட சித்திரிப்பில் அமைக்கத்தான் முயற்சி செய்தோம். ஆனால் அப்படி வடிவமைக்க சிற்பிகள் கிடைக்கவில்லை. கோயிலுக்கு அரசு உதவிகள் எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் எத்தனை காலத்திற்கு இதனை நாங்களே நடத்திட இயலும்? அரசின் கீழ் வருவதில் எங்களுக்கும் விருப்பம்தான்!" என்றார் அவர்.

கட்டுரை, படங்கள் : **கா.சு. வேலாயுதன்**

அமெரிக்காவில்

பொழுதுபோக்கு என்று பார்த்தால், தமிழ் சினிமா ரசிகர்கள் அமெரிக்காவில் ஒவ்வொரு பெரிய நகரததிலும் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். 'நல்ல' படத்துக்கு ஆறு டாலர் என்றும், 'அறுவை' வகையறாவுக்கு இரண்டு டாலர் வாடகை வீடியோ போதும் என்பதும் இந்தப் பகுதியில் பொதுவான நிலை. இன்ட்டர்நெட்டில் வரும் சில தமிழ் வாரப் பத்திரிகைகளில் படத்தைப் பற்றின விமர்சனத்தை ஏற்கெனவே படித்தபின் சிலர் வருவார்கள், வராமலும் இருப்பார்கள். படம் வரும் நாளை எலக்ட்ரானிக் மெயில் மூலமாகவே தகவல் அனுப்பிவிடுகிறார்கள். 'எதிர்பார்க்கும்' படம் என்றால் போன் செய்திகளும் பறக்கும். வரவேற்புபெற்ற படங்களை மீண்டும் திரையிடுவதும் உண்டு. இதுவரை இங்கே தமிழ்ப்படத்துக்கு தியேட்டருக்குப் போய்விட்டு டிக்கட் இல்லாமல் நான் திரும்பியதேயில்லை!

சராசரி இரண்டு வாரங்களுக்கு ஒரு புதுத் தமிழ்ப்படம் திரையிடுதல் என்றாகி, சனி அல்லது ஞாயிறு என்று படம். (சில இந்தி படங்கள் தினசரி ஒரு காட்சி என்று போவது உண்டு). தியேட்டருக்கு வாடகை, காட்சி ஒன்றுக்கு 500 டாலருக்குக் குறைவதில்லை. விநியோகஸ்தர்கள் படத்துக்கு இவ்வளவு என்று ரேட் பேசிக் கொண்டு விடுகிறார்கள். பல படங்கள் வருமானம் இல்லாமல் கையைக் கடித்தாலும் படங்கள் வருவது நிற்காது என்றாகி விட்டது.

எந்த மாதிரி படங்களுக்கு வரவேற்பு?

மெகா நடிகர்கள், நடிகைகள் (பெயர் சொல்ல வேண்டாமே...!) என்று படத்தில் இருந்து விட்டால் காட்சிக்கு 300 பேர்கூட வரலாம். மற்றபடி, சில படங்களுக்கு நான் போனபோது, ரசிகர் எண்ணிக்கை 30 கூடத் தாண்டவில்லை... இதிலிருந்து என் தமிழ் சினிமா ரசனை எப்படிப்பட்டது என்று உங்களுக்கு இப்போது சந்தேகம் வரலாம்! மற்ற ரசிகர்ளுடன் பேசியதில், நான் யோசித்ததில் தெரிந்து கொண்ட சில விவரங்கள்:

எதிர்பார்க்கும், வரவேற்கப்படும் அம்சங்கள் –

நல்ல கதை; அழுத்தமான கதை; குடும்பக் கதை பிரபல நடிகர்கள், நடிகைகள், பிரபல இயக்குநர்கள் இனிமையான, நெஞ்சில் நிற்கும் பாடல்கள் கதையுடன் இழையும் நகைச்சுவை...

பிடிக்காத அம்சங்கள் –

அறிவுக்கு அனுபவத்துக்கும் ஒவ்வாத அபத்தமான கதைகள்; புகுத்தப்படும் டான்ஸ்கள், பாடல்கள்; கதைக்கு ஒட்டாத வன்முறைச் சம்பவங்கள், சண்டைகள்; கவர்ச்சி என்ற பெயரில் ஆபாசம்; ஆபாச வசனங்கள்; கதையுடன் ஒட்டாத நகைச்சுவைக் காட்சிகள், வசனங்கள்; கண்டைக்காய் கதையை பிரும்மாண்டம் என்று காட்டுவது.

அமெரிக்காவில் வசிப்பதால் நமழுருக்கு எல்லாமே மாறிவிடுவதில்லை. தமிழ் சினிமா பார்க்கும் மோகம் நிச்சயம் உண்டு.... ஆனால், அமெரிக்க தமிழ்ப்பட ரசிகர்களின் கண்ணோட்டம் மாறிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. எவ்வளவோ ஆங்கிலப் படங்களையும் இங்கு பார்க்கிறோம். அதிலும் தண்டமான படங்கள் நிறைய உண்டு. ஆனால், கல்கி அவர்கள் ஏப்ரல் 6, 1952 இதழில் எழுதியிருந்ததைப் போல் ('கல்கி' பத்திரிகை 29.3.98 பார்க்கவும்), தமிழ்ப் படங்களை ஏன் அதுபோல் எடுப்பதில்லை என்று 46 ஆண்டுகளுக்குப் பின்னும் கேட்கத்தான் தோன்றுகிறது. தமிழ்ப்படங்களை ஆங்கிலப் படங்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவது தவறு என்று சிலர் கருதலாம். ஆங்கிலப் படங்களைக் காப்பியடிப்பது மட்டும் எந்த விதத்தில் சரியாகும்? கதை மட்டுமில்லாமல், இசையையும் ஆங்கிலப் படங்களிலிருந்து தாராளமாக தத்து எடுத்துக் கொள்வதை அமெரிக்க தமிழ் ரசிகர்கள் நன்றாகவே அறிவார்கள்.

சில முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்.

அமெரிக்க டீ.வியில் வரும் குழந்தைகளின் கார்ட்டூன் படங்களின் தரம் கூட இல்லாத கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் கொண்ட தமிழ்ப்படங்கள் வருகின்றன. அரங்கத்தில் பார்க்கும் சிறுவர்களே இதை கலாட்டா செய்கின்றனர். வருந்தத்தக்க நிலை. கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் போட வேண்டும் என்பதற்காக திணிக்க வேண்டாமே! எந்த அம்சத்துக்கு படத்தில் சரியான இடமில்லையோ



தமிழ் சினிமாக்கள்!

அதை விட வேண்டியதுதானே?

அளவுக்கு மீறின வன்முறை படத்தின் போக்கை பாதிக்கிறது. ஆங்கிலப் படங்கள் தவிர, அமெரிக்காவில் சின்னத்திரைக் காட்சிகள் கூட இப்போது 'ரேட்டிங்' போடப்பட்டுத்தான் வருகின்றன. வன்முறை, ஆபாசக் காட்சிகள் கொண்ட தொலைக் காட்சிகளையும், திரைப்படங்களையும் சிறுவர் பார்ப்பது அவர்களது மனவளர்ச்சியைப் பாதிக்கும் என்பதில் அமெரிக்கர்கள் கண்டிப்பாக இருக்கிறார்கள். ஏற்கெனவே சிறுவர்களைச் சாடும் பல பிரச்னைகளைக் கொண்டிருக்கும் அமெரிக்க சமுதாயத்துக்கு இந்த ஒரு விஷயத்தில் கொஞ்சமாவது 'கண்டிப்பு' இருக்கிறதே என்ற திருப்தி. இது ஆச்சரியமாக இருக்கலாம்; ஆனால் உண்மை. தமிழ் சினிமாவைப் பார்க்க குடும்பமே வருகிறது. சிறுவருக்கு தமிழ் புரியாவிட்டாலும் வன்முறைக் காட்சிகளைப் பார்க்க நேருகிறது. தமிழ் சினிமாவில் வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது ஒரு பக்கம் இருக்கட்டும்; சினிமாவில் சிறுவர், சிறுமியர் நடித்து, அவர்களும் வன்முறையை (கதையில்) நேரடியாகப் பார்ப்பதும், பங்கு கொள்வதும் வருந்தத்தக்க நிலையல்லவா? சிறுவருக்காக தமிழ்ப்படங்களைத் தயாரிக்காவிட்டாலும், சிறுவரை பாதிக்கும் வன்முறைக் காட்சிகளைக் குறைக்கலாமில்லையா?

தமிழ்ப்பட நகைச்சுவை சிரிக்கும்படியான நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. கதையுடன் ஒட்டாத காமெடி காட்சிகளும்,



ரட்டூன் மரணங்கள்

ரட்டூன் வகைப் பருத்திச் செடிகளில்
இம்முறை
விவசாயிகளின் தற்கொலைகள் அறுவடையாகின்றன.
ஜூலை மாதம் பொழியாமல் கெடுத்தது.
அக்டோபரில் பொழிந்து கெடுத்தது.
வட்டிக்கு வாங்கி
நட்ட இளம் விவசாயிகள்
இருமுறை செலவு செய்தும்
பூச்சிக் கொல்லி மருந்துகள்
பருத்திக்காட்டைக் கைவிட்டன.
அதே பூச்சி மருந்து
விவசாயிகளைக் கைவிடவில்லை!
அறுபு. பிணங்கள் இதுவரை!
விநியோகிக்கப்பட்ட விதைகளும் தரமற்றவை என
இப்போது தெரிய வந்திருக்கிறது.
யார் போய்ச் சொல்வது –
பிணங்களின் செவியில்?

— பா. சத்தியமோகன்

வசனங்களும், 'படத்தில் கதையே இல்லை' என்று ஆக்கிவிடுகின்றன. நகைச்சுவை நடிகர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்வதையும் திட்டுவதையும் எத்தனை படங்களில் காட்டுவது, பார்ப்பது? இதை பார்க்கவே சகிக்காதபோது, ரசிப்பது எப்படி?

அமெரிக்கத் தமிழ் சினிமா ரசிகர்களுக்காக என்று பிரத்தியேகமாக தமிழ்ப்படங்களை எடுக்க வேண்டும் என்ற அபத்தமான கருத்தை இங்கு சொல்லவில்லை. இனிமேல் அரைக்கவே கூடாது என்ற மாவை அரைப்பதை நிறுத்திவிட்டு, அழுத்தமான கதைகளை அழகாக எடுக்கலாமே. எல்லா படத்திலும் டிஸ்கோ டான்சும், ரீல் ரீலாக ரத்த ஆறு ஓடும் சண்டைக் காட்சிகளும் வேண்டுமா? படப்பிடிப்பு தொழில் நுட்பம் வேகமாக வளருகிறது. தமிழ்ப்பட இயக்குநர்களும் தரமான, நவீன படப்பிடிப்பு முறைகளைக் கையாண்டு வருகின்றனர். 'ஜுராசிக் பார்க்', 'இண்டிபெண்டன்ஸ் டே', 'டைட்டானிக்' போன்ற படங்களை வெளிவரும் முதல் நாளே பார்க்கும் அமெரிக்கத் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு, குழந்தைத்தனமான கிராஃபிக்ஸ் போட்டு தமிழ் படங்களைக் காட்டினால்... சிரிப்பதா, அழுவதா?


தமிழ்ப் படங்களில் கதையும் இருந்து, மனம் கவரும் கலையும் இருந்த காலம் மாறி, இப்போது கதையும் இல்லை, கதை சொல்லும் கலையும் இல்லை என்றாகிவிட்டது. வெறும் டெக்னாலஜியை நம்பியே எத்தனை படங்களை எடுப்பது? அமெரிக்காவில் திரையிட்டால் பணம் வந்துவிடும் என்று நம்புவது உண்மை என்றால், அமெரிக்க தமிழ் ரசிகர்களும் தராதரம் தெரிந்துதான் டாலர்களைச் செலவு செய்கிறார்கள், செய்வார்கள் என்பதும் உண்மை!!

'வெளி உலகத்தில் நம் நாட்டையும் நம் சமூகத்தையும் நம் ஸினிமாக்கலையையும் உயர்த்திப் புகழ் அளிக்கக் கூடிய படங்களை' (கல்கி, 29.3.98 பக்கம் 60) நாம் எப்போது தயாரிப்போம் என்பது தெரியாது. அதைச் செய்வதற்கு முன்னோடியாக கடந்த ஆண்டிலேயே வந்த தமிழ்ப்படங்களை ஆராய்ந்து பார்த்தால் நம் அவலமான நிலை புரியும். தமிழ்ப்பட தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் இதை ஒரு சவாலாக ஏற்றால் நம்பிக்கை மலரும். ஏற்பார்களா?

— வாஷிங்டன் ஸ்ரீதர்

KALKI SHOPPING PAGE

தண்ணீரிலிருந்து பரவும்
நோய்களை தவிர்க்க



Sintex

Silverline

Water Filter
கம் Purifier

Best Results... Lowest Price

• Compact and sturdy • Lower in cost and maintenance • Better in performance • Easy to install • Incorporates UV technology • Designed for Indian working conditions • Portable • Ideal for every application-home, offices, hospitals, clinics, public places etc.

WATER EQUIPMENTS
No.143, Angappa Naicken Street,
Chennai - 600 001. ✆ : 5223260, 5221160
CREDIT CARDS ACCEPTED

உயர் ரக மதுரை சுங்குடி
புடவைகள்

RAMACHANDRA SAREES
37-B, Arya Gowder Road,
Postal Colony 3rd Street
corner,
West Mambalam,
Chennai - 33.
Ph : 4896532

வேலை நேரம் : காலை 10 மணி
முதல் இரவு 8.30 மணி வரை.

உணவு இடைவேளை இல்லை.

எங்களிடம்: பெங்கால் காட்டன்,
வெங்கடகிரி மற்றும்
பத்திக் காட்டன் கிடைக்கும்.

வழங்குபவர்:
ராமச்சந்திரா சாரீஸ்,
20/B. பழையகுயவர்பாளையம் ரோடு,
மதுரை -9

EDUCATIONAL

+1 to +2 STUDENTS
(STATE BOARD)

NIPE

Gives Postal Coaching : Academic + Entrance for high level performance and assured result; Sure to enter a professional college.

Medium : English and தமிழ்

Materials come to your Doorstep! Five Batches for **Maths, Physics, Chemistry** and **Biology.**

Highly suitable for Girls and Hostelers!

Fees! : *Rs.1200/-* Three Subjects
: *Rs.1500/-* Four Subjects

Join NIPE To Achieve your Life Aim!

Write for Prospectus and application forms with a Rs.5/- Postal Stamp.

NATIONAL
INSTITUTE OF PROFESSIONAL EDUCATION
18, Rajagopalan St., West Mambalam,
Chennai - 600 033. Ph : (044) 483 9458.

The course is designed and conducted by
Prof. R.JAYARAM M.Sc., M.Phil

திருமண ஏற்பாடுகளை
எங்களிடம் விட்டு விடுங்கள்!

சாப்பாடு, டிபன்,
காபி, சீர்வரிசைகள்,
பக்ஷண வகைகள், புஷ்பம்,
மேளம், இன்னிசை
மற்றும் சகல விதமான
திருமண ஏற்பாடுகளையும்
காண்ட்ராக்ட் முறையில்
சிக்கனமாகவும் சிறப்பாகவும்
செய்து தர காத்திருக்கிறோம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

JEEKAY CATERING CONTRACTORS
G. கிட்டப்பா
(தஞ்சை ஆனந்தா லாட்ஜ்)
Flat No.3 "RAM"
33. வெங்கட்ராமன் தெரு,
தி. நகர், சென்னை – 17.
போன் 8240276

ராஜீவ் காந்தி படுகொலை பற்றிப் புலன் விசாரணை நடத்த அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவராகவும் சி.பி.ஐ. டைரக்டராகவும் பணியாற்றி, அண்மையில் ஓய்வு பெற்ற டி.ஆர். கார்த்திகேயன் அவர்களைச் சந்தித்தபோது...

‘வீரப்பனைப் பிடிக்க அரசு அணுகியதா?’



“அறுபது வயது போலவே தெரியவில்லையே! எப்படி இளமையாகத் தோற்றமளிக்கிறீர்கள்?”

“நான் மனச்சாட்சிப்படி நடக்கிறவன். கடவுள் பக்தி கொண்டவன். யோகா, தியானம் பழகுகிறவன். கோவில்களுக்குப் போவேன். இவையெல்லாம் சேர்ந்து, என்னை எப்போதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கின்றன. சுறுசுறுப்பாய் இயங்க வைக்கின்றன. சென்சிடிவ் ஆன பொறுப்புகளில் இருந்தாலும் டென்ஷனுக்கு ஆளாக மாட்டேன். இரவு, பகலாய் உழைத்தாலும், உடலளவில் சோர்வு ஏற்பட்டாலும், மனத்தளவில் சோர்வடைய மாட்டேன். இடையிடையே வேலையிலிருந்து சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு புனித யாத்திரை சென்று வருவது என் பழக்கம். ராஜீவ் காந்தி படுகொலை பற்றி விசாரித்துக் கொண்டிருந்த போது கூட மானசரோவருக்கு யாத்திரை சென்று வந்தேன். ஜெருசலேம் பயணம் மறக்க முடியாத ஒன்று. சில நாட்களுக்கு முன்பு கூட ஹரித்வார் கும்பமேளாவுக்குச் சென்று வந்தேன். ஒருவர் தமக்கு வயதாகி விட்டதாக நினைக்க ஆரம்பித்தாலே முதுமை கூடி விடுமாம். நான் என் வயது பற்றி நினைப்பதே இல்லை!”

“உங்கள் பதவிக் காலத்தில், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது காக்கிச் சட்டைக்கு ‘குட்பை’ சொல்லிவிட்டுப் போய் விடலாமா?” என்று நொந்து கொள்ளும்படி ஆனதுண்டா?”

“ம்.. இரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை வேலையை ராஜினாமா பண்ணிவிட்டு, ஊரில் விவசாயம் பார்க்கப் போய் விடலாமா, கறுப்பு கோட்டை மாட்டிக் கொண்டு வக்கீல் தொழிலுக்குப் போய் விடலாமா என்று தோன்றும். அப்புறம் தனக்குத்தானே மனம் சமாதானமாகிப் போகும். ஆன்மீக நாட்டம் அதிகமான பின், அது போன்ற எண்ணம் வரவில்லை.”

“உங்களுக்குப் பதவி நீடிப்புத் தரப்படாதது ஏன்?”

“நான் யாரிடமும் போய் எதையும் கேட்டது கிடையாது. எனக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதுதான் என் பாலிசி. என் சீனியருக்கு பதவி நீட்டிப்புத் தரப்பட்டதால், என் பதவி உயர்வு தள்ளிப் போனது. எனக்கு அதைக் காரணம் காட்டி, எக்ஸ்டென்ஷன் தருவதாய்க் கூறப்பட்ட போதிலும், என் ஜூனியரின் பதவி உயர்வுக்கு நான் தடையாய் இருக்க விரும்பவில்லை!”

“சிறப்புப் புலனாய்வுக் குழு தலைமையை ஏற்றுக் கொண்டதனால் இன்னமும் உங்களுக்கு லைஃப் ரிஸ்க்தானே?”

“பதவிக்காலத்தில் தவறு செய்திருந்தால்

தினமும் செத்து செத்துப் பிழைக்க வேண்டியிருக்கும். என் மனச்சாட்சியோ ரொம்ப ஸினியர். கொடுக்கப்பட்ட பொறுப்பின் காரணமாக வாழ்க்கைக்கு ரிஸ்க் எனில் என்ன செய்வது? என்றைக்கோ ஒரு நாள் போகிற உயிர், நாட்டுக்காகப் போகிறதே என்று பெருமைபட்டுக் கொள்ள வேண்டியதுதான்!"

"வீரப்பனைப் பிடிக்க அரசு உங்கள் உதவியை நாடியதாமே! உண்மையா?"






"சவான், இந்திரஜித் குப்தா ஆகியோர் உள்துறை அமைச்சர்களாக இருந்தபோது மத்திய அரசு வீரப்பன் விஷயமாக என்னை அணுகியது உண்மைதான். நான் இரண்டு விதமான திட்டங்களை அரசாங்கத்துக்கு சமர்பித்தேன். சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே இந்தப் பணியில் ஈடுபட்டு, வெற்றி காண வேண்டும் என்பதே என் விருப்பம். அப்படியெனில், எப்படிச் செயல்பட வேண்டும் என்று விளக்குவது முதல் திட்டம். அவர்களால் முடியாத போது, மத்திய அரசு செய்ய வேண்டியது என்ன என்பதுதான் இரண்டாவது திட்டம். கர்நாடக விஞ்ஞானிகளை வீரப்பன் கடத்திச் சென்ற சமயம், கர்நாடக முதல்வர் பட்டேல் மத்திய அரசை அணுகியபோது, அவர்கள் என்னை மறுபடி கலந்து ஆலோசித்தனர். ஆனால், கடத்திச் சென்றவர்களை வீரப்பன் விடுவித்து விடவே விஷயம் மறுபடி கிடப்பில் போடப்பட்டு விட்டது."

"வீரப்பனைப் பிடிப்பது சாத்தியம் என நீங்கள் கருதுகிறீர்களா?"

"முடியாது என்று எதுவுமே இல்லை. சிலவற்றை சீக்கிரமே, எளிதாகச் செய்து விடலாம். இன்னும் சில பணிகளை முடிக்க நாள் பிடிக்கும். கூடுதலான விடாமுயற்சி தேவைப்படும். ஆனால் ஒரு விஷயம் மிக முக்கியம். இந்த ஆபரேஷனுக்கு திறமை, திட்டமிடுதல் எல்லாம் எத்தனை முக்கியமோ, அதே அளவு அந்தப் பகுதிவாழ் மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்!"

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**



திருக்குறளுக்கு ஓர் அரசியல் உரை!



“இந்தப் பிறவியிலேயே கற்க வேண்டியவற்றைக் கற்று, மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் மறுபடியும் இந்த உலகில் பிறவாத நிலையை அடைவார்கள்! – என்கிற பொருள் தரும் திருக்குறளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று 'குறளோவியம்' படைத்தவரை அப்பாவித்தனமாகத்தான் நாம் கேட்டோம்.

குளிர் கண்ணாடியையும் தாண்டி, அவர் கண்களிலிருந்து கிளம்பிய கோப அலைகள் நம்மைத் தாக்கின. “விளக்கம் கேட்கிறீர்களா? வில்லங்கமாகக் கேட்கிறீர்களா?'' என்றார் தமிழக முதல்வர்.

“பரிமேலழகர் மாதிரி கொஞ்சம் கரடுமுரடாகவும் இல்லாமல், சுஜாதாவின் விளக்கம் மாதிரி அலங்காரமே இல்லாத தடாலடியாகவும் இல்லாமல், உங்கள் அழகு தமிழில் இந்தக் குறளின் முழு விளக்கத்தையும் கேட்க சின்ன ஆசை!'' என்றோம்.

“சின்ன ஆசையா? சிறுமதியாளர்களின் ஆசையிது. சிறியவனாக நேற்று வரை கருதப்பட்ட ஒருவன் சிங்காதனத்தில் சிராக அமர்ந்து விட்டானே என்ற சினத்தில் எழுந்த நயவஞ்சக ஆசை!''

என்ன இது தேன் தமிழ் விளக்கத்தை எதிர்பார்த்தால் இப்படி தேள் கொட்டலாய்...!

பெரியவரை வெறும் கையோடு பார்க்கப் போகலாமா? கால் கிலோ பாக்குத் தூளுடன் சத்யமூர்த்தி பவனில் நுழைந்தோம். அதே குறளைக் கூறி விளக்கம் கேட்டோம்.





"உண்மையைப் புரிஞ்சுக்க!" என்றார், மூப்பனார்.

"அதேதாங்க; 'மெய்யுணர்தல்' அதிகாரத்திலேதான் அந்தக் குறள் வருது."

நெற்றியை நீவிவிட்டுக் கொண்டதில் அவருக்கு ஏதோ புலப்பட்டிருக்க வேண்டும். முகம் சீரியஸானது (மேலும்!).

"நான் என்ன சொல்லணும்னு நீ எதிர்பார்க்கறே?" என்றார்.

"நீங்க நினைக்கிறதைச் சொல்லலாம். தப்பில்லை!" என்றோம்.

"நான் எதுவும் நினைக்கலையே!"

"ஏதாவது நினையுங்க. அதைச் சொல்லுங்க."

"நீ சொன்னதுக்காக நான் நினைக்க முடியுமா? அப்புறம் பார்க்கலாம்..." என்று பாக்கை மென்றபடி வேறு பக்கம்



பார்க்கத் தொடங்கினார்.

சமீப காலமாக சிரிப்பை மொத்தமாகத் தொலைத்து விட்டிருக்கும் அவரிடமும் அந்தக் குறளுக்கான விளக்கத்தை ஏன்தான் கேட்டுத் தொலைத்தோமோ!

"கவிதை என்றால் எனக்கு உயிர்" என்றபடி தமது கலெக்ஷனில் இருந்த திருக்குறளின் இந்தி வடிவ நூலைப் புரட்டினார் வாஜ்பாயி.

திடீரென்று அவர் முகம் கறுத்தது. தடுமாறினார். தாமரை போன்ற அவர் முகத்தை ஏதோ இரண்டு இலைச் சருகுகள் போல மாற்றி விட்டோமே என்று நம்மையே நொந்து கொண்டு வாபஸ் ஆனோம்.

அடுத்து நம் கால்கள் நின்றது பையனூர் பங்களாவில்.

வரவேற்ற ஜெயலலிதாவிடம், "போயஸ் தோட்டத்திலாவது வீட்டுக்குள்ளேயே உங்களுக்கு பிரம்மாண்டமான நூலகம் உண்டு. இங்கே பாவம் ஏதாவது புத்தகத்தை ரெஃபர் செய்து என் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கக் கூட உங்களுக்கு வழியில்லை" என்று நாம் சொன்னதும் சிலிர்த்தெழுந்தார்.

"கான்வென்டில் படித்த என்னால் ரெஃபரன்ஸ் இல்லாமல் உங்கள் சந்தேகத்துக்கு விளக்கம் அளிக்க முடியாதா என்ன?"

தயக்கத்துடன்தான் சொல்ல ஆரம்பித்தோம்... 'கற்றீண்டு'ன்னு ஒரு குறள் தொடங்குது..." முடிப்பதற்கு முன்பே படபடவென்று படு உற்சாகத்துடன் பதில் வந்தது புரட்சித் தலைவியிடமிருந்து.

"தெரியுமே. மெய்யுணர்தல் அதிகாரத்தில், துறவறவியலில் இடம்பெறும் குறள் இது!" என்றவர் அந்தக் குறளை முழுவதுமாகக் கூறிவிட்டு அதன் பொழிப்புரையையும் பொழிந்தார்.

மூச்சடைத்தது நமக்கு. "இந்த அளவுக்கு திருக்குறள் உங்களுக்கு அத்துப்படியா?"

"லெட் மீ நாட் மேக் டால் க்ளெய்ம்ஸ். ஆனா இந்தக் குறள் எனக்கு லட்டு; அமிர்தம்; தேன்!" என்றார்.

"ஏன்? ஏன்?"

"திருக்குறளில் இடம்பெறும் 356-வது குறள் இது! எனக்குப் பிடிக்காமல் இருக்குமா?" என்றார் புரட்சித் தலைவி.

கற்பனை : குல்லூ



<u>காதல் டைரிக் குறிப்பு :</u>

என் துணை நீதானென்று
முன்னமே தெரிந்திருந்தால்
எத்தனை இரவுகள் நிம்மதியாய்
உறங்கியிருப்பேன்...

சோமசுந்தரம் ஹாலுக்கு வந்து சோபாவில் அமர்ந்ததும், அம்மாவும், தங்கையும் மௌனமானார்கள்.

அரவிந்த் அவர் எதிரில் வந்து நின்றான். தயக்கத்தில் சில விநாடிகள் கரைந்தன. அவன் அங்கே நிற்பதைப் பொருட்படுத்தாமல் அவர் செய்தித்தாளை எடுத்து உதறி விரித்துக் கொண்டார். அந்த உதறலில்

நான் உன்னை சுவாசிக்கிறேன் 20

பட்டுக்கோட்டை பிரபாகர்

'உன்னை யார் இங்கே வரச் சொன்னது?' இருந்தது.

"அப்பா!" என்றான் அமைதியாக.

பேப்பரிலிருந்து நிமிராமல், "என்ன?" என்றார்.

"உங்களுக்கு இன்னும் என் மேல கோபம் தீரலைன்னு புரியுதுப்பா. பரவால்லை. இப்ப நான் உங்களோட சண்டை போடறதுக்கு வரலை. நாளைன்னைக்கு பிரஸ் திறப்பு விழா. நீங்களும், அம்மாவும் வந்து ஆசீர்வாதம் செய்யணும்."

அழைப்பிதழை டீப்பாய் மேல் மெதுவாக வைத்தான்.

விருட்டென்று பேப்பரை மடக்கி வீசிய சோமசுந்தரம், "எந்த மூஞ்சை வெச்சிக்கிட்டுடா என்னை வந்து கூப்புடறே? முடி வெடுக்கறப்போ எங்க ஞாபகம் வரல்லையா உனக்கு? அதைக் கேட்டதுக்கு ரோஷம் பொத்துக்கிட்டு எல்லாரையும் அலட்சியப் படுத்திட்டு நீ பாட்டுக்கு வீட்டை விட்டுப் போனே! உன்னைப் பெத்தவனுக்கு உன்னை விட நாலு மடங்கு ரோஷம் இருக்காதா? உன்னைப் பார்த்தாலே ஆத்திரம் வருது. மொதல்ல இங்கேர்ந்து போயிடு, சொல்லிட்டேன்!" என்றார் படபடப்பாக.

"என்னங்க, அவன்..." என்று பதைத்த மனைவியை முறைத்து விழிகளால் அதட்டி, "நீ வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்கியா?" என்றார்.

ஜிவ்வென்று பரவிய கோபத்தை சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்ட அரவிந்த், "என்னால பதில் சொல்ல முடியும்ப்பா. மேல மேல உங்க மனசை வெறுப்பாக்க விரும்பலை. என்னைப் பார்த்தாலே ஆத்திரம் வருதுங்கறப்ப நான் என்ன சமாதானம் சொன்னாலும் கோபப்படத்தான் செய்வீங்க. போயிடறேன். அம்மாகிட்ட ரெண்டு வார்த்தை பேசலாமில்லையா?" என் றான்.

அப்பா மீண்டும் பேப்பரை விரித்துக் கொண்டார்.

அரவிந்த் அம்மாவிடம் வந்தான். கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"அம்மா, அப்பாவோட கோபத்தில நியாயம் இருக்குன்னு எனக்குத் தெரியுதும்மா. அதே சமயம் நான் செஞ்சதும் சரின்னு படுதும்மா. எது எப்படியிருந்தாலும் ஆரம்பிக்கப் போறது என்னோட லைஃப் ப்ராஜெக்ட்ம்மா. ரொம்ப வருஷத்துக் கனவு. பொறுமையா எடுத்துச் சொல்லி நீங்க ரெண்டு பேரும் அவசியம் வரணும்மா. அண்ணனுக்கு போன்ல சொன்னேன். அக்காவை நேர்ல பார்த்துச் சொல்லப் போறேன். நான் என்னம்மா தப்புப் பண்ணிட்டேன்? முன்னேறணும்னு ஆசைப்படறது குத்தமா? தொழில் ஆரம்பிக்கிறதுக்குக் குடும்பத்தில ஒத்துழைப்பு இல்லாததால சொந்தமா முயற்சில இறங்கினேன். அதானேம்மா நான் செஞ்சது? என்னமோ கொலைக் குத்தம் செஞ்சிட்ட மாதிரி ஏம்மா இவ்வளவு தூரம் அவர் வெறுக்கணும்?"

மேலே பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொள்ள, கர்சீப் எடுத்து கண்களை ஒற்றிக் கொண்ட அரவிந்த், "நான் வர்றேன்மா" என்றான். நிர்மலாவைப் பார்த்து தலையசைத்து விட்டு வேகமாக வாசலுக்கு நடந்தான்.

கைகளைப் பிசைந்தபடி நின்றிருந்த அம்மா மெதுவாக அப்பாவிடம் வந்து, "இதோ பாருங்க... என்ன இருந்தாலும்..."

"இங்க பாரு, எனக்கு யாரும் நியாயம் சொல்ல வேண்டியதில்லை! காலைல வாக்கிங் போனப்போ வக்கீல் சீதாராமன் கேக்கறான். 'என்னப்பா உனக்கும் உன் பையனுக்கும் பிரச்னையாமே. வீட்டை விட்டு கோவிச்சிக்கிட்டுப் போயிட்டானாமே...

என்ன தகராறு?'ன்னு கேக்கறான். எனக்கு உடம்பு பூரா திகுதிகுன்னு எரிஞ்சுது. நம்ம பரம்பரையிலேயே இந்த மாதிரி யாரும் செஞ்சதில்லை. இவ்வளவு பெரிய அவமானத்தைத் தேடித் தந்துட்டு 'நான் என்னம்மா தப்பு செஞ்சேன்'னு டிராமா பண்றான். நீயும் கண்கலங்கிட்டு நிக்கிறே!"

"இல்லைங்க. அவன் பாவம், மனசு நொந்து போயி..."

"அவன் மனசு நொந்து போனதுதான் தெரியுதா? என் மனசு நொந்து போனது உனக்குத் தெரியலையா? எங்க ஆடிட்டருக்கு பத்திரிகை அனுப்பி வெச்சிருக்கான். அவரு 'என்ன சார் பையன் தொழில்



"காலம் ரொம்பவும் கெட்டுப் போச்சு!"

"எதவச்சுச் சொல்றீங்க?"

" 'ஏண்டா காலேஜுக்குப் போகாம பொம்பளைப் பிள்ளைக பின்னாடி சுத்தறே?'ன்னு பையன்கிட்ட கேட்டா, 'தீவிரவாதி ஆயிஷா'வைத் தேடறேன்னு பதில் சொல்றானே!"

– பாளை. பாலு

ஆரம்பிக்கிற மேட்டரைச் சொல்லவேயில்லையே?'ன்னு கேக்கறாரு. எனக்கே தெரியாது சார்ன்னு எப்படிச் சொல்றது? கொஞ்சம் பொறுமையா இருடான்னு சொன்னா கேக்காம அநியாய வட்டிக்குப் பணம் வாங்கித் தொழில் ஆரம்பிக்கிறானே. அப்புறம் என் வார்த்தைக்கு என்ன மதிப்பு இருக்கு? என்னோட அனுமதி தேவையில்லை, ஆனா ஆசிர்வாதம் மட்டும் வேணுமோ? போடி, வேலையைப் பாரு! வந்துட்டா அந்த துரைக்கு சிபாரிசு பண்ண!" சோமசுந்தரம் பேப்பரை மடக்கிப் போட்டுவிட்டு எழுந்து அறைக்குள் செல்ல, தாயும் மகளும் பார்த்துக் கொண்டு இயலாமையில் தவித்தார்கள்.

"கொஞ்சம் உக்காருங்க சார். உள்ளே அசிஸ்டெண்ட் மானேஜர்கிட்ட ஏதோ முக்கியமா பேசிட்டிருக்காங்க. அவர் வந்ததும் போய்ச் சொல்றேன்" என்றான் பியூன்.

யாமினியின் அறைக்கு வெளியே போடப்பட்டிருந்த வசதியான சோபாவில் மெதுவாக அமர்ந்தான் அரவிந்த்.

அன்றைக்கு என்னைத் திமிர் பிடித்துப் பேசுவதாக கோபமாகச் சொல்லி விட்டுப் போனவன் இன்றைக்கு என்ன மாதிரி என்னை நடத்துவான் என்று சொல்ல முடியாது.

தகவல் சொல்லும் பியூனிடம் என்னைச் சந்திக்க விருப்பமில்லை என்று கூடச் சொல்லியனுப்பலாம்.

எந்த விளக்கமும் வைத்துக் கொள்ளக் கூடாது. உள்ளே நுழைந்ததும் பத்திரிகையைத் தர வேண்டியது.

'அவசியம் வாக்கா!' இரண்டே வார்த்தைகள் சொல்லிவிட்டு வேகமாக வந்து விட வேண்டியது.

அப்படியே இவன் திறப்பு விழாவுக்கு வந்து விட்டாலும் மனதார வாழ்த்தவா போகிறாள்? 'எல்லோரையும் எதிர்த்துக் கொண்டு ஆரம்பிக்கிற இந்தத் தொழில் உருப்படக் கூடாது' என்று உள்ளத்திற்குள் வேண்டிக் கொண்டு உதட்டளவில் 'ஆல் தி பெஸ்ட்' சொல்வாள்.

தெரியாதா இவளைப் பற்றி? தம்பி தன்னை விட முன்னேறிவிடக் கூடாது என்று நினைப்பவள்தானே இவள்! போலியாய் அக்கறை காட்டி முடிந்தபோதெல்லாம் அலட்சியப்படுத்துகிறவள்தானே இவள்!

இந்த சந்துரு வற்புறுத்தாவிட்டால் இவளை கண்டிப்பாக அழைக்க மாட்டேன். யாருக்கு வேண்டும் போலித்தனமான உறவு?

யாமினியின் அறையிலிருந்து உதவி மானேஜர் வெளியேறியதும், பியூன் உள்ளே சென்று இவன் வருகையைச் சொல்லி திரும்பி வந்து, "போங்க சார்" என்ற போது சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

மெதுவாக யாமினியின் அறைக்குள் வந்து நின்றான் அரவிந்த்.

"வாடா! உக்காரு!" என்றாள் யாமினி. குரலில் உற்சாகமோ, உதடுகளில் புன்னகையோ இல்லை. பார்வை அவன் விரல்

களில் ஆடும் பென்சிலின் மேல் இருந்தது.

அமைதியாக இன்விடேஷனை நீட்டினான்.

"என்ன?" என்றாள் எதுவும் தெரியாதவள் போல.

"இன்விடேஷன். ஆப்செட் பிரஸ் நாளைன்னைக்குத் திறப்பு விழா. குடும்பத்தோட வா. அத்தானுக்கு போன் பண்ணிச் சொல்லிடறேன். நான் வரட்டுமா?"

"இரு. ஒரு நிமிஷம் உக்காரு."

"எனக்கு நிறைய வேலை இருக்குக்கா."

"நீ இப்போ பிசினெஸ்மேன். ரொம்ப பிஸிதான். பரவால்லை. ரெண்டு நிமிஷம் உக்காரு."

அமைதியாக உட்கார்ந்தான் அரவிந்த்.

யாமினி அழைப்பிதழை வரிவரியாகப் படித்து விட்டு, "இந்த லால்சந்த் ஃபைனான்ஸ் பண்றதாலே அவரையே குத்துவிளக்கேத்தச் சொல்லிட்டியா?" என்றாள்.

"ஃபைனான்ஸ் பண்றதாலே இல்லை! என் மேல நம்பிக்கை வெச்சிருக்கிற நபர்ங்கிறதால!" என்றான்.

"எப்படி அக்ரிமெண்ட் போட்ருக்கே? அவரும் இதில பார்ட்னரா? இல்லை ஃபைனான்ஸ் மட்டும் பண்றாரா?"

"ஃபைனான்ஸ் மட்டும்தான் பண்றாரு."

"எவ்வளவு வட்டி?"

"இதே கேள்வியை அன்னிக்கு வீட்ல ஆவேசமா கேட்டே. இப்போ இங்கே அமைதியாக் கேக்கறே. இது என் சொந்த விஷயம். எல்லா டீட்டெய்ல்சும் உன்கிட்ட சொல்லணும்னு நீ எதிர்பார்க்கறது சரியில்லை. ஃபங்ஷனுக்குக் கூப்பிட்டிருக்கேன். இஷ்டம் இருந்தா வா. நான் வர்றேன்" என்று எழுந்து கொண்டான் அரவிந்த்.

"ஏன் இப்படி உடனே உணர்ச்சிவசப்படறே அரவிந்த்? எங்களுக்கெல்லாம் உன் மேல அக்கறையே இல்லைன்னு நீயா நினைச்சுக்கிட்டு ஏன் வெறுப்பாப் பேசறே? சரி, புறப்படு. நிதானமா இன்னொரு நாள் பேசலாம். அப்புறம்.... ஓபனிங்குக்கு வரணும்னு எனக்கு இஷ்டம் இருக்குப்பா. ஆனா வர மாட்டேன். எதிர்பார்க்காதே."

"ஏன்?"

"அப்பா போன் செஞ்சாரு. நீ வீட்டுக்குப் போய்க் கூப்பிட்டதைப் பத்திச் சொன்னாரு. ரொம்ப வேகமாப் பேசினாரு. அவரைக் கொஞ்சம் கூட மதிக்காம நீ ஆரம்பிக்கிறதால நம்ம குடும்பத்திலேர்ந்து யாரும் கலந்துக்கக் கூடாதுன்னு உத்தரவு மாதிரி



"தார்மிகப் பொறுப்பு ஏற்று நான் கொடுத்த ராஜினாமா கடிதத்தை கட்சி மேலிடத்துல வாங்க மறுத்துட்டாங்க!"

"ஏனாம்?"

"அதெல்லாம் பதவியில இருக்கறவங்கதான் செய்யணுமாம்!"

– சக்தி. சரவணன்

சொன்னாரு. இளங்கோவுக்கும் போன் செஞ்சிருக்கறோம். அவனோ இல்லை நானோ இதில கலந்துக்கிட்டா அப்புறம் வீட்டுக்கே வராதீங்கன்னு ஆத்திரமா சொல்லிட்டு வெச்சிட்டாரு. இது ரொம்ப அதிகப்படியான கோபம்தான். புரியுது. ஆனா யாராச்சும் சொன்னா கேட்டுக்கற டைப் இல்லையே நம்ம அப்பா. நல்ல மனசு இருக்கு. கூடவே அநியாயத்துக்குக் கோபமும் இருக்கு. அவர் வார்த்தையை மீறி நான் எப்படி...."

"வேணாம். யாரும் வர வேணாம். உங்க யாரோட சப்போர்ட்டும் இல்லாமத்தான் நான் தொழில் ஆரம்பிக்கிறேன். நீங்க எல்லாம் வரலைன்னா நான் ஒண்ணும் அப்செட் ஆகி உக்காந்துட மாட்டேன்."

"பார்த்தியா... மறுபடி டென்ஷனாகறே. நான் என் சூழ்நிலையைச் சொல்றேன். புரிஞ்சுக்கோ. ஒரு நிமிஷம் அரவிந்த்."

யாமினி தன் கைப்பையைத் திறந்து செக்-புக் எடுத்து எழுதி, கிழித்து அவனிடம் நீட்டினாள்.

"என்ன?"

"பத்தாயிரம் ரூபாய்க்கு செக் போட்டிருக்கேன். உன் புது பிசினெஸ்ல இதை வரவு வெச்சிக்கோ. என்னோட சின்ன அன்பளிப்பு."

செக்கைக் கையில் வாங்காமல், "ரொம்ப

தேங்ஸ். நீயே வெச்சுக்கோ. வீடு கட்டிக்கிட்டிருக்கே. ஏகப்பட்ட செலவு இருக்கும். எதுக்கு இப்படி அநாவசியத்துக்குச் செலவு பண்றே? வர்றேன்க்கா'' என்று விட்டு அவள் கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பார்க்காமல் நடந்து கதவு திறந்து வெளியே வந்தான் அரவிந்த்.

மனச்சோர்வுடன் தன் பிரஸ் அலுவலக அறைக்கு வந்து தளர்வாக நாற்காலியில் அமர்ந்தான் அரவிந்த்.

"சார், நீங்க வெளில போயிருந்தப்போ பிருந்தான்னு ஒரு மேடம் வந்தாங்க'' என்றான் சீனிவாசன்.

சட்டென்று மனத்திற்குள் வெளிச்சம் பாய்ந்தது.

"எப்போ?" என்றான் ஆர்வமாக.

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி சார். பத்து நிமிஷம் வெய்ட் பண்ணாங்க. அப்புறம் ஒரு லெட்டர் எழுதிக் கொடுத்துட்டுப் போனாங்க."

நீட்டப்பட்டக் கடிதத்தை ஆர்வத்தைக் கட்டுப்படுத்தி இயல்பாக வாங்கிக் கொண்டான்.

அவன் விலகியதும் பிரித்துப் படித்தான்.

'ஹலோ அரவிந்த்,

ஒரு மகிழ்ச்சியான செய்தி. எனக்கு வேலை கிடைத்து விட்டது. அண்ணா சாலையில் உள்ள ஹிக்கின்பாதம்ஸ் புத்தகக் கடையில் சூபர்வைசர் வேலை. நேற்று ஜாய்ன் செய்தேன். என்னைச் சுற்றி ஆயிரக் கணக்கில் நான் மிகவும் விரும்பும் புத்தகங்கள்!

இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு உங்கள் பிரஸ் துவக்கப் பணிகளைப் பற்றியும் விசாரித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். நீங்கள் இல்லை.

போன் நம்பர் கீழே கொடுத்துள்ளேன். ஓய்வாக இருக்கும் போது தொடர்பு கொள்ளுங்கள்.

தங்கள்,

பிருந்தா.

கடிதம் படித்ததும் மனம் காரணமின்றி குதூகலித்தது. பிருந்தா மேல் சற்றே படியத் துவங்கியிருந்த வெறுப்பு எங்கே போனதென்றே தெரியவில்லை.

உடனே பார்வை அவள் எழுதிய போன் நம்பரில் படிந்தது. கை ரிசீவரை எடுத்தது. உதடுகள், "மிஸ். பிருந்தா ப்ளீஸ்..." என்றன.

இடைவெளிக்குப் பிறகு, ''பிருந்தா பேசறேன்.''

"ஹலோ பிருந்தா, அரவிந்த் பேசறேன். கங்கிராஜுலேஷன்ஸ்.''

"தேங்க் யூ."

''வேலை கிடைச்சதுக்கு பார்ட்டி கிடையாதா?''

"ஷ்யூர். என்னைக்கு, எங்கேன்னு நீங்க சொல்லுங்க, நான் ரெடி.''

"இன்னைக்கே பிருந்தா. மனசு விட்டு நிறையப் பேசணும்."

"ஈவினிங் ஆறு மணிக்கு எனக்கு வேலை முடியும்."

"கடை வாசல்ல வெய்ட் செஞ்சா, நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்.''

"ஓகே.''

அரவிந்தின் விரல்கள் ரிசீவரை வைத்து விட்டு மேஜை மேல் உற்சாகமாகத் தாளமிட... 'சரியான முட்டாள் நீ!' என்றது இன்னொரு மனம்!

(தொடரும்)



''என் நேரமே சரியில்லை!''

''என்ன விஷயம் தலைவரே?''

''நேத்து ஒரு ஜோசியர்கிட்ட என் ஜாதகத்த காமிச்சேன்.. கட்டிப் பிடிச்சி அழ ஆரம்பிச்சுட்டாரு!''

– அம்பை தேவா

''உங்க படத்துக்கு நிச்சயம் ஆஸ்கார் அவார்டு தரணும்னு எங்க பத்திரிகையில் விமர்சனம் எழுதியிருக்கோம்!''

''மெய்சிலிர்க்குதுங்க! அரைப் பக்க விளம்பரத்துக்கு இவ்வளவு நன்றி உணர்ச்சியா?''

– உ. ராஜாஜி







1998 மே 24
வெகுதான்ய வைகாசி 10
மலர் : 56
இதழ் : 43

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



போக்ரான் வெற்றி பிரதமருக்குத் தோல்வி!


ஜெயலலிதாவால் 'ரிமோட் கன்ட்ரோல்' செய்யப்படும் ஆட்சி என்ற அவப் பெயர் நாளுக்கு நாள் அதிகமாகி வர, பார்த்தார் பிரதமர் வாஜ்பேய்! எல்லோருடைய வாயையும் தாற்காலிகமாய் அடைத்துப் போடுகிற மாதிரி, தேசிய செயல் திட்டத்தில் இடம்பெறாத ஒரு பிரமிப்பான காரியத்தைச் செய்ய உத்தரவிட்டார்!

போக்ரான் பாலைவனப் பகுதியில் இருமுறை அணுகுண்டுகள் வெடித்துப் பரிசோதனை 'வெற்றிகரமாக' நிகழ்த்தப்பட்டது. ஜெயலலிதாவும் கருணாநிதியும் இன்னும் நாட்டின் அத்தனை அரசியல்வாதிகளும் ஒருசேர இந்த வீர தீர பராக்கிரமத்தைப் பாராட்டி மகிழ்கிறார்கள்!

உண்மையில் இந்தப் பரிசோதனை முயற்சி, பி.ஜே.பி.யின் பராக்கிரமத்தையும் உணர்த்தவில்லை; நாட்டின் பலத்தையும் நிரூபிக்கவில்லை.

இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்பே, இந்திரா காந்தி தமது 'பராக்கிரமத்தை' உணர்த்த இதே போக்ரானில் பரிசோதனை நடத்திக் காட்டினார். 'இந்தியாவிடம் அணுகுண்டுகள் தயாரிக்கும் ஆற்றல் உண்டு என்று நிரூபிக்கவே இம்முயற்சி...' என்று அன்று அவர் கூறியதே இன்றும் பேசப்படுகிறது.

நிரூபித்ததையே மீண்டும் நிரூபிக்க வேண்டிய அவசியம் என்ன..? என்று கேட்டால், அண்டை நாடுகள் அணு ஆயுதங்களை ஆயத்தம் செய்து வைத்துக் கொண்டு அச்சுறுத்துகின்றன. அல்லது அவற்றைத் தயாரிக்கப் போவதாக மிரட்டிக் கொண்டேயிருக்கின்றன. அவற்றுக்கு இணையாக நாம் இருப்பதை அறிவுறுத்தத்தான் இந்தப் பரிசோதனை என்று கூறப்படுகிறது! ஆனால் இந்த வாதம்



முற்றிலும் தவறானது. இந்தப் பரிசோதனையினால் அண்டை நாடுகளிடையே அணு ஆயுதப் போட்டி வளரத்தான் செய்யுமே தவிர, குறையாது. அந்த அளவுக்கு, அணு குண்டு யுத்தம் வெடிக்கும் ஆபத்தும் அதிகரிக்கிறது.

எனவே, 'இந்திய மக்களுக்கொரு பாதுகாப்புணர்வை ஏற்படுத்தவே இதைச் செய்தோம்- அண்டை நாடுகளை அச்சுறுத்துவதற்கு அல்ல' என்ற டெல்லியின் அவசர அறிக்கையும் அர்த்தமற்றதாகிவிடுகிறது.

'இப்படிப்பட்ட ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் இருந்தும், உலக நலன் கருதியும் அமைதி கருதியும் அந்தக் காரியத்தில் நாங்கள் இறங்கவில்லை...' என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லக்கூடிய தார்மிகப் பெருமையை இப்போது இழந்துவிட்டோம். அந்தப் பெருமை நமக்கு அளித்திருக்கக் கூடிய பலத்தைக் காட்டிலும் எந்த ஆயுதமும் பாதுகாப்புணர்வைத் தரமுடியாது!


சிறு சிறு நாடுகளிலெல்லாம் பயங்கரவாதிகளும் சமூக விரோதிகளும் குடிசைத் தொழில் போல் அணுகுண்டு உற்பத்தி செய்து வருகின்றனர். ஆகையால், விஞ்ஞான ரீதியாகவும் இதையொரு சாதனை என நாம் பெருமைப்பட்டுக்கொள்வதற்கில்லை.

இதனால் நமது விஞ்ஞானிகளைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதக் கூடாது. அவர்களின் உழைப்பும் ஆற்றலும் வேறு ஆக்கபூர்வமான திசைகளில் திரும்புவதற்கு அரசின் கொள்கைகள்தான் வழிசெய்ய வேண்டும்.

அணுமின் நிலையக் கழிவுகளை அப்புறப்படுத்துவதே மாபெரும் பிரச்னையாக இருக்கிறது. அப்படியிருக்க, அணு ஆயுத உற்பத்தியும், அவற்றை வெடித்துச் சோதிப்பதும் என்ன மாதிரியான பயங்கரங்களை விளைவிக்கும் என்று கற்பனைகூட செய்ய முடியாது.

பரிசோதனைக் கட்டத்திலேயே போக்ரான் பகுதியில் வீடுகள் சேதமடைந்துள்ளன. பிரதமர் நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டுள்ளார். இருபத்துநான்கு வருடங்களுக்கு முன் நிகழ்த்திய முந்தைய பரிசோதனைக்குப் பிறகு இப்பகுதியில் போலியோ நோய் அதிகமாகி விட்டதாக மக்கள் அஞ்சுகிறார்கள். உண்மையில் அது போலியோ அல்ல; அணுக்கதிர் வீச்சின் விளைவு. பரிசோதனை நிலையிலேயே அச்சுறுத்தும் விளைவுகள் உடைய அணு ஆயுதங்களை உருவாக்கிச் சேர்த்து வைத்துக் கொள்வதென்பது தற்கொலை முயற்சி.

நமக்கு நாமே தேடிக் கொள்ளும் அபாயங்கள் ஒருபுறமென்றால், இச் சம்பவத்தைத் தொடர்ந்து



அயல்நாடுகள் நம் மீது திணிக்கப்போகும் பொருளாதாரத் தடைகள் வேறு அச்சுறுத்துகின்றன. ஆஸ்திரேலியாவும் நியூஜிலாந்தும் தங்கள் இந்திய தூதர்களைப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப அழைத்து விட்டன. அமெரிக்கா, தடைகளை அறிவித்து விட்டது. ஜெர்மனி வழங்கவிருந்த 300 மில்லியன் உதவித் தொகையை நிறுத்தி வைத்து விட்டது! இவற்றின் எதிரொலியாக மும்பை பங்குச் சந்தையில் உடனடி வீழ்ச்சி!

இந்தியா இன்று இருக்கிற நிலையில் பொருளாதாரத் தடைகளும் பங்கு மார்க்கெட் தள்ளாட்டமும் பெரும் சோதனைகளாக முடியும்!

'அணு ஆயுத உற்பத்தியில் தன்னிறைவு பெற்றால் பிற ஆயுதங்கள் வாங்க வேண்டிய அவசியம் இராது; ராணுவச் செலவு குறையும்' என்றும் ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. இதுவும் சரியல்ல. அணு ஆயுதப் பிரயோகம் என்பது எப்போதும் கடைசி பட்ச நடவடிக்கையாகத்தான் இருக்கும் என்பதால் பிற ஆயுதங்களும் வாங்கித்தான் ஆக வேண்டும். செலவு அதிகரிக்குமேயொழிய குறையாது.

துரதிர்ஷ்டவசமாக, இந்தப் பரிசோதனை, வாபஸ் பெறக் கூடிய நடவடிக்கை அல்ல. ஆனால், உலக நாடுகளின் ஒத்துழைப்பை நாம் மீண்டும் பெற வேண்டுமாயின் CTBT என்ற Comprehensive Test Ban Treatyயில் கையெழுத்திடுவதே நல்லது. இந்த ஒப்பந்ததாரர்கள் எந்த வகையான அணுகுண்டு ஆராய்ச்சியிலும் ஈடுபட முடியாது. ஏற்கெனவே அணுகுண்டு உற்பத்தி செய்து சேர்த்து வைத்துள்ள முன்னேறிய நாடுகள் இதில் கையொப்பமிட்டு விட்டன. அவை அணு ஆயுதங்கள் பெற்று, ஒரு பாதுகாப்பான நிலையில் இருந்து கொண்டு, நம்மை மட்டும் நிராயுதபாணிகளாய்த் திகழ கட்டாயப்படுத்துகின்றன; அதனால் நாம் CTBTயில் கையொப்பம் இடக் கூடாது என்பது இந்திய அரசின் நிலையாக இருந்து வந்தது. இனி அந்த வாதம் செல்லுபடியாகாத அளவுக்கு நமது பரிசோதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. எனவே சி.டி.பி.டி. ஒப்பந்தத்தை உடனடியாக ஏற்பதே அறிவுடைமை. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் இதுவே வழி.

அஹிம்சையே உருவான, கருணையே வடிவான புத்தருக்குரிய பௌர்ணமி தினத்தில் ஒரு கொடூரம் அரங்கேறியுள்ளதை கவியுள்ளம் படைத்த பிரதமர் நிச்சயம் உணர்ந்திருப்பார். அவரது ஆத்ம சக்தி செயல்படட்டும்.

குடி குடியைக் கெடுக்கும்!



கோயம்பேடு மார்க்கெட்டிலிருந்து பூ வாங்கிக் கொண்டு போய் சில்லறை வியாபாரம் செய்பவர் நாகராணி. ஒருநாளைக்குச் சராசரியாகப் பத்து பான் பராக் பாக்கெட்டுகளாவது வாங்கிப் போடுவார். வாயில் சதா அதைக் குதப்பிக் கொண்டும், செல்லும் இடங்களில் சுற்றுச் சூழலை மாசு படுத்துவது போல் துப்பிக் கொண்டும் இருப்பார். சமீப காலமாக வாயை நன்றாகத் திறந்து சாப்பிட முடியவில்லை. சூடாகவும், காரமாகவும் சாப்பிட முடியவில்லை. வாயில் எரிச்சல், வலி. பொறுக்கவே முடியாமல் டாக்டரிடம் சென்ற போது 'உடனே பான் பராக்கை நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டார்!

"இந்த நிலைக்குப் பெயர் Oral Submucous Fibrosis. (OSF) வாயின் மென்மையான உட்புறச் சுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும். ஆங்காங்கே சிறு பள்ளங்கள் உண்டாகியிருக்கும். ஈறுகள் பாதிக்கப்பட்டு பற்கள் ஆடிப் போகும். கன்னங்களின் உட்புறங்களில் சிவப்பு மற்றும் வெள்ளைப் புள்ளிகள் உருவாகும் இதுபோன்ற நிலை ஒரு மனிதருக்கு நீடித்தால் அது வாயில் புற்றுநோய்க்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை!" என்கிறார்கள் டாக்டர்கள்.



வாயைத் திறக்கவே முடியாமல் ஸ்ட்ரா மூலம் திரவ உணவை மட்டுமே சாப்பிடக் கூடிய நிலை கூட உருவாகுமாம். இது தவிர பான்பராக் என்ற பெயரிலும், வேறு பல பெயர்களிலும் விற்றுக் கொண்டிருக்கும் 'குத்காவை' சுவைப்பதன் மூலம் ரத்த நாளங்கள் சுருங்கி இதய நோய்களும் வருமாம்.

குத்கா மற்றும் பான் மசாலா போடுவதால்தான் OSF நிலை உருவாகி, பின்னர் கேன்ஸர் வருகிறது. 1950களில் OSF நிலையுடன் ஒருநாளைக்கு ஒன்றோ இரண்டோ வயதான நோயாளிகள் வருவார்கள். ஆனால் இப்போதோ நிலைமையே

குத்கா புற்றுநோய் கொடுக்கும்!

தலைகீழ். இதுபோன்ற நோயாளிகளின் எண்ணிக்கை பத்து மடங்கு அதிகரித்து விட்டது. அதிலும், நோயாளிகள் 35 வயதுக்கும் குறைவானவர்கள் என்பதுதான் கவலை தரத்தக்க விஷயம்'' என்கிறார் டாட்டா மருத்துவக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் குப்தா. இதில் பள்ளிச் சிறுவர்களும் அடக்கம் என்பது அதிர்ச்சியூட்டும் விஷயம்.

குத்காவிலுள்ள புகையிலை, புகையிலைப் பவுடர் பூச்சுடன் கூடிய பாக்குத்தூள் இவைதான் குற்றவாளிகள். புகையிலையில் இருக்கும் நிக்கோடின்தான் மிக அதிகக் கெடுதலை உண்டாக்கும் பொருள். பான் மசாலாவில் புகையிலை கிடையாது. பாக்குத்தூள் நறுமண வாசனைப் பொருள்கள், சாக்கரின் ஆகியவை உள்ளன. இதைப் போட்டாலும், பாக்கின் மூலம் OSF நிலை வரும். ஆனால் பெரும்பாலான பான் மசாலா பிரியர்கள், அடுத்த கட்டமான குத்காவிடம் சரணடைகிறார்கள்.

"ஏதோ ஒரு வெறுமையைப் போக்க ஒரு பாக்கெட் போடத் துவங்கினேன். இன்று தினசரி ஆறு பாக்கெட்டுடன் நிறுத்த முடியாமல் தவிக்கிறேன். என் நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் அன்போடு ஆலோசனை சொல்லியும் பயனின்றிப் பான்பராக் அடிமையாகி விட்டேன். மனைவி கூட கடுமையான எச்சரிக்கை விடுத்து விட்டாள். இப்போது மற்றவர் எதிரில் பான் பராக்கை திறக்க கூச்சப்பட்டுக் கொண்டு ரகசியமாகப் போட்டுக் கொள்ளும் நிலையில் இருக்கிறேன்!'' என்கிறார் அரசு அதிகாரியான ஞானசேகரன்.

"ஏதோ வாய்க்கு நறுமணம் வழங்கும் பொருள் போலிருக்கிறது என்று போடத் துவங்கினேன். இன்று தினசரி ஐந்து பாக்கெட்டுகள் காலி செய்கிறேன்'' என்கிறார் ஆட்டோ ஓட்டுனரான செல்லத்துரை. "வாயில் ஒரு பாக்கெட் அள்ளிப் போட்டுக் கொண்டு எழுதத் துவங்கினால் பேனா கிறுகிறுவென்று ஓடும்; புகையிலை கலந்த உமிழ்நீருக்குப் போட்டியாக கற்பனை சுரக்கும்'' என்கிறார் சிறுகதை எழுத்தாளர் ஒருவர். இன்னமும் சில வடஇந்தியக் குடும்பங்களில், பான் பராக்கை மளிகைப்



பட்டியலுடன் சேர்த்துப் போட்டு மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்கிறார்கள்! இது போன்றவர்களின் தகவலுக்காகச் சொல்லுகிறோம். இந்தியாவில் வருடம் ஒன்றுக்கு ஒரு லட்சம் பேர் வாயில் புற்றுநோய் வந்து அவதிப்படுகிறார்கள்!

குத்கா போடும் நபர்களுக்கு போடாதவர்களை விட, வாயில் புற்றுநோய் வரும் வாய்ப்பு 400 மடங்கு அதிகம். கிட்டத்தட்ட எட்டு முதல் பத்து சதவீதம் OSF பேர்வழிகளுக்கு கடைசியில் புற்றுநோய் வந்து சேருகிறது. இப்படியாக மக்களின் உயிரைக் குடிக்கும் குத்கா மற்றும் மெல்லும் புகையிலை வஸ்துக்களைத் தடைசெய்ய முடியாதா? அமெரிக்காவில் பொது இடங்களில் சிகரெட் பிடிக்கத் தடா போட்டு விட்டார்கள். ஆனால் நமது நடிகர்களோ பணத்திற்கு ஆசைப்பட்டு பான்பராக் விளம்பரங்களில் நடிக்கிறார்கள். மக்கள் ஆரோக்கியத்தோடு விளையாடுவது அவர்களுக்குப் புரியவில்லையா? இந்தி சினிமா பிரமுகர்களான, அசோக்குமார், ஷம்மிகபூர், ஜீனத் அமன், வினோத்கன்னா போன்றவர்கள் குத்கா விளம்பரத்தில் தோன்றியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் விளம்பரத் தர நிர்ணயக் கழகம், குத்கா

மற்றும் சிகரெட் விளம்பரங்களில் பிரமுகர்கள் தோன்றுவதைத் தடைசெய்யும் வழிகாட்டு நெறிகளை வரும் அக்டோபர் மாதத்திலிருந்து அமுல் செய்ய உள்ளது. இது மட்டும் போதாது. "புகையிலை உடலுக்குத் தீங்கானது!" என்று சொல்வதற்குப் பதிலாக, சில ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போல் புகையிலைப் பொருட்களில் நேரடியாகவே "புகையிலையே புற்றுநோய்க்குக் காரணம்" என்று குறிப்பிட வேண்டும் என்று சட்டமும் கொண்டு வர வேண்டும்!

மெல்லும்/சுவைக்கும் புகையிலை காரணமாக உண்டாகும் தீமைகளை முழுமையாகக் கண்டறிந்து சொல்ல மத்திய மருத்துவ துறைத் தலைவர் டாக்டர் எஸ்.பி. அகர்வால் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. இந்த கமிட்டி நாடு முழுவதும் சுற்றி, பல்வேறு ஆராய்ச்சி நிலையங்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றுக்குச் சென்று நூற்றுக்கணக்கான நோயாளிகளைச் சந்தித்தது. இது தவிர டாக்டர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரையும் அது பேட்டி கண்டது. "இந்தியாவில் மக்களுக்கு வாயில் புற்றுநோய் வருவதற்கு முக்கியக் காரணம் மெல்லும்/சுவைக்கும் புகையிலை தான். எனவே உடனே இதன் விற்பனையைத் தடைசெய்ய வேண்டும்!" என்று அரசுக்கு அகர்வால் கமிட்டி பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரைக்கு மக்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் அமோக ஆதரவு இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் பான்பராக் மற்றும் புகையிலை தயாரிப்பாளர்கள் மத்திய சுகாதார அமைச்சர் தலித் எழில் மலையைச் சந்தித்திருக்கிறார்கள். புகையிலை வியாபாரம் தடைசெய்யப்பட்டால் அறுபது லட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று தங்களது வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். புகையிலை மெல்லுபவர்களை விட மெல்லாதவர்களுக்குத்தான் வாய்ப் புற்று வருவதாக ஒரு புள்ளி விவரத்தையும் கொடுத்திருக்கிறார்கள்!

கோடிக்கணக்கில் பணம் புரளும் இந்த வியாபாரத்தை நிறுத்துவது என்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல. எனவே இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தடை வராமல் தடுக்க அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மக்களை அறிவுறுத்துவதன் மூலம்தான் இந்த கொடிய பழக்கத்துக்கு முடிவு கட்ட முடியும். மதுவிலிருந்து மீள சில மறுவாழ்வு நிலையங்கள் உள்ளது போன்று பான்பராக் அடிமைகளை மீட்கவும் நிலையங்கள் உள்ளன. ஆனால் சக்ஸஸ் ரேட் 12 சதவீதம் தான். இதிலிருந்தே குத்கா பழக்கம் மனிதனை எப்படிக் கட்டிப் போடுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒருவன் இரண்டரை வருட காலம் குத்காவைச் சுவைத்தால் கட்டாயம் அவனுக்கு வாய்ப் புற்று நோய் வர வாய்ப்பிருக்கிறது என்கிறது ஹைதராபாத் சத்துணவு ஆராய்ச்சிக் கழகம். ●

— ஸ்ரீநிவாசன்

படம் : ஸ்ரீஹரி

"இந்த ஹோட்டல் சர்வர் ரொம்ப திமிர் பிடிச்சவன் சார்..."

"எப்படிச் சொல்றீங்க?"

"நான் சாப்பிட்டதும், என்கிட்டே பில்லா, மாவான்னு கேட்கிறான்..."





"இந்தக் கோயில்ல எதுக்கு இவ்வளவு டியூப் லைட் போட்டிருக்காங்க?"

"கடவுளுக்குத்தான் வெளிச்சம்!"

— ராதா வாசுதேவன்

விழா ஆல்பம்



ஆசான் தமிழ்த்தென்றல் திருவிக., அவரது சீடர் அமரர் கல்கி என இருவரையும் 15.5.98 அன்று, ஒரே விழாவில் கௌரவித்தது தமிழக அரசு. இவ்விரு தமிழ்த் தொண்டர்களின் எழுத்துக்களையும் நாட்டுடைமையாக்கி, பரிவுத் தொகையாக இருவரது வழித் தோன்றல்களுக்கு தலா இருபது லட்சம் வழங்கினார் தமிழக முதல்வர்.

கலைவாணர் அரங்கின் வெளியே வான் மழை பொழிந்து சென்னையைக் குளிர்விக்க, அரங்கத்துள் நகைச்சுவை மழை!

அமரர் கல்கியை கௌரவிக்க வழங்கப்பட்ட ரூபாய் இருபது லட்சம், அவரது நினைவைப் போற்றும் வகையில் பொருத்தமான பணிகளுக்குச் செலவிடப்படும் என்று மேடையில் அறிவிக்கப்பட்டது.

படங்கள்: யோகா



கம்ப்யூட்டர் கல்வி:

வேலை கிடைக்குமா? வயிறு நிறையுமா?



எதிர்காலத்தில் எல்லாமே கம்ப்யூட்டர்தான் என்பதை மனத்தில் கொண்டு, கூடுதலாய்க் கம்ப்யூட்டர் கல்வியும் பெற்று வருகிறார்கள் இன்றைய இளைஞர்கள். கார்ப்பரேஷன் பள்ளிகளில் கூட கம்ப்யூட்டர் கல்வி நுழைந்து விட்டது.

கம்ப்யூட்டர் படித்தால் கட்டாயம் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், கம்ப்யூட்டர் கல்வியை நாடும் இவர்கள் அனைவருக்கும் நிச்சயமாய் வேலை கிடைக்குமா? அல்லது, பி.ஏ, பி.எஸ்ஸி மாதிரி கம்ப்யூட்டர் கல்வி பெற்றுவிட்டு, எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் கியூவில் தேவுடுகாக்க வேண்டியதுதானா? ஒரு காலகட்டத்தில் டாக்டர்கள், இஞ்சினியர்கள் எண்ணிக்கை மிக அதிகமாகி, அவர்கள் தங்கள் தகுதிக்குக் குறைவான மிகச் சாதாரணப் பணிகளில் அமர்ந்திருக்க வேண்டியதாகி விட்டது. அதே கதி கம்ப்யூட்டர் கல்வி படித்தவர்களுக்கும் வருமா...?



• பாலசுப்ரமண்யம்

– இக்கேள்வியை என்.ஐ.ஐ.டி. துணைத் தலைவர் பாலசுப்ரமண்யத்திடம் கேட்டபோது போது, "சொன்னால் நம்பமாட்டார்கள்!" என்று ஆரம்பித்தார்! இன்றைய நிலவரப்படி இரண்டு லட்சம் பேர் தேவைப்படுகிறார்கள். ஆனால், கம்ப்யூட்டர் கல்வி பயின்றவர்கள் அத்தனை பேர் இங்கே இல்லை. கம்ப்யூட்டர் இஞ்ஜினியரிங் கல்லூரிகள் அனைத்தும் சேர்ந்து, தேவையில் பத்துப் பதினைந்து சதவிகிதத்தைத்தான் பூர்த்தி செய்கின்றன...

"அதிலும் தென்னிந்தியாவைச் சேர்ந்த இளைய தலைமுறையினருக்கு உலகெங்கும் சென்று பணிபுரிய வாய்ப்புகள் ஏராளம். தென் இந்தியர்களின் ஆழமான ஆங்கில அறிவும் கணித அறிவும் பெரிய பிளஸ் பாயிண்ட். எனவேதான் தென்னிந்திய இளைஞர்களுக்கு அமெரிக்காவில் ஏக டிமாண்டு. இப்போது, இந்திய இளைஞர்கள் பலர் அமெரிக்கா சென்று பணிபுரிகிறார்கள். ஆனால் கூடிய



விரைவிலேயே அமெரிக்கா போக வேண்டிய அவசியமின்றி, இங்கிருந்தபடியே, அமெரிக்க நிறுவனங்களுக்குத் தேவையானவற்றை உருவாக்கி அனுப்பி வைக்க முடியும்!

"இன்னொரு சுவையான தகவல். அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் சுமார் பன்னிரண்டு மணி நேர கால வித்தியாசம். இது கூட இந்தியர்களுக்கு மாபெரும் அனுகூலமாய் இருக்கிறது. அமெரிக்காவில், அலுவலகம் முடிந்து புறப்படுகிறபோது, ஒரு சாஃப்ட் வேர் உருவாக்கும் பணியை இந்தியாவுக்கு இன்டர் நெட் மூலம் அனுப்பி வைத்தால், அப்போது இங்கே பகல் என்பதால், அந்த வேலையை முடித்து, மாலையிலேயே அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துவிடலாம்! மறுநாள் அமெரிக்காவில் அவர்கள் ஆபீஸ் வரும்போது, சாஃப்ட் வேர் ரெடியாய் இருக்கும்!" என்கிறார் அவர்.

"நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக, கம்ப்யூட்டர் துறையில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் முறைப்படி கம்ப்யூட்டர் கல்வி பெற்றிருக்கும் ஒருவர் கூட நாளடைவில், தாம் கற்ற கல்வி, இனி உபயோகப்படாது என்கிற நிலையைச் சந்திக்க நேரிடுமல்லவா?"

"ஆம்! சமீப காலம் வரை 'C' என்கிற கம்ப்யூட்டர் மொழி புழக்கத்திலிருந்தது. இப்போது ஜாவா என்று ஒன்று வந்து விட்டது. நாளை, இதுபோல வேறு ஒன்று வரலாம். வேகமான மாற்றங்கள், விஞ்ஞான வளர்ச்சியில் தவிர்க்க முடியாதவை."

"இந்த பிரச்னைக்குத் தீர்வு என்ன?"

"ஒவ்வொருவருக்கும் அவரவர் துறையில் என்ன லேட்டஸ்ட் மாற்றங்கள் என்பதை அறிந்து கொள்ளுகிற ஆர்வம் இருக்க வேண்டும். கம்பெனிகளில் பணிபுரிகிறவர்களுக்கு, அவர்களது நிறுவனம் லேட்டஸ்ட் முன்னேற்றங்களைப் பற்றி முழுமையாக இல்லாவிட்டாலும், தமது தேவை மற்றும் பொறுப்புக்குத் தக்கபடி 'இன்-ஹவுஸ்' ஆகத் தருகிறார்கள். அல்லது கம்ப்யூட்டர் பயிற்சி மையங்களுக்கு அனுப்பி வைத்து பயிற்சி பெறவைக்கிறார்கள்.

கம்பெனி அனுப்பாவிட்டால் என்ன.. நாம் போய் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வோம் என்று தாங்களாக முன் வருவோரும் உண்டு.

"இன்று தெருவுக்குத் தெரு, கம்ப்யூட்டர் பயிற்சி மையங்கள் வந்து விட்டனவே! பயிற்சியில் சேருமுன், சிறந்த நிறுவனத்தை எப்படித் தேர்ந்தெடுப்பது?"

"கட்டணம் குறைவு என்று பார்த்துச் சேர்ந்தால், அது சரியான தேர்வுமுறையல்ல. இன்று மிகச் சிறந்த பொருளை, அதிகவிலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். விளம்பரங்களைப் பார்த்து மயங்கி விடக்கூடாது. எந்த ஒரு கம்ப்யூட்டர் கல்வி நிறுவனமும் எத்தனை நாளாய் இயங்கி வருகிறது; மாணவர்களை நுழைவுத்





“கம்ப்யூட்டர் யுகத்தில் ஏழை - பணக்காரன் இடைவெளி பெருகிக் கொண்டே போகும்!”

— சுஜாதா சொல்கிறார்

“கம்ப்யூட்டர் துறை இதே ரீதியில் வளர்ச்சியடைந்து கொண்டே போனால் இன்னும் பத்து வருடங்கள் கழித்து இந்தியா எப்படி இருக்கும்?”

“கம்ப்யூட்டரைப் பொருத்தவரை, பத்தாண்டுகளுக்குப் பின் எப்படி இருக்கும் என்று இப்போது கூறுவது இயலாது. காரணம், இத்துறை அவ்வளவு வேகமாய் வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கிறது.

“எழுபதாம் வருடத்தில் ‘சிப்’ என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் எழுபத்தி இரண்டில் ‘சிப்’ வந்ததும் மாபெரும் புரட்சியே நிகழ்ந்தது. நான் ரிடையர் ஆனபோது, தெரிந்து வைத்துக் கொண்டிருந்த விஷயம் எல்லாம் இன்றைய தேதியில் காலாவதியாகிப் போன சமாசாரங்கள். என்ன நடக்கிறது என்று தொடர்ந்து தெரிந்து கொள்ளத் தவறினால் பிழைப்பு நடத்த முடியாது.

“இன்று சாஃப்ட்வேரைப் பொறுத்தவரை அமெரிக்காவின் மைக்ரோ சாஃப்ட் கம்பெனியும், ஹார்டுவேரைப் பொறுத்தவரை இன்டெல் கம்பெனியும் என்ன செய்கின்றன என்பதைத்தான் உலகமே நுணுக்கமாய் கவனித்துக் கொண்டிருக்கிறது.

“கம்ப்யூட்டர், வேலை வாய்ப்புகளைப் பறித்து விடும் அல்லது ஏராளமானோர் கம்ப்யூட்டர் பிறக்கிறபோது எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்குமா என்கிற பொதுவான வாதமும் அர்த்தமற்றது. அதை சரியான கோணத்தில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்தத் துறையில் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. அதுவும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது.

“கூடிய சீக்கிரமே, டெலிபோன், டெலிவிஷன், தகவல் தொடர்பு இவையனைத்தும் ஒருங்கிணைந்து ஒரே கருவியாகிவிடும். இன்டர் நெட் என்கிற உலகத் தகவல் வலை, இங்கே சொற்ப செலவிலோ, அல்லது செலவு இல்லாமலோ கூட கிடைக்கும் அளவுக்கு சகஜமான ஒன்றாகிவிடும். இவையெல்லாம் சேர்ந்து வர்த்தகம் பெருகவும், பணம் மிகுதியாய்ப் புழங்கவும் வழி செய்யும். கலபத்தில் லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களாகிவிட முடியும். ஆனால் ஏழைகள் வாழ்க்கையில் அதிக முன்னேற்றம் இருக்காது. பணக்காரன் - ஏழை இடைவெளி பெருகிக் கொண்டே தான் போகும்!”

— மௌலி

தேர்வு வைத்துத் தேர்வு செய்து, சேர்த்துக் கொள்ளுகிறதா, இல்லை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, பணத்துடன் கொடுத்தால் போதுமா? என்னென்ன சொல்லித் தரப்படுகிறது? மாணவர்களின் சூழ்நிலை, அறிவுத்திறன், தேவை. போன்றவற்றை அலசி ஆராய்ந்து பார்த்து, ஆலோசனை கூற திறமையான ஆலோசகர்கள் இருக்கிறார்களா? கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கத் தேவையான அளவு அடிப்படை வசதிகள் இருக்கின்றனவா? ஐ.எஸ்.ஓ. 9000 போன்ற அகில உலகத்தர முத்திரை பெற்றுள்ளதா? அந்த முத்திரை அனைத்துப் பயிற்சிகளுக்குமா? அல்லது ஒரு சில குறிப்பிட்ட பயிற்சிகளுக்கு மட்டுமா? என்றெல்லாம் நேரடியாகவும், விவரம் அறிந்தவர்கள் மூலமாகவும் விசாரித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.” ●

— கௌதம்

அட்டை வண்ணப்படம் :
பிரவீண் குமார்



எய்ட்ஸ் பற்றி சரியாக தெரிந்து கொள்ளுங்கள்.

எய்ட்ஸ்

உடலுறவு மூலம் எப்போது பரவும்?

1. திருமணத்திற்கு முன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளுவதால் பரவலாம்.
2. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர மற்றவர்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளும் போது பரவலாம்.

உடலுறவு மூலம் எப்போது பரவாது?

1. திருமணம் வரை உடலுறவைத் தவிர்த்தால் பரவாது.
2. திருமணத்திற்குமுன் உடலுறவு கொள்ள நேரிடும்போது ஆணுறை அணிந்தால் பரவாது.
3. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறிமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் பரவாது.
4. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர வேறெந்த பெண்ணிடமும் உடலுறவு கொள்ளும் போது ஆணுறை அணிந்தால் பரவாது.

இரத்தம் மூலம் எப்போது பரவும்?

1. மருத்துவமனைகளில் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை நோயாளிகளுக்குச் செலுத்தினால் பரவலாம்.

இரத்தம் மூலம் எப்போது பரவாது?

1. நன்கு பரிசோதனை செய்யப்பட்ட இரத்தத்தை செலுத்துவதால் பரவாது.
2. மனித உடலில் சிரிஞ்சின் மூலம் வெளியே எடுக்கப்பட்ட இரத்தம் சில நிமிடங்களில் உறைந்துவிடுகிறது. மேலும் அதில் உள்ள எய்ட்ஸ் கிருமிகள் சூரிய ஒளியில் அழிந்துவிடுவதால் அந்த இரத்தத்தைச் செலுத்தி எய்ட்ஸை பரப்ப முடியாது.

ஊசி மூலம் எப்போது பரவும்?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் மற்றும் ஊசிகளைச் சுத்தப்படுத்தாமல் மற்றவருக்குப் பயன்படுத்துவதால் பரவலாம்.

ஊசி மூலம் எப்போது பரவாது?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் சுத்தப் படுத்திய பிறகு மற்றவருக்கு உபயோகித்தால் பரவாது.
2. சிரிஞ்சில் இரத்தத்தை வெளியே எடுத்தபின் அது உறைந்து விடுவதால் எய்ட்ஸ் கிருமிகள் அழிந்து விடுகின்றன. உறைந்த இரத்தத்தை ஊசி மூலம் செலுத்த முடியாது. அதனால் ஊசியின் மூலம் எய்ட்ஸ் பரவ வாய்ப்பில்லை.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.

தொலைபேசி எண் : 044-8255467

TNSACS/2002/98/ELEGANT

கல்கி— B. M. SILK SAREES

இணைந்து வழங்கும்

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி - 7

அபுல்கலாம் ஆசாத்தின் சிஷ்யர் என்று ஒரு வி.ஐ.பி. பற்றிய கட்டுரையில் செய்தி வருகிறது. அந்த வி.ஐ.பி.யின் பெயர் என்ன?

இந்த இதழைப் படித்துக் கண்டுபிடித்துக் கீழுள்ள ஒரு பாதிக் கூப்பனில் எழுதியனுப்புங்கள். பலர் சரியான விடையெழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பட்டுப் புடைவை பரிசு!

மீதிப் பேருக்கு ஏமாற்றம்தானா? இல்லை. கூப்பனிலுள்ள மறுபாதியிலும் இதே விடையை எழுதிப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பன்னிரண்டு வாரம் தொடரப் போகும் இப் போட்டியின் முடிவில் பம்பர் பரிசாக கலர் டி.வி. ஒன்று காத்திருக்கிறது. வழங்குபவர்:



வசந்த் & கோ

- விடைகளைக் கூப்பனில் மட்டுமே எழுதியனுப்ப வேண்டும். ஒரிஜினல் கூப்பன்தான்; ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி: 1.6.98

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 7
(நீங்கள் பத்திரப்படுத்த வேண்டிய கூப்பன்)

வி.ஐ.பி.யின் பெயர் :

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 7
(எங்களுக்கு அனுப்ப வேண்டிய கூப்பன்)

வி.ஐ.பி.யின் பெயர் :

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

சுமி சூப்பர் மார்க்கெட்:

ரெண்டு கையையும் மேல தூக்கிடறேன். 'வயசு பத்தாத சின்னப் பொண்ணே, உனக்குக் காதலைப் பத்தி என்ன தெரியும்?'னு வரிஞ்சிகட்டிட்டு நம்ம ஊர் மஜ்னுக்களும் லைலாக்களும் அம்பி - அமராக்களும் சண்டைக்கு வந்துட்டாங்கப்பா!

'உடலில் வந்த நோய்க்காக உயிர் வதைபடுகிறதே, அப்படிப்பட்ட உன்னதம்தான் காதல். வெறுமனே கலர் பார்த்துக் கனவு காண்பதல்ல காதல். காலம் முழுவதும் கருத்தொருமித்து, காரியம் யாவினும் கைகொடுத்து, விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் காதல். கண்டகண்ட சினிமா பார்த்துட்டு உனக்குக் காதல்னா என்னன்னே தெரியலை!'ன்னு விளாசி இருக்காரு திருவண்ணாதபுரம் தி.சு. பாலசுப்ரமணியம்.

இன்னும் எத்தனையோ பேர் இதே மாதிரிதான் எழுதியிருக்காங்க. நம்ம ரசிகர் மன்ற உறுப்பினர்கள் கூட சேம் ஸைடு கோல் போட்டுட்டாங்களேன்னுதான் கொஞ்சம் வருத்தம். இட்ஸ் ஆல் ரைட்! மெஜாரிடியை மதிப்போம்!

லாஸ்ட் வீக் பேப்பர்ல ஒரு நியூஸ் படிச்சிருப்பீங்க. சென்னையில ஒரு ரோட் ஆக்ஸிடெண்ட். அடிபட்டவங்க வயசான ஒரு ஜோடி. ரத்த வெள்ளத்தில கிடந்த அவுங்களை பக்கத்திலிருக்கற விஜயா ஆஸ்பிடலுக்கு எடுத்திட்டுப் போயிருக்கார் கராத்தே வீரர் ஹுசைனி.

ஆனா ஆஸ்பிட்டல்ல இருந்தவங்க அடிபட்டவங்களை அட்மிட் பண்ணலை. ட்ரீட்மெண்டுக்கான செலவுகள் பத்தியெல்லாம் கவலைப் படாதீங்கன்னு சொல்லியும் அட்மிட் பண்ணிக்கலை. அதனாலதான் அந்த ஜோடி செத்திட்டாங்கன்னு ஹுசைனி சொல்லியிருந்தார்.

ஆஸ்பிடல்காரங்க சும்மா இருப்பாங்களா? பேமெண்ட் பிரச்னை பத்தியெல்லாம் நாங்க பேசவேயில்லை. ஹுசைனி எடுத்திட்டு வந்த ரெண்டு பேரும் ஏற்கெனவே செத்துப் போயிருந்தாங்க. இனி இங்க அட்மிட் பண்ணி எதுவும் ஆகப்போறதில்ல. இனி போஸ்ட் மார்ட்டம் தான் பண்ணணும்.

அதனால ஜி.ஹெச்சுக்கு எடுத்திட்டுப் போங்கன்னு சொன்னோம். ஆனா அவர் கேட்கலை. டூட்டில இருந்த லேடி டாக்டருங்களை கன்னா பின்னான்னு ஆபாசமாப் பேசினார்னு ஒரு மறுப்பறிக்கை.

யார் சொல்றது நிஜமோ! அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

ஆனா ஒண்ணு. ஆக்ஸிடென்ட்ல அடிபட்டு வர்றவங்களோட நிதி மூலம், ரிஷி மூலம் பார்த்துக்கிட்டு போலீஸுக்கெல்லாம் இன்ஃபார்ம் பண்ணிக்கிட்டிருந்தா அந்த நேரத்தில சம்பந்தப்பட்டவங்களோட நிலைமை மோசமாகி செத்துப் போறதுக்கான சான்ஸே நெறைய இருக்குன்றதால, கவர்மெண்ட்டுலயே ஒரு முறை வெச்சிருக்காங்க.

அதாவது குறிப்பிட்ட சில ஆஸ்பிடல்கள்ல 'trauma care' அப்படீன்னு ஒரு வார்டு உண்டு. அது இந்த மாதிரி விபத்துல அடிபட்டு வர்றவங்களுக்குன்னே இருக்கற வார்டு. அதில, அட்மிட் பண்றதுக்கு பேஷண்டோட பூர்வாசிரமங்களைத் தெரிஞ்சுக்க வேண்டியதில்லை. வர்ற பேஷண்டை உடனே அட்மிட் பண்ணி, உடனடியாச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செஞ்ச பிறகுதான், அடிபட்டவர் யார்? எப்படி அடிபட்டார்? அவரை எடுத்துக்கிட்டு வந்தவர் யார்? அப்படீனெல்லாம் விசாரிச்சு போலீஸுக்குத் தகவல் சொல்லணும்.

இந்த விஷயங்களுக்கெல்லாம் ஒத்துக்கிட்டுத்தான் 'trauma care' வார்டை அந்தந்த ஆஸ்பிடல்கள் வெச்சிருக்கு. இப்படி வெச்சிருக்கிற ஆஸ்பிடல்ஸ்ல யாராவது எதாவது ரூல்ஸெல்லாம் பேசினாங்கன்னா நீங்க சும்மா விடாதீங்க. அப்படிப் பேசித் தட்டிக் கழிக்கிற உரிமை அவுங்களுக்கு இல்லை. நிச்சயமா இல்லை. ஓகே!



சிட்லபாக்கம் அ. ஷண்முகசுந்தரம் ஒரு ஜூப்பர் ஜோக் அனுப்பியிருக்காரு.

லல்லு பிரசாத் யாதவ் நியூயார்க் போனாராம். அங்க விஞ்ஞானிகள், "நாங்க ஒரு நூதனமான செல்ஃபோன் உருவாக்கியிருக்கோம். அதால விண்ணுலகத்துல இருக்கறவங்களோட கூடப் பேசலாம்"னு சொல்லி, காட்டிருக்காங்க.

இவர், "நரகத்துல என் தாத்தா இருப்பாரு. கனெக்ஷன் குடுங்க"ன்னு கேட்டு வாங்கி, பேசி ஆச்சர்யப்பட்டுப் போயிட்டாரு. பத்து நிமிஷம் பேசினதுக்கு நூறு டாலர் கட்டணம். சே! இவ்ளோ சீப்பா இருக்கேன்னு லல்லுக்கு ரொம்ப சந்தோஷம்.

விண்ணுலகத்துக்குப் பேச செல்ஃபோன்!

அன்னிக்கு ராத்திரி லல்லு போன் பண்ணி தன் ஒய்ஃப்கிட்ட விஷயத்தைச் சொல்ல, "அந்தக் கருவி இப்ப இங்கியே வந்துடுச்சே! நான் கூட என் தாத்தாகிட்ட பேசினேனே! அம்பது ரூபாதான் ஆச்சு"ன்னாராம் ராப்ரிதேவி.

பயங்கர கோபம் லல்லுவுக்கு. நேரே அந்த விஞ்ஞானிகளிடம் போய், "நீங்க என்னை ஏமாத்திட்டீங்க. நூறு டாலர் இஸ் டூ மச்"னு சத்தம் போட்டிருக்காரு.

அதுக்கு அந்த விஞ்ஞானிகள் அமைதியா, "உங்க ஒய்ஃப் எங்கேருந்து நரகத்துக்குப் பேசினாங்க?"ன்னு கேட்டாங்க.

"பீகார்லேருந்து."

"அப்படீன்னா அது லோக்கல் கால். லோக்கல் காலுக்கு அவ்வளவுதான் சார்ஜ் ஆகும்!"னாங்களாம்.

— சுமி

சிக்கலில் சிக்காத சிக்கந்தர் பக்த்!

பா.ஜ.க.வில் உள்ள மற்ற தலைவர்களுக்கும், தொழிற்துறை அமைச்சர் சிக்கந்தர் பக்த்துக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வித்தியாசங்கள் உண்டு. பெரும்பாலான தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ்., ஜன சங்கம் என்ற அடிப்படையில் உருவாகி வந்தவர்கள். ஆனால் பக்த் காங்கிரஸ் கலாசாரத்தில் அரசியலைத் துவக்கியவர். மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் சிஷ்யராக அரசியலில் அறிமுகம் ஆனவர். தமது குருவைப் போலவே எல்லா மதங்களையும் மதித்து நடக்கும், ஓர் உண்மையான மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர். 1980ல் ஜனதா உடைந்தபோது, எல்லோரையும் ஆச்சர்யப்படுத்தும் விதத்தில் பாரதிய ஜனதாவில் சேர்ந்தவர். "காங்கிரஸுக்கு உண்மையான மாற்று பாரதீய ஜனதாதான்" என்று அப்போதே கணித்துச் சொன்னவர் பக்த்.



சுதந்தரப் போராட்ட வீரர்களின் குடும்பத்தில் பிறந்தவர் இவர். பள்ளி, கல்லூரி வாழ்க்கையெல்லாம் தில்லியில்தான். 1942ல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். அது தவிர அவ்வப்போது சுதந்தரப் போராட்ட வரலாற்றில் மறியல், போராட்டம் என்று கலந்து கொண்டதால், கல்லூரிப் படிப்புக்கு நிறையத் தடங்கல்கள். 1951ல் தில்லி மாநகராட்சி கவுன்ஸிலராக இவரது பொது வாழ்க்கை துவங்கியது. தில்லி வட்டார காங்கிரஸில் முக்கியத் தலைவராக உருவானார். 1969ல் ஜனாதிபதி தேர்தலை ஒட்டி காங்கிரஸ் பிளவுபட்ட போது, பழைய காங்கிரஸ் தலைவர்களான காமராஜ், பாட்டீல், கோஷ் ஆகியோரோடு இணைந்து கொண்டார். அதன் பிறகு தொடர்ந்து இந்திரா எதிர்ப்புப் பிரசாரம்தான்.

1975ல் எமர்ஜென்ஸி பிரகடனப்படுத்தப்பட்ட போது பக்த்தும் கைது செய்யப்பட்டு 18 மாதம் சிறை வைக்கப்பட்டார். ஜனதா கட்சி உருவான போது அதன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1977ல் தில்லி சாந்தினி சவுக் தொகுதியில் போட்டியிட்டு பாராளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். மொரார்ஜி மந்திரி சபையில், வேலை மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தார்.

நல்ல மரபுகளைக் கடைப்பிடிப்பவர் பக்த். தமது அரசியல் முடிவுகள் எழுப்பும் சர்ச்சைகளையெல்லாம் எந்த வித சங்கடமில்லாமலும் சமாளிக்கும் கலை தெரிந்தவர். பா.ஜ.க.வில் நன்கு தெரிந்த தலைவராக உருவான முதல் முஸ்லிம் இவர்தான். ஹிந்துத்வா, கொள்கையை அடிப்படையாக கொண்ட பா.ஜ.கவில் சேர்ந்ததற்காக இவரை பலமுறை குடைந்திருக்கிறார்கள். ஆனால் மதங்களை விட, தேச ஒற்றுமை, தேச உணர்வு என்ற அடிப்படையில் தாம் பா.ஜ.கவில் இருப்பதை மிகவும் திருப்தி தரும் விதத்தில் விளக்கும் வல்லமை பக்த்துக்கு உண்டு. விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்துவதில் கூட ஒரு அரசியல் நாகரிகத்தைச் செயல்படுத்துபவர். குறிப்பாக பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது இவரது அரசியல் நிலை பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் பக்த் எந்தவித ஊசலாட்டத்துக்கும் ஆட்படாமல் பா.ஜ.கவில் தொடர்ந்தார். இவரது வழியைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் இன்று பா.ஜ.காவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ⭘

— கௌசி

நர்சுகள் வேலை நிறுத்தம் தமிழகத்துக்குப் பரவுமா...?

தில்லியில் தீராமல் தொடர்வது நர்ஸ் வேலை நிறுத்தம்தான். மத்திய அரசும் நெருங்கி வராமல், செவிலியர் அமைப்பும் உடன்படாமல் இழுபறியாக இருக்கிறது. நோயாளிகள் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெறாமல் திரும்புகின்றனர். மருத்துவம் செய்ய மறுத்ததால் மருத்துவமனை வளாகத்திலேயே நோயாளிகள் இறந்து விடும் கொடூரத்தை டீ.வியில் பார்த்த பின்னும் செவிலியர்கள பணிக்கு வர மாட்டோம் என்று சொல்வது நியாயமா? என்று கேட்டோம்.

இந்தப் பிரச்னை குறித்து அரசு மருத்துவமனை ஒன்றில் பொறுப்பான பதவி வகிக்கும் கல்யாதேவி என்ற நர்ஸிடம் விசாரித்தோம். 'ஆஸ்பத்திரி பேரைப் போடாதீங்க. பிரச்னையாயிடும்' என்று ஆரம்பித்துப் பேசினார். ஐம்பது வருசமா பாவ புண்ணியம் பார்த்திருக்கிறோம். அரசு கண்டுகொள்ளவில்லை.

"ப. சிதம்பரம் ஐந்தாவது ஊதிய கமிஷன் சிபாரிசுப்படி சம்பளம் தர்றதாச் சொன்ன பின்னாடியும் எங்களுக்குக் கிடைக்கலை. இதில நிர்வாகச் சிக்கல் இருக்கலாம். ஆனா நர்சுகளுக்கு இருந்து வர்ற அடிப்படை பிரச்னையை யாரும் கண்டுக்கலை... சர்வீசுக்கு தக்க சம்பள உயர்வு இல்லை. அதே போல பதவி உயர்வும் இல்லை. பன்னிரண்டு ஆண்டுகள் நர்ஸாக வேலை பார்த்தவங்க ஹெட் நர்ஸா உயர்வு பெறுவாங்க. அடுத்து, மூன்றாம் கிரேட், இரண்டாம் கிரேட், முதல் கிரேட் என்று பதவி கிடைக்கும். செகண்ட், ஃபர்ஸ்ட் கிரேடுன்னு கிடைக்காமலே பலர், 35 வருஷம் வேலை பார்த்திட்டு ரிடையர் ஆயிட்டிருக்காங்க. கிரேடுக்குத் தக்கபடிதான் சம்பள உயர்வு என்கிறதாலே, கிரேடே கிடைக்காம ஓய்வு பெறுகிற வங்களுக்குப் பென்ஷன் குறைவா கிடைக்குது!

"கிரேட் கொடுத்தா சம்பளத்தை உயர்த்தணும். பயந்துக்கிட்டுத்தான் அரசு மெத்தனம் காட்டுது! பணியிடத்தை நிரப்பாம தாமதிக்கிறதும் இதனாலதான். இதைச் சுட்டிக்காட்டித்தான் டெல்லியில் போராடுறாங்க...

"ஐம்பது வருஷத்துக்கு முன்னால ஆங்கிலேய அரசு, சப்-இன்ஸ்பெக்டர், பி.எட். டீச்சர், நர்ஸ் மூணு பேருக்கும் ஒரே சம்பள விகிதத்தைக் கொடுத்தது. இப்போது இன்ஸ்பெக்டருக்கும், டீச்சருக்கும் சம்பளம் எக்கச்சக்கமா உசந்திடுச்சு. நர்ஸுகளுக்கு மட்டும் அப்படி முறையா சம்பள விகிதத்தை ஏத்தவே இல்லை! சப்-இன்ஸ்பெக்டர்கள், பி.எட். டீச்சர்கள் வாங்குற சம்பளத்தில முக்கால் பங்காவது தரலாம். போராடுறதுக்கு இதுவும் ஒரு காரணம்...

"இன்னொரு பிரச்னையும் இருக்கு. ஆங்கில அரசு மாத அலவன்ஸ் என்று முப்பது ரூபாய் தந்தது. இந்த அறுபது வருஷமாக அதே முப்பது ரூபாய்தான் அரசு தருது! அலவன்சை ஏத்தவே இல்லை! எல்லா பொருளும் ஐம்பது மடங்கா விலை ஏறிப் போச்சு. இன்னமும் முப்பது ரூபா அலவன்ஸ் என்றால் எப்படி?"

செவிலியர் பிரச்னை பல இடங்களிலும் கசியத் தொடங்கியிருக்கிறது. தமிழ்நாட்டில் நர்ஸ் போராட்டம் நடத்த ஏதும் திட்டம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்ட போது, "தில்லியில் என்ன நடக்கிறது என்ற முழுமையான விவரம் எங்களுக்கு வந்து சேரவில்லை. இதுவரை எங்கள் தமிழ்நாடு நர்ஸ் கூட்டமைப்பு இதுபற்றிக் கலந்தாலோசிக்கவில்லை" என்கின்றனர். ●

— சிக்கல் சிவராமன்



சுருளிராஜன் குரலில் பேசிய ஆர்.கே. குமார்



வருமான வரித் துறை அதிகாரிகளை மத்திய அமைச்சர் ஆர்.கே. குமார் இட மாற்றம் செய்துள்ளதைக் கண்டித்து சென்னையில் த.மா.க கண்டன ஊர்வலம் நடத்தியது.

'ஊழல் ராணி ஜெயலலிதா மிரட்டலுக்குத் துணை போகாதே': 'வருமான வரித் துறை அதிகாரிகளைப் பந்தாடாதே'; 'நேர்மையைக் குழி தோண்டிப் புதைக்காதே' என்று அட்டைகளில் வாசகங்களைத் தூக்கிப் பிடித்துச் சென்றதைவிட கூட்டத்தில் வந்த உடனடி விமர்சனங்கள் சுவராஸியமாய் இருந்தன.

ஆர்.கே. குமாரும், ஜெயலலிதாவும் வாஜ்பாயை 'குரங்காட்டி' வைப்பதாக வேஷம் போட்டு பிரசாரம் செய்தனர். ஜெயலலிதா கண்களை உருட்டி பார்த்தது தான் மாயம் வாஜ்பாய் குரங்கு ஜெ காலில் கூனிக் குறுகி பாத தரிசனம் செய்தது. ஜெயலலிதா 'ஆடுறா ராமா' என்றதும், வாஜ்பாய் குரங்கு பல்டியடித்து 'சரியாக ஆடுகிறேனா' என்று ஆடிக் காட்டியது! ஜெ. மிரட்டவும் எழாமல் தொடர்ந்து குட்டிக் கரணம் போட்ட வண்ணம் இருந்தது!

காஞ்சிபுர தொண்டர்கள் குரங்காட்டத்தைப் பார்த்ததும் அந்த இடத்திலேயே நவீன சுருளிராஜனை சைக்கிள் கேரியரில் ஏற்றினர்! அவர் சுருளிராஜன் குரலில் ஆர்.கே. குமாராக மாறிப் பேசினார்!

''என் தலைமையில ஊழல் துறை அமைச்சகத்தை வாஜபேயி கொடுத்திருக்காரு. உலகத்திலேயே இப்படியொரு பிரிவை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவி. சமூக நீதி காத்த வீராங்கனை, அம்மா ஜெயலலிதாவுக்கு நோபல் பரிசு தரணும். இந்த துறைக்கே முதன் முதல் மத்திய அமைச்சரான எனக்கு ஏதாவது ஒரு பரிசு தரணும்'' என்றார்!

சைக்கிள் கேரியரிலிருந்து 'ஆர்.கே. குமார்' இறங்கியதும் தொண்டர்கள் கிச்சுகிச்சு மூட்டுகிறேன் என்று சட்டையைப் பிடித்து டார் டாராக கிழித்து விட்டனர்! சுருளிராஜன் குரலில் பேசிய அந்த தொண்டருக்கு நகைச்சுவை உணர்வு அதிகம்! ''ஐயோ... அக்கக்கா அக்கக்கா என் ஊழல் துறையைப் பிரிச்சுக்கிட்டாங்களே'' என்றார்.

ஜெயலலிதாவை ஊழல் வழக்கிலிருந்து காப்பாற்ற அதிகாரிகளை மாற்றக் கூடாது என்று வருமான வரித்துறை அலுவலகத்திற்கு மனு கொடுக்க சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் தலைமையில் ஊர்வலம் சென்றதை அண்ணா மேம்பாலத்திலிருந்து பொது ஜனங்கள் பார்த்தனர்.

''இந்த வெயில்ல இவங்க ஆர்ப்பாட்டம் செஞ்சு என்ன ஆகப் போகுது. அந்த அம்மா சென்னாரெட்டியவே ஒரு ஸ்டேட்மெண்டில மிரள வச்சிச்சு. இதெல்லாம் அந்தம்மாவுக்கு ஜுஜிபி. நாளைக்கு இந்தக் கூட்டமே கிடுகிடுக்குறது மாதிரி ஸ்டேட்மெண்ட் வருதா இல்லையான்னு பாருங்க'' என்று கொளுத்தும் வெயிலில் கூலாக சொல்லி தன் யமாகாவை நகர்த்தினார் ஒருவர்.

அந்த நபருக்கு வாயில் பெப்சியைத் தான் ஊற்ற வேண்டும். ''முன்னாள் நிதிமந்திரி ப. சிதம்பரத்தால் 10,500 கோடி நாட்டிற்கு இழப்பு'' என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டு 'இனிமேல் ஊர்வலம் அது இதுன்னு நடத்துவயா?' என்று கேட்காமல் கலங்கடித்துள்ளார் புரட்சித் தலைவி!

—சிக்கல் சிவராமன்,
படம்: ஸ்ரீஹரி

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி – 1998

இனிய வாசக எழுத்தாளர்களே, கல்கி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் இரண்டாவது அறிவிப்பு இது. (முதல் – பொன்னியின் செல்வன்!) பிரமாதமான சிறுகதைகள் மூலம் அசத்த அழைக்கிறோம். இவ்வாண்டு, ஸ்பெஷல் அல்லவா? பரிசுத் தொகை கூடியிருக்கிறது.



முதல் பரிசு – ரூ. 10,000

இரண்டாம் பரிசு – ரூ. 7,500

மூன்றாம் பரிசு – ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 1000 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

விதிமுறைகள் :

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். தழுவல், உருவல் கூடாது; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டி'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 2 ஆண்டு மலரில் வெளியாகும்.

எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்!

— ஆசிரியர்

போராட்டம் செய்ய இருந்த ஸமாஜ்வாதிக்காரர்களைக் கொத்துக் கொத்தாய் உள்ளே தள்ளிவிட்டு, வாஜ்பேயின் மும்பை வரவை, மனிதச் சங்கிலி அமைத்து, தடபுடலாகக் கொண்டாடினார்கள் பி.ஜே.பிக்காரர்கள். வழியெல்லாம் 'ஷெனாய்' வேறு முழங்கிற்று! போக்குவரத்துத் தடையால் பாதிக்கப்பட்ட சிலர், "ஹூம்... வாஜ்பேயி ஒருவழியாக மூன்று முடிச்சுகள் போடக் கிளம்பி விட்டாரோ?" என, கல்யாண ஊர்வலம் போல் சென்று கொண்டிருந்தவர்களை நோக்கிக் கிண்டலடித்தனர். அவர்கள் விளையாட்டாகச் சொன்னாலும், மனிதர் உண்மையில் மூன்று முடிச்சுகள் போட்டுத்தானிருக்கிறார். பாகிஸ்தான் கலைஞர்களுக்குத் தடை விதிக்கக் கூடாது என தாக்கரேவுக்கு எதிராகப் பேசியிருப்பது முதல் முடிச்சு; ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் ரிப்போர்ட்டை ஆறு மாதத்துக்குள் வெளியிட வேண்டும் என, சிவசேனைக் காரர்களுக்கு எதிராக அபிப்பிராயம் தெரிவித்திருப்பது இரண்டாவது முடிச்சு; முதல்வரை மாற்ற வேண்டுமென்ற பொது கோரஸுக்கு செவிசாய்க்காமலிருப்பது மூன்றாவது முடிச்சு! கணக்கு சரிதானே?

மும்பை மசாலா!

பிரதமர் போட்ட

ஆடும் நாற்காலி

முதல்வரின் நாற்காலி ஆட்டம் கண்டிருப்பதாக அவ்வப்போது பீதி கிளம்பினாலும், அவர் அதில் சொகுசாக அமர்ந்து 'சாய்ந்தாடம்மா' ஆடுவதாக பாவ்லா காட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் அவரே இப்போது, 'இன்னும் எத்தனை நாளைக்கு இது என் வெயிட்டைத் தாங்குமோ?' எனச் சோகமாக கலவரப்பட்டிருப்பது, உண்மையிலேயே ஏராளமான 'ஸ்க்ரூ' கழன்று விட்டதை உணர்த்துகிறது. பட்ஜெட் தொடரின்போது காங்கிரஸ்காரர்கள், ஜோஷி குடும்பத்தாரின் ஊழல்களை அக்கு வேறு ஆணி வேறாக்கியபோதே, நாற்காலியின் 'நட் போல்டு'கள் கழன்று போக ஆரம்பித்தன. இப்போது பி.ஜே.பி.க்காரர்களே ஜோஷியின் சர்வாதிகாரத்தை எதிர்த்து, "எங்களைக் கலந்தாலோசிக்காமல் மந்திரி சபையில் மாற்றங்களைப் பற்றி முடிவு செய்ய இவர் யார்?" எனத் தாக்கரேவிடம் போர்க் கொடி உயர்த்தியிருப்பது நாற்காலி மீது, நெத்தியடியாக இறங்கி விட்டது! ஜோஷி பாவம், எப்போது கீழே விழுவோமோ என்ற அச்சத்துடனேயே நாற்காலியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்!

யாரைக் காப்பாற்ற?

பஜ்ரங்தள் ஆதரவாளர்கள் கையில் பூமாலையாகச் சிக்கித் தவித்திருக்கின்றன, எம்.எஃப். ஹுசைனின் மும்பை வீட்டிலிருந்த சில ஓவியங்கள். தங்கள் இஷ்ட தெய்வமான ஆஞ்சநேயருக்குக் காற்றை மட்டுமே ஆடையாக வரைந்ததைக் கூட மன்னித்திருப்பார்கள்; ஆனால், அவர் காப்பாற்றி தூக்கிச் சென்ற சீதா மாதாவிற்குக் கற்பு என்ற ஆடை ஒன்றே போதும் என ஹுசைன் விட்டிருந்ததை சகித்துக் கொள்ள முடியவில்லை!

'சீதை காப்பாற்றப்படுகிறார்' என்ற தலைப்பில், இந்த ஓவியம் அண்மையில் டில்லி கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது. ஹுசைன் இந்துக் கடவுளர்களை நிர்வாணப்படுத்தி, இந்துக்களின் உணர்வுகளோடு விளையாடுவதை இஸ்லாம் ஒருபோதும் ஏற்காது என "நேஷனல் கமிஷன் ஃபார் மைனாரிட்டி"யின் சேர்மனான தாஹிர் முகமத் அறிக்கை விட்டிருக்கிறார். சீதையைக் காப்பாற்றப் போய் ஹுசைன் வம்பில் மாட்டிக் கொண்டு விட்டார்!

டயல் 'M' ஃபார் 'மர்டர்'!

இந்த வருடத்தில் இதுவரை மும்பையில் 100 'மர்டர்'கள்! லேட்டஸ்ட்டாக, புகழ் பெற்ற 'காப்பர் சிம்னி' ரெஸ்டாரண்டின் மானேஜரை சுட்ட கொலைகாரர்கள் பயமின்றி நடந்து சென்று, டாக்ஸி பிடித்துச் சென்றிருக்கிறார்கள். காட்கோபர் பந்த் நகர் போலீஸ் ஸ்டேஷனில், கொலை கொள்ளைகளைத் தடுப்பது எப்படி எனக் காவல் துறை

யினர் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கையில், அங்கிருந்து கல்லெறித் தொலைவிலிருந்த நகைக் கடை ஒன்றில், பிஸ்டல் முனையில் 40 லட்சம் பறிபோயிருக்கிறது! ஆடிப் போய்விட்டது காவல் துறை! பொது மக்களுக்கு, 'க்ரைம் லைன்' ஒன்றையே கொடுத்துவிட்டது. இனி கொலை, கொள்ளை பற்றிய தகவல்களை 100 தவிர, 2620903 என்ற எண்ணிலும் டயல் செய்யலாம்; குலம், கோத்திரம், சாட்சி, காட்சி பற்றிய கவலையின்றி, ஏதேனும் ஒரு தேதியை மட்டும் 'code word' ஆகச் சொன்னால் போதும்; தகவல் சரியாக இருந்தால், 'அவார்டு' கொடுக்கத்தான் இந்த சிங்கேத தேதி!

ஸோஃபியாவும் (வீஜே) விரசமாக உரையாடி, அத்தனை பேர் முன்னிலையிலும் கட்டிப் பிடித்து முத்தமிட்டு விட்டனர். கூட்டத்தின் கற்பையே இது சூறையாடி விட்டதாகக் கொதித்தெழுந்த விஜிலன்ஸ் குழு, உடனே நிகழ்ச்சி வழங்குபவர்களுக்கு ஓர் அளவுகோல், அதைப் பார்ப்பவர்களுக்கு வேறொன்று என அலறி அடித்துக் கொண்டு, காவல் துறையிடம் முறையிட்டது. ஆனால் அவர்கள் அதை அவ்வளவாகக் 'கண்டு' கொள்ளவில்லை! கற்பு நிலைகளையும் அதன் வெளிப்பாட்டு விகிதங்களையும் பற்றி அரசு விரைவிலேயே அறிக்கை வெளியிட்டால் உபயோகமாக இருக்கும்!

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**


எது ஆபாசம்?

ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த 'ஸாவேஜ்கார்டன்' ராக் குழுவின் நிகழ்ச்சிக்கு, "ஆடியன்ஸ் அதிக

மூன்று முடிச்சுகள்!



பட்சம் கையைக் கோத்துக் கொள்ளலாம்; அதற்குமேல் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடிப்பதோ, ஆபாசமாக ஆடுவதோ, ஷர்ட்டைக் கழற்றுவதோ, முத்தமிடுவதோ கூடவே கூடாது" எனப் பிரமோத் நவால்கர் (கலாசார அமைச்சர்) ஆணையிட்டார். போலீஸ் மட்டும் போதாதென்று, தம் தரப்பில் நான்கு பேர் அடங்கிய ஒரு விஜிலன்ஸ் குழுவையும் கண்காணிப்புக்கென்று அனுப்பி வைத்தார். கடைசியில், இவர்கள் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு கண்காணித்தும், ஆடியன்ஸ் ஒன்றும் அத்துமீறவில்லை! மாறாக, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய மார்க் ராபின்சனும் (மாடல்),


"ரொம்ப
அப்பிராணி மாதிரி
இருந்துட்டு – லவ்
பண்ணி விட்டை
விட்டு வெளிய
வந்து கல்யாணம்
பண்ணிட்டி
யேடா.
பயங்கரமான
ஆளு...
ரொம்பத்
தான்
தைரியம்!"

யோகி

தூங்கிக் கொண்டு இருந்த என்னை சித்ரா தட்டி எழுப்பினாள்.

கண்களைத் திறக்காமலே, ''மணி என்னாச்சு?'' என்று கேட்டேன்.

"ஏழே முக்கால்."

"அதுக்குள்ள எதுக்கு எழுப்பினே?"

"ஏழே முக்கால்ங்கிறது அதுக்குள்ளயா... எந்திரிங்க. உங்களைத் தேடி ஒரு லேடி வந்து இருக்காங்க."

"என்னைத் தேடி ஒரு லேடியா?" என்று எழுந்தேன். கைலியை இறுகக் கட்டிக் கொண்டு ஹாலுக்கு வந்தேன். எனக்குத் தாங்க முடியாத சந்தோஷம். சித்ரா சொன்ன லேடி - அக்காதான்!

''வாக்கா... என்ன இந்த நேரத்துல... உட்காருக்கா.''

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்'' என்று சேரில் உட்கார்ந்தாள்.

"சித்ரா இதுதான் சாந்தியக்கா. நான் சொல்வேனே அந்த அக்காதான். நீ என்ன டான்னா யாரோ ஒரு லேடின்னு சொல்லிட்டு ஹால்லயே நிற்க வைச்சிட்டே..."

''அக்காவா... கூடப் பொறந்த அக்காவா?'' என்று சித்ரா கேட்டாள்.

''கூடப் பொறந்த அக்கா இல்லை. பத்து வருஷத்துக்கு முன்னாடி பிறந்த அக்கா!'' என்றதும் சித்ரா சிரித்தாள்.

''டேய் சுரேஷ்... உன் ஒய்பைப் பார்த்தியா, கூடப் பொறந்த அக்காவான்னு கேட்கிறா. ரொம்பத்தான் ஜாக்கிரதை உணர்வு!''

"அய்யோ... அப்படி இல்லேங்க. இவர் உங்களைப் பத்திச் சொல்லியிருக்கார். ஆனா நீங்க ரொம்ப யங்கா இருக்கீங்க. இவருக்கே தங்கச்சி மாதிரி இருக்கீங்க..." என்றாள் சித்ரா.

"டேய் உன்னைக் கிழவன்னு சொல்றா!" என்று அக்கா கேலி பேச, எல்லோரும் சிரித்தோம்.

சித்ரா பெட்ஷீட்டை தரையில் விரிக்க, அக்காவும் நானும் அமர்ந்தோம்.

"வேற ஸ்டூல் இல்லையா?"

''வாங்கணும்க்கா. வீட்டுல எல்லாரும் சௌக்கியம்தானேக்கா. மாமா, ஷோபனா எல்லோரும்... சித்ரா காப்பி கொண்டு வா."

''காப்பியை அப்புறமா குடிக்கிறேன். டிபனும் சாப்பிட்டுட்டுத்தான் போவேன். உன் ஒய்ப் எப்படி சமைக்கிறாள்னு தெரிய வேணாமா... ஏழே முக்கால் வரைக்குமா தூங்கறது. இனிமே இப்படித் தூங்கினா ஒரு வாளி தண்ணிய எடுத்து மேல ஊத்தி விடும்மா!'' என்றாள் அக்கா. சித்ரா சிரித்தாள்.

''அக்கா... சும்மா இரு. இவ மேல ஊத்தியே விட்டுடுவா!''

அக்காவும் சிரித்தாள்.

அக்கா எப்போதும் இப்படித்தான். நகைச்சுவை உணர்வு ரொம்ப. தொண தொணவென்று பேசிக் கொண்டும் இருப்பாள். ஸ்கூலில் நான் படித்துக் கொண்டு இருந்த காலத்தில் - ஒரு சமயம் மார்க் கம்மியாக வாங்கியிருந்தேன். அப்பா பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போட மறுத்தார். அக்கா சொன்னாள், 'அப்பா... நீங்க இதைவிட மார்க் கம்மியா வாங்கினது எனக்குத் தெரியும். பாட்டி சொல்லியிருக்கா. பிகு பண்ணாம கையெழுத்துப் போடுங்க. இல்ல, உங்க கையெழுத்தை நானே போட்டுடுவேன்!' என்று. அப்பா

சிரித்தவாறு கையெழுத்துப் போட்டார். அக்காவுக்கு தைரியம் ஜாஸ்தி.

இப்போதும் கூட அக்காவிடம் சொல்லி அப்பாவிடம் பேசச் செய்து இருந்தால் காதல் சுலபமாய்க் கைகூடி இருக்குமோ என்னவோ... அக்கா பேசியே ஜெயித்து விடுவாள்.

"ரொம்ப அப்பிராணி மாதிரி இருந்துட்டு – லவ் பண்ணி வீட்டை விட்டு வெளிய வந்து கல்யாணம் பண்ணிட்டியேடா. பயங்கரமான ஆளு... ரொம்பத்தான் தைரியம்!" என்றாள் அக்கா.

"நீ வீட்டுக்கு போனியாக்கா..."

"வழக்கம் போல் ஞாயித்துக்கிழமை போனேன். அம்மா அழுதுட்டே நீ பண்ணின காரியத்தைச் சொன்னா. சரி உன்



"பாராளுமன்றத்துல நம்ம எம்.பி. சதா இருமிக்கிட்டே இருக்காராமே!"

"பாராளுமன்றத்துல என் குரல் ஒலிச்சுக்கிட்டே இருக்கும்னு சொன்னார் இல்லையா... அதான்!"

– ஏ. கனகசபாபதி

னைப் பார்க்கணும்னு இன்னிக்கு வந்தேன். செவ்வாய்க்கிழமை, செவ்வாய்க் கிழமை முருகன் கோவிலுக்குப் போவேனா... கோவிலுக்குப் போயிட்டு அப்படியே வந்தேன். இந்தா விபூதி..." என்று விபூதியைக் கொடுத்தாள்.

"இன்னும் குளிக்கலேக்கா."

"இன்னும் சோம்பேறிப் பயலாதான் இருக்கியா. கல்யாணம் பண்ணியும் பொறுப்பு வரலை இல்லையா?" என்று சிரித்தாள்.

"என்ன உன் மிஸஸ் முறைக்கிறா. உன்னைக் கிண்டல் பண்றேன்னா...."

"அய்யோ அதெல்லாம் இல்லேங்க" என்றாள் சித்ரா.

"மாமா ஏதாவது சொன்னாராக்கா?"

"ம்... அப்பிராணி மாதிரி இருந்துட்டு பெரிய வேலை எல்லாம் பார்த்து இருக்கான்னு சொன்னார். சரி. உன் கல்யாணம் இப்படியாகணும்னு இருக்கும்போது அத மாத்த முடியுமா?"

"காப்பி குடிக்கா... சித்ரா எனக்கும் காப்பி கொண்டு வா."

சித்ரா எழுந்து உள்ளே போனாள்.

"இவ வீட்டோடயாவது பேச்சு வார்த்தை உண்டா?"

"இல்லேக்கா. சமாதானம் அடைய கொஞ்ச நாள் ஆகலாம்..."

அக்கா எழுந்து ஹாலில் இருந்த ஜன்னல் பக்கம் சென்று எட்டிப் பார்த்தாள். கிச்சனுக்குள் போனாள். பிறகு பெட்ரூமுக்குள் சென்று வந்தாள். "பரவாயில்லே.. வீடு நல்லா இருக்கு. வாடகை எவ்வளவு?"

"ஏழு நூறுக்கா!"

"உன் சம்பளத்துக்கு இந்த வாடகை அதிகம் இல்லையா?"

"ஆமாக்கா... சம்பளப் பணத்துல கால் வாசி வாடகைக்கே போயிடும். உடனே வேற வீடு கிடைக்கலை. போன திங்கட் கிழமை இந்த வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்தேன். வியாழக்கிழமை கல்யாணம் பண்ணிட்டு இங்க வந்துட்டோம். எல்லாமே கண் இமைக்கும் நேரத்துல நடந்தது போல் இருக்கு."

"சட்னு எப்படி எல்லாத்தையும் உதறிட்டு வர முடிஞ்சதுப்பா?" – அக்கா கேட்டாள். அக்காவின் சிரிப்பு மறைந்து போய் இருந்தது.

"முடியலதான்க்கா. ஆனா வேற வழி இல்லை. சூழ்நிலை. வெளிய ரெண்டு பேரும் சிரிச்சிட்டாலும் உள்ள அழுதுட்டு இருக்கோம். எனக்கு அம்மா ஞாபகம். இவளுக்குத் தன் வீட்டு ஞாபகம். எங்களால் அவரவர் வீட்டுக்கு நிறைய சங்கடங்கள். ஆனா தவிர்க்க முடியலை. யாரையும் புண்படுத்திட்டு, விரோதிச்சிட்டு இந்தக் காரியம் பண்ணணும்னு நினைக்கலே. நீ சொன்ன மாதிரி என் கல்யாணம் இப்படித்தான் ஆகணும்னு இருக்கும் போது அத மாத்த முடியுமா?"

"இவ வேலைக்குப் போறாளா... எங்க உங்க அறிமுகம் நிகழ்ந்தது?"

"நா கொஞ்ச நாள் டுடோரியல்ல வேலை பார்த்தேன்லயா. அப்ப இவ என் ஸ்டுடண்ட். பி.எஸ்ஸி. படிச்சிட்டு இருந்தா. அப்ப பழக்கம். மூணு வருஷம் லவ் பண்ணினோம். வேலைக்கு ட்ரை பண்ணிட்டு இருந்தா. கிடைக்கலை. இனி ஹவுஸ் ஒய்ப்பா இருக்கவே விரும்புறா."

சித்ரா காப்பி கொண்டு வந்தாள்.

"வீட்டுக்கான சாமான்கள் எதுவும் இன்

னும் வாங்கலை போல் இருக்கு!" அக்கா கேட்டாள்.

"ஆமாக்கா. சமையல் தேவைகளை மட்டும் வாங்கி இருக்கு. முதல்ல மிக்ஸி வாங்கணும். அப்புறம் போர்டபிள் டீவி. அப்புறம் காஸ் ஸ்டவ். இப்பவே லிஸ்ட் போட்டுட்டா..." என்றேன்.

சித்ரா சிரித்தாள்.

"நீதான்க்கா எங்க வீட்டுக்கு வர்ற முதல் கெஸ்ட்."

"சும்மா வந்தேன்னு நினைச்சியா... இங்க வாம்மா" என்று சித்ராவை அழைத்தாள். "என்ன கம்பெனி மிக்ஸி வாங்கணும்னு நினைக்கிறே? நா வாங்கித் தரேன். தம்பி கல்யாணத்துக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கணும் இல்லையா... என்ன கம்பெனி மிக்ஸி வேணும்?"

சித்ரா கம்பெனி பெயரைச் சொன்னாள்.

"சரி... ஈவினிங் நாம போயி வாங்கிடலாம். ஆபீஸ்ல இருந்து எத்தனை மணிக்கு வருவே சுரேஷ்?"

"அஞ்சரை மணிக்குக்கா..."

"அஞ்சரை மணிக்கு வந்துடுறேன். மூன்று பேரும் போயிடுவோம். ஆமா சுரேஷ்.. உதடு ரொம்ப கறுப்பா இருக்கு. ரொம்ப சிகரெட் பிடிக்கிறியா?"

"சிகரெட் எல்லாம் பிடிக்கிறது இல்லக்கா. அதைவிட்டு ரெண்டு வருஷமாச்சு."

"ரெண்டு வருஷமாச்சா..."

"ம்.. சித்ராவுக்கு சிகரெட் ஸ்மெல் பிடிக்கலை. விட்டுட்டேன்!"

"அப்படியா... நாங்க சொன்னப்ப எல்லாம் கேட்கலை. உனக்கு ஞாபகம் இருக்கா சுரேஷ்... நீ அப்ப காலேஜ் படிச்சிட்டு இருந்த சமயம்னு நினைக்கிறேன். மொட்டை மாடில நீ சிகரெட் பிடிக்கிறதை பார்த்துட்டு வந்து அப்பாகிட்ட சொன்னேன். அப்பா உன்னை அடி பின்னிட்டார் இல்லையா?"

நான் சிரித்தேன். அக்கா சிரித்தாள். சித்ராவும் சிரித்தாள்.

"ஷோபனாவையும் கூட்டிட்டு வந்திருக்கலாம்ல அக்கா?"

"இப்ப எக்ஸாம் டைம். டென்த். கவர்மெண்ட் எக்ஸாம் இல்லையா... நல்லா படிக்க வேணாம்?"

"உங்களுக்கு டென்த் படிக்கிற பொண்ணு இருக்கா! ரொம்ப யங்கா இருக்கீங்க. ரொம்ப அழகா இருக்கீங்க!" – சித்ரா வியந்தாள்.

"அக்கா அழகாயிருப்பதில் எனக்கும் பெருமை!" என்றேன்.



"அந்த நடிகரோட பந்தா தாங்க முடியல!"

"என்னவாம்?"

"அவர் படம் டி.வி.ல வர்றப்ப கூட வீடு வீடா ரசிகர் மன்ற வரவேற்பு குடுக்கணும்றார்!"

– அம்பை தேவா

"அக்கா... நா எப்ப வரலாம் உன் வீட்டுக்கு? வரலாம்ல. மாமா ஒண்ணும் சொல்ல மாட்டார்ல?"

"ஒண்ணும் சொல்ல மாட்டார்" என்ற அக்கா, சித்ரா பக்கம் திரும்பி, "கொஞ்சம் சுடுதண்ணி கொண்டு வர முடியுமா, குடிக்க" என்று கேட்டாள்.

"இதோ கொண்டு வர்றேன்" என்று சித்ரா அடுக்களைக்குள் போனாள்.

அக்கா தன் இயல்பான புன்னகையை, சப்தத்தைத் தவிர்த்து மெல்லப் பேசினாள்.

"சுரேஷ்... நா சும்மாதான் சொன்னேன், என் வீட்டுக்கு வான்னு. அதுக்காக வந்துடாதே. நா சொல்றதைக் கேட்டு சங்கடப்படாதே. மாமா ரொம்பவும் வருத்தப்படுறார் – சுரேஷா இப்படின்னு. அதோட என் பொண்ணு ஷோபனா பேசுறா... பதினைஞ்சு வயசுல என்ன பேச்சு பேசுறா தெரியுமா... 'மாமா லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டதுல என்ன தப்பு இருக்கு?'ன்னு ஆர்க்யூ பண்றா. உனக்குப் பரிஞ்சு பேசுறா. நா உன்னை என் வீட்டுக்கு அழைச்சிட்டேன்னு வை. அவ நாம லவ் பண்ணினாலும் வீட்டுல ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு நினைக்கக்கூடும். எவனையாவது கூட்டி வந்து, லவ் பண்றேன். கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லலாம். இது அதீதமான கற்பனைதான். ஆனா தவிர்க்க முடியலை. சாரி... புண்படுத்தற மாதிரி பேசியிருந்தா..." அக்கா என்னைச் சந்திக்க சங்கடப்பட்டதாலோ என்னவோ கண்களை மூடிக் கொண்டாள்.

சித்ரா தண்ணீர் கொண்டு வந்தாள். அக்கா வாங்கிக் குடித்தாள்.

எனக்கு அக்கா வராமலே இருந்திருக்கலாம் என்று தோன்றியது.

ஆட, இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?

ரத்தத்தையும் கூறுபோடலாம்!

ரத்த தானம் பற்றி நமக்கு ஓரள வாவது தெரிந்திருக்கும். இப்படி பெறப்படும் ரத்தம் யாருக்குத் தேவைப் படுகிறதோ அவர்கள் உடலில் செலுத் தப்படுகிறது என்பது ஓர் அடிப்படை உண்மை என்று தோன்றுவது இயல்பு.

ஆனால் இது ஒரு விதத்தில் அநி யாயம் என்று கருதும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வாதம் இதுதான். "தானமாகப் பெறப்படும் ரத்தத்தை அப்படியே எவருக்கும் செலுத்த வேண்டியதில்லை. பாதிக்கப் பட்ட ஒருவருக்கு ரத்தத்தின் எந்தப் பகுதி தேவைப்படுகிறதோ அதை மட் டுமே செலுத்தினால் போதும்.

உதாரணமாக அனீமியாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிவப் பணுக்கள் மட்டுமே செலுத்தப்பட் டால் போதும். அறுவை சிகிச்சைக்கு உள்ளாகிறவர்களுக்கும் இதேதான்.

தீக்காயங்களால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ப்ளாஸ்மாவை மட்டுமே உட்செலுத்தினால் போதும் (ப்ளாஸ்மா என் பது ரத்தத்தில் உள்ள லேசான மஞ்சள் நிறத் தில் காணப்படும் ஒருவித திரவம். இதில் சுமார் 90 சதவீதம் நீர்தான். கொஞ்சம் புரதம் கொஞ்சம் தாது உப்புகள் ஆகியவை மிச்சம் உள்ள கொஞ்ச சதவிகிதத்தில் இடம் பெறு கின்றன.)

ரத்தம் உறைவதற்கு ப்ளேட்லெட்ஸ் என்ற பகுதி உதவுகிறது. சில குறிப்பிட்ட வியாதிகளிலாலோ, தொடர்ந்து சில வகை மருந்துகளை உட்கொள்ள வேண்டிய கட் டாயம் ஏற்படும் போதோ, இந்த ப்ளேட் லெட்களின் எண்ணிக்கை திடீரென்று கணிச மாகக் குறைந்து விடலாம். இவர்கள் உடலில் ப்ளேட்லெட்களை மட்டுமே செலுத்தினால் போதுமானது.

"ஃபேக்டர் VIII" என்ற சத்து சில குழந்தை களுக்கு, பரம்பரை காரணமாக, இயற்கை யாகவே மிகக் குறைந்த அளவில் அமைந்து விடும். ஏதாவது காயம்பட்டால் இவர்கள் உடலில் தொடர்ந்து ரத்தம் பெருகிக் கொண் டிருக்கும். இவர்கள் உடலில் பிளேட் லெட்களை மட்டும் ஏற்றினால் போது மானது.

இப்படி ரத்தத்தைப் பகுதி பகுதியாகக் கூறு போட்டு அளிக்கும் சில ரத்த வங்கி களில் ஒன்று, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள "ஜீவன்". இதன் இயக்குனரான டாக்டர் பி. ஸ்ரீநிவாஸனை சந்தித்து விளக்கம் கேட்டோம்.

"இப்படி ரத்தத்தைப் பிரிப்பதின் முக்கிய நன்மை என்பது இதுதான். வழக்கமாக ஒரு வரது உடலிலிருந்து பெறப்படும் ரத்தத்தை ஒருவருக்கு அளிக்கலாம் என்றால், இப்படி ரத்தத்தின் கூறுகளைப் பிரிப்பதன் மூலம் நாலு பேருக்கு பயன்படச் செய்யலாம். அதுமட்டுமல்ல ரத்தத்தின் பல்வேறு பகுதிகளைப் பிரித்து வைப்பதன் மூலம் குறிப்பிட்ட குறைந்தபட்ச வெப்ப நிலையில் இவற்றை அதிக காலத்துக்கும் பாதுகாக்க லாம்."

எவ்வளவு காலத்துக்கு? சிவப்பணுக்களை நாற்பத்தி இரண்டு நாட்கள் வரையிலும், ப்ளேட்லெட்களை ஐந்து நாட்கள் வரை யிலும், ப்ளோஸ்மாவை ஒரு வருடம் வரை யிலும் கூட பாதுகாக்கலாம். அது மட்டு மல்ல. மேலே சொன்ன மூன்று பிரிவு களைத் தவிர நான்காவதாக ஒன்றும் ரத்தத்தில் இருப்பதாகக் கண்டு பிடித் திருக்கிறார்கள். அது க்ரையோப்ரிஸி பிடேட். இது ஹீமோபீலியா என்ற உடல்நிலை பாதிப்புக் கொண்டவர் களுக்குப் பெரிதும் உதவுகிறது.

— ஜி. எஸ். எஸ்.



பொன்னியின் செல்வன்



நாற்பத்திரெண்டாம் அத்தியாயம்


நட்புக்கு அழகா?

வந்தியத்தேவனுடைய முதல் எண்ணம், எப்படியாவது கந்தமாறனைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். ஆனால் அவனைக் காப்பாற்றும் பிரயத்தனம் முதலில் செய்தால், அவனுடைய கதிதான் நமக்கும் ஏற்படும். ஆகையால் இந்தக் கொடூரக் காவலனை முதலில் சரிப்படுத்த வேண்டும். எனவே, பாய்ந்து சென்றவன் காவலனுடைய கழுத்தில் தன்னுடைய ஒரு கையைச் சுற்றி வளைத்துக் கொண்டான். இன்னொரு கையால் தீவர்த்தியைத் தட்டிவிட்டான். தீவர்த்தி தரையில் விழுந்தது. அதன் ஒளிப் பிழம்பு சுருங்கிப் புகை அதிகமாயிற்று. காவலனுடைய கழுத்தை ஒரு இறுக்கு இறுக்கி வந்தியத்தேவன் தன் பலத்தையெல்லாம் பிரயோகித்து அவனைக் கீழே தள்ளினான். காவலனுடைய தலை சுரங்கப் பாதையின் சுவரில் மோதியது. அவன் கீழே விழுந்தான். வந்தியத்தேவன் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு அவன் அருகில் சென்று பார்த்தான். செத்தவனைப் போல் அவன் கிடந்தான். ஆயினும் முன் ஜாக்கிரதையுடன் அவன் அங்கவஸ்திரத்தை எடுத்து இரண்டு கையையும் சேர்த்து இறுக்கிக் கட்டினான். இவ்வளவையும் சில வினாடி நேரத்தில் செய்து விட்டுக் கந்தமாறனிடம் ஓடினான். அவன் முதுகில் குத்திய

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

கத்தியுடன் பாதி உடம்பு சுரங்கப் பாதையிலும் பாதி உடல் வெளியிலுமாகக் கிடப்பதைக் கண்டான். அவனுடைய வேலும் பக்கத்தில் விழுந்து கிடந்தது. வந்தியத்தேவன் வெளியில் சென்று கந்தமாறனைப் பிடித்து இழுத்து வெளியேற்றினான். வேலையும் எடுத்துக் கொண்டான். உடனே கதவு தானாகவே மூடிக் கொண்டது. சுவர் அந்தப் பெரும் இரகசியத்தை மறைத்துக் கொண்டு இருள் வடிவமாக ஓங்கி நின்றது. ஓங்கி அடித்த காற்றிலிருந்து கோட்டைக்கு வெளியே வந்தாகி விட்டது என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். அடர்ந்த மரங்களும் கோட்டைச் சுவர் கொத்தளங்களும் சந்திரனை மறைத்துக் கொண்டிருந்தபடியால் நிலா வெளிச்சம் மிக மிக மங்கலாகத் தெரிந்தது. கந்தமாறனைத் தூக்கி வந்தியத்தேவன் தோளில் போட்டுக் கொண்டான். ஒரு கையில் கந்தமாறனின் வேலையும் எடுத்துக் கொண்டான். ஓர் அடி எடுத்து வைத்தான். சடசடவென்று மண் சரிந்து செங்குத்தாகக் கீழே விழும் உணர்ச்சி ஏற்பட்டது. சட்டென்று வேலை ஊன்றிக் கொண்டு பெரு முயற்சி செய்து நின்றான். கீழே பார்த்தான். மரங்களும் கோட்டைச் சுவரும் அளித்த நிழலில் நீர்ப் பிரவாகம் தெரிந்தது. அதிவேகமாகப் பிரவாகம் சுழல்கள் சுழிகளுடன் சென்று கொண்டிருந்ததும் ஒருவாறு தெரிந்தது. நல்ல வேளை! கரணம் தப்பினால் மரணம் என்ற கதி நேரிட்டிருக்கலாம். கடவுள் காப்பாற்றினார்! அந்தக் கொடும் பாதகக் காவலன்–ஆனால். அவனை நொந்து என்ன பயன்? எஜமான் கட்டளையைத் தானே அவன் நிறைவேற்றியிருக்க வேண்டும்!– வாசற்படியில் முதுகில் குத்தி அப்படியே இந்தப் பள்ளப் புனல் வெள்ளத்தில் தள்ளிவிட உத்தேசித்திருக்க வேண்டும். நம்முடைய கால் இன்னும் சிறிது சறுக்கி விட்டிருந்தால் இரண்டு பேரும் இந்த ஆற்று மடுவில் விழுந்திருக்க நேர்ந்திருக்கும். நாம் ஒருவேளை தப்பிப் பிழைத்தாலும் கந்தமாறன் கதி அதோகதிதான்! தஞ்சைக் கோட்டைச் சுவரை ஓரிடத்தில் வடவாறு நெருங்கிச் செல்வதாக வந்தியத்தேவன் அறிந்திருந்தான். இது வடவாறாகத்தான் இருக்க வேண்டும். வடவாற்றில் அதிக வெள்ளம் அப்போது இல்லையென்றாலும் இந்தக்கோட்டை ஓரத்தில் ஆழமான மடுவாக இருக்கலாம். யார் கண்டது? வேலை தண்ணீரில் விட்டு ஆழம் பார்த்தான் வந்தியத்தேவன். வேல் முழுவதும் தண்ணீருக்குள் சென்று மூழ்கியும் தரை தட்டுப்படவில்லை! ஆகா! என்ன கொடூரமான பாதகர்கள் இவர்கள்!... அதைப் பற்றி யோசிக்க இது சமயமில்லை. நாமும் தப்பிக் கந்தமாறனையும் தப்புவிக்கும் வழியைத் தேட வேண்டும். வெள்ளப் பிரவாகத்தின் ஓரமாகவே கால்கள் சறுக்கி விடாமல் கெட்டியாக அழுத்திப் பாதங்களை வைத்து வந்தியத்தேவன் நடந்தான். தோளில் கந்தமாறனுடனும் கையில் அவனுடைய வேலுடனும் நடந்தான். கந்தமாறன் இரண்டு மூன்று தடவை முக்கி முனகியது அவனுடைய நண்பனுக்குத் தைரியத்தையும் மன உறுதியையும் அளித்தது. கொஞ்ச தூரம் இப்படியே சென்ற பிறகு கோட்டைச் சுவர் விலகி அப்பால் சென்றது. கரையோரத்தில் காடு தென்பட்டது. கீழே முட்கள் நிறையக் கிடந்தபடியால் கால் அடி வைப்பதும் கஷ்டமாயிருந்தது. ஆகா! இது என்ன? ஒரு மரம் ஆற்றில் விழுந்து கிடக்கிறதே! நல்ல உயரமான மரமாயிருந்திருக்க வேண்டும். வெள்ளம் அதனுடைய வேரைப் பறித்துவிட்டது போலும்! பாதி ஆறு வரையில் விழுந்து கிடக்கிறது. அதில் ஏறித் தட்டுத் தடுமாறி நடந்தான். வெள்ளத்தின் வேகத்தில் மரம் அசைந்து கொண்டிருந்தது. மரத்தின் கிளைகளும் இலைகளும் தண்ணீரில் அலைப்புண்டு தவித்தன. காற்றோ அசாத்தியமாக அடித்துக் கொண்டிருந்தது. மரத்தின் நுனிக்கு வந்ததும் வேலை விட்டு ஆழம் பார்த்தான். நல்லவேளை! முருகன் காப்பாற்றினார். இங்கே அவ்வளவு பள்ளமில்லை! வந்தியத்தேவன் மரத்திலிருந்து நதியில் இறங்கிக் கடந்து சென்றான். அங்கங்கே பள்ளம் மேடுகளைச் சமாளித்துக் கொண்டு சென்றான். வெள்ளத்தின் வேகத்தையும் காற்றின் தீவிரத்தையும் தன் மன உறுதியினால் எதிர்த்துப் போராடிக் கொண்டு சென்றான். அவன் உடம்பு வெடவெடவென்று சில சமயம் நடுங்கி



யது. தோளில் கிடந்த கந்தமாறன் சில சமயம் நழுவி விழுந்துவிடப் பார்த்தான். இந்த அபாயங்களையெல்லாம் தப்பி வந்தியத்தேவன் அக்கரையை அடைந்தான். கொஞ்ச தூரம் இடுப்பு வரை நனைந்த ஈரத் துணியுடன் ஆஜானுபாகுவான கந்தமாறனுடைய கனமான உடலைத் தூக்கிக் கொண்டு தள்ளாடிச் சென்ற பிறகு மரநிழலில் சிறிது இடைவெளி ஏற்பட்ட ஓரிடத்தில் கந்தமாறனைக் கீழே மெதுவாக வைத்தான். முதலில் சிறிது சிரமபரிகாரம் செய்து கொள்ள விரும்பினான். அத்துடன் கந்தமாறனுடைய உடம்பில் இன்னும் உயிர் இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பினான். உயிரற்ற உடலைச் சுமந்து சென்று என்ன உபயோகம்? அதைக் காட்டிலும் அக்காவலன் உத்தேசித்தது போல் வெள்ளத்திலேயே விட்டுவிட்டுச் செல்லலாம். இல்லை! இல்லை! உயிர் இருக்கிறது. பெருமூச்சு வருகிறது. நாடி வேகமாக அடித்துக் கொள்ளுகிறது. நெஞ்சு விம்முகிறது. இப்போது என்ன செய்யலாம்? முதுகிலிருந்து கத்தியை எடுக்கலாமா? எடுத்தால் இரத்தம் பீறிட்டு அடிக்கும். அதனால் உயிர் போனாலும் போய்விடும். காயத்துக்கு உடனே சிகிச்சை செய்து கட்டுக் கட்ட வேண்டும். ஒருவனாகச் செய்யக் கூடிய காரியமல்லவே? வேறு யாரை உதவிக்குத் தேடுவது?... சேந்தன் அமுதனுடைய நினைவு வந்தது. அவனுடைய தோட்டமும் வீடும் வடவாற்றின் கரையிலேதான் இருக்கிறது. இங்கே சமீபத்திலேயே இருக்கக் கூடும். எப்படியாவது சேந்தன் அமுதனுடைய வீட்டுக்குத்தூக்கிக் கொண்டு போய்ச் சேர்த்தால் கந்தமாறன் பிழைக்க வழியுண்டு. ஒரு முயற்சி செய்து பார்க்கலாம்.

கந்தமாறனை மறுபடியும் தூக்க முயன்றபோது அவனுடைய கண்கள் திறந்திருப்பதைக் கண்டு வந்தியத்தேவன் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டான்.

"கந்தமாறா! நான் யார் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"தெரிகிறது, நன்றாய்த் தெரிகிறது. வல்லவரையவன் நீ! உன்னைப் போல் அருமையான நண்பனைத் தெரியாமலிருக்குமா? மறக்கத்தான் முடியுமா? பின்னால் நின்று முதுகிலே குத்தும் ஆப்த சிநேகிதன் அல்லவா நீ?" என்றான் கந்தமாறன்.

வல்லவரையனை இந்தக் கடைசி வார்த்தைகள் சவுக்கினால் அடிப்பது போலிருந்தது.

"ஐயோ! நானா உன்னைப் பின்னாலிருந்து குத்தினேன்...?" என்று ஆரம்பித்தவன் ஏதோ ஞாபகம் வந்து சட்டென்று நிறுத்தினான்.

"நீ குத்தவில்லை... உன் கத்தி என் முதுகைத் தடவிக் கொடுத்தது... அடபாவி! உனக்காகவல்லவா இந்தச் சுரங்க வழியில் அவசரமாகக் கிளம்பினேன். பழுவேட்டரையருடைய ஆட்கள் உன்னைப் பிடிப்பதற்குள் நான் பிடிப்பதற்காக விரைந்தேன். உன்னை யாரும் எந்தவித உபத்திரவமும் செய்யாமல் தடுப்பதற்காக ஓடி வந்தேன். உன்னைத் தேடிப் பிடித்து வந்து சின்னப் பழுவேட்டரையரின் கோட்டைக் காவல் படையில் சேர்த்து விடுவதாகச் சபதம் கூறிவிட்டு வந்தேன். இப்படி உனக்கு நன்மை செய்ய நினைத்த நண்பனுக்கு நீ எவ்வாறு துரோகம் செய்து விட்டாய்! இதுதானா நட்புக்கு அழகு? நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டுமென்று எத்தனை தடவை கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்! அவ்வளவையும் காற்றில் பறக்கும்படி விட்டு விட்டாயே! இந்தச் சோழ நாட்டு இராஜாங்கத்தில் நடக்கப் போகும் ஒரு பெரிய மாறுதலைப் பற்றியும் உனக்குச் சொல்லி எச்சரிக்க எண்ணியிருந்தேனே! அடாடா! இனி இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது?"

என்று சொல்லிக் கந்தமாறன் மறுபடியும் கண்களை மூடினான். இவ்வளவு அதிகமாகவும் ஆத்திரமாகவும் பேசியது அவனை மீண்டும் மூர்ச்சையடையும்படி செய்திருக்க வேண்டும்.

"நம்புவதற்கு மனிதர்களா இல்லை? பழுவேட்டரையர்களை நம்புவது?" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான். ஆயினும் அவனுடைய கண்களில் கண்ணீர் துளித்தது. தான் சொல்ல எண்ணியதைச் சொல்லாமல் விட்டதே நல்லது என்று எண்ணிக் கொண்டான். கந்தமாறனுடைய சடலத்தை மறுபடி தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கலுற்றான்.

இரவில் மலரும் பூக்களின் நறுமணம் குபீரென்று வந்தது... சேந்தன் அமுதனுடைய வீடு சமீபத்தில்தான் இருக்க வேண்டும் என்று அவன் எண்ணியது வீண் போகவில்லை. விரைவில் தோட்டம் வந்தது. ஆனால் அந்தத் தோட்டம்! முதல் நாள் பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்? அனுமார் அழித்த அசோக வனத்தையும் வானரங்கள் அழித்த மதுவனத்தையும் அத்தோட்டம் அப்போது ஒத்திருந்தது. ஆகா! தன்னைத் தேடிக் கொண்டு பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கே வந்திருந்தார்கள் போலிருக்கிறது. வந்தவர்கள் இத்தகைய அக்கிரமங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்! அடடா! சேந்தன் அமுதனும் அவனுடைய அருமை அன்னையும் எவ்வளவு அரும்பாடுபட்டு இந்த நந்தவனத்தை வளர்த்திருக்க வேண்டும்? அவ்வளவும் பாழாய்ப் போய்விட்டதே!

நந்தவனம் அழிந்ததில் அனுதாபம் சட்டென்று விலகியது. தன்னுடைய அபாயகரமான நிலைமை நினைவு வந்தது. ஒற்றர்களும் கோட்டைக் காவல் வீரர்களும் இங்கே சமீபத்தில் எங்கேயாவது காத்திருந்தால் என்ன செய்வது?... அவர்களை ஒரு கை பார்த்துச் சமாளிக்க வேண்டியதுதான். நல்லவேளையாக, அதோ நமது குதிரை, கட்டிய மரத்திலேயே இன்னும் இருக்கிறது!.. ஒருவேளை தன்னைப் பிடிப்பதற்காகவே அதைவிட்டு வைத்திருக்கிறார்களோ? எப்படியிருந்தாலும் என்ன செய்ய முடியும்? இவனை இக் குடிசையில் உள்ள நல்ல மனிதர்களிடம் ஒப்புவித்து விட்டுக் குதிரையில் ஏறித் தட்டிவிட வேண்டியதுதான். இங்கே புறப்படும் குதிரை பழையாறை போய்த்தான் நிற்க வேண்டும்.

மெள்ள மெள்ள அடிமேல் அடி வைத்து நடந்து குடிசை வாசலை அடைந்தான் வாசல் திண்ணையில் படுத்திருந்த சேந்தன் அமுதனைத் தட்டி எழுப்பினான். தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்த அமுதனுடைய வாயைப் பொத்தினான். பிறகு மெல்லிய குரலில் சொன்னான்:–"தம்பி! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இவன் என் அருமை சிநேகிதன். கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். நான் வரும் வழியில் யாரோ இவனை முதுகிலே குத்திப் போட்டிருந்தார்கள். எடுத்து வந்தேன்" என்றான்.

"படுபாவிகள்! முதுகிலே குத்தியிருக்கிறார்களே! எப்பேர்பட்ட சுத்த வீரர்கள்!" என்றான் அமுதன்.

பிறகு, "இவனை என்னால் முடிந்த வரை பார்த்துக் கொள்கிறேன். இன்று மாலையிலிருந்து கும்பல் கும்பலாகப் பல வீரர்கள் வந்து உன்னைத் தேடிவிட்டுப் போனார்கள். அவர்களால் நந்தவனமே அழிந்து போய் விட்டது. போனாலும் போகட்டும். நீ தப்பிப் பிழைத்தால் சரி. நல்லவேளையாக உன் குதிரையை அவர்கள் விட்டுப் போய் விட்டார்கள். குதிரையில் ஏறி உடனே புறப்படு!"

"அப்படித்தான் என் உத்தேசமும். ஆனால் இவன் உயிரைக் காப்பாற்ற ஏதேனும் செய்ய வேண்டும்!"

"அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம். என் தாயார் இம்மாதிரி விஷயங்களில் கைதேர்ந்தவள். காயங்களுக்குச் சிகிச்சை செய்ய அவளுக்கு நன்றாய்த் தெரியும்" என்று சொல்லி, சேந்தன் அமுதன் குடிசையின் கதவை இலேசாக இரண்டு தட்டுத் தட்டினான். உடனே கதவு திறந்தது. சேந்தன் அமுதனுடைய அன்னை வாசற் படியில் நின்றாள்.



கந்தமாறனை இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் உள்ளே கூடத்தில் போட்டார்கள். கைவிளக்கின் வெளிச்சத்தில் சேந்தன் அமுதன் தன் அன்னையுடன் சமிக்ஞையினால் பேசினான். அதை அவள் நன்கு அறிந்து கொண்டதாகத் தோன்றியது. கந்தமாறனை உற்றுப் பார்த்தாள். முதுகில் செருகியிருந்த கத்தியைப் பார்த்து, பிறகு உள்ளே போய்ச் சில பச்சிலைத் தழைகளையும் பழந்துணியையும் எடுத்துக் கொண்டு வந்தாள். இருவரையும் நிமிர்ந்து பார்த்தாள்.

கந்த்மாறனைச் சேந்தன் அமுதன் இறுக்கிப் பிடித்துக் கொண்டான். முதுகில் இத்தனை நேரமாய் நீட்டிக் கொண்டிருந்த கத்தியை வல்லவரையன் பலங்கொண்டு இழுத்து வெளியேற்றினான்.

இரத்தம் குபீரென்று வெளியிட்டுப் பாய்ந்தது.

உணர்ச்சியற்ற நிலையில் கந்தமாறன் 'ஓ'வென்று கத்தினான்.

வந்தியத்தேவன் அவனது வாயைப் பொத்தினான்.

காயத்தைச் சேந்தன் அமுதன் அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

அமுதனுடைய அன்னை பச்சிலைத் தழைகளைக் காயத்தில் வைத்துக் கட்டினாள்.

கந்தமாறன் மறுபடியும் முக்கி முனகினான்.

தூரத்தில் திடுதிடுவென்று மனிதர்கள் ஓடிவரும் சத்தம் கேட்டது.

"போ! போ! சீக்கிரம்!" என்றான் அமுதன்.

இரத்தக்கறை படிந்த கத்தியையும் வேலையும் கையில் எடுத்துக் கொண்டான் வந்தியத்தேவன். புறப்பட்டவன் தயங்கி நின்றான்.

"தம்பி! நீ என்னை நம்புகிறாயா?" என்று கேட்டான்.

"நான் கடவுளை நம்புகிறேன். உன்னிடம் பிரியம் வைத்திருக்கிறேன். எதற்காகக் கேட்டாய்?"

"எனக்கு ஒரு உதவி செய்ய வேணும். இந்தப் பக்கத்தில் எனக்கு அவ்வளவாக வழி தெரியாது. அவசரமாகப் பழையாறைக்குப் போக வேண்டும். குந்தவைப் பிராட்டிக்கு முக்கியமான செய்தி ஒன்று கொண்டு போக வேண்டும். கொஞ்ச தூரம் வழி காட்டுவதற்கு வருகிறாயா?" உடனே சேந்தன் அமுதன் தன் அன்னையிடம் இன்னும் ஏதோ ஜாடையாகச் சொன்னான். இதிலெல்லாம் அவள் அதிக வியப்பு அடைந்ததாகத் தோன்றவில்லை. போய் வரும்படி சமிக்ஞையினால் தெரிவித்தாள். காயம் பட்டவனைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் ஜாடை காட்டினாள்.

சேந்தனும் தேவனும் புறப்பட்டுச் சென்றார்கள். முதலில் தேவனும் பின்னால் சேந்தனும் குதிரை மேல் ஏறிக் கொண்டார்கள்.

குதிரையின் சத்தம் கேளாதபடி மெதுவாகவே செலுத்தினான் வந்தியத்தேவன்: சற்றுத் தூரம் போன பிறகு தட்டி விட்டான். குதிரை பாய்ச்சலில் பியத்துக் கொண்டு சென்றது.

குதிரை புறப்பட்ட அதே நேரத்தில் ஐந்தாறு வீரர்கள் குடிசைக்கு வந்து சேர்ந்தார்கள். கதவைத் தடதடவென்று தட்டினார்கள். அமுதனின் தாய் கதவைத் திறந்தாள். வாசற்

படியில் நின்றாள்.

"இங்கே என்னமோ கூச்சல் கேட்டதே? அது என்ன? என்று இரைந்தான் ஒரு வீரன்.

அமுதனின் அன்னை ஏதோ உளறிக் குளறினாள்.

"இந்தச் செவிட்டு ஊமையிடம் பேசி என்ன பயன்? உள்ளே போய்ப் பார்க்கலாம்!" என்றான் ஒருவன்.

"இவள் வழிமறித்துக் கொண்டு நிற்கிறாளே?"

"அந்தப் பூக்குடலைப் பையன் எங்கே போனான்?"

"ஊமையைத் தள்ளிவிட்டு உள்ளே நுழையுங்களடா!"

சேந்தன் அமுதனுடைய தாயார் மேலும் ஊமைப் பாஷையில் ஏதேதோ கத்தினாள்.

தன்னைத் தள்ள முயன்ற வீரனை அவள் 'தள்ளிவிட்டுக் கதவைத் தாளிடப் பார்த்தாள். நாலைந்து பேராகக் கதவைப் பிடித்துக் தள்ளிச் சாத்த முடியாதபடி செய்தார்கள்.

அமுதனுடைய தாய் இன்னும் உரத்த கூச்சல் புலம்பலுடன் திடீரென்று கதவை விட்டாள்.

இரண்டு மூன்று பேர் கீழே உருட்டியடித்துக் கொண்டு விழுந்தார்கள்.

மற்றவர்கள் அவர்களை மிதித்துக் கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

"ஆள் இங்கே இருக்கிறான்!" என்று ஒருவன் கத்தினான்.

"அகப்பட்டுக் கொண்டானா?" என்றான் இன்னொருவன்.

"ஓடப் போகிறான்! பிடித்துக் கட்டிப் போடுங்கள்!" என்றான் இன்னொருவன்.

ஊமை மேலும் புலம்பினாள்.

"ஒரே இரத்த விளாறாக இருக்கிறதே!" என்று ஒருவன் கூவினான்.

ஊமை கைவிளக்கைத் தூக்கிப் பிடித்துக் கீழே கிடந்தவனைச் சுட்டிக் காட்டி, "பே!பே!பே!" என்றாள்.

"அடே! இவன் வேறு ஆள் போலத் தோன்றுகிறதே!"

"பே! பே!"

"நேற்று இங்கு வந்திருந்தவன் தானா இவன்?"

"பே! பே!"

"உன் மகன் எங்கே?"

"பே! பே!"

"ஊமைப் பிணமே! சற்றுச் சும்மா இரு! அடே இவனை நன்றாய்ப் பாருங்கள்! அடையாளம் யாருக்காவது தெரியுமா?"

"அவன் இல்லை!"

"அவன்தான்!"

"இல்லவே இல்லை?!"

"பே! பே!"

"எப்படியிருந்தாலும் இவன் வேற்று ஆள்! தூக்குங்கள் இவனை! கொண்டு போகலாம்!"





"பே! பே! பே! பே!"

"சனியனே! சும்மா இரு!"

நாலுபேர் சேர்ந்து கந்தமாறனைத் தூக்கினார்கள்.

"பே! பே! பே! பே! பே!" என்று அமுதனுடைய அன்னை இடைவிடாமல் அலறினாள்.

''அடே! குதிரைச் சத்தம் கேட்கிறதடா!''

"பாதிப் பேர் இவனைத் தூக்குங்கள்! பாதிப்பேர் ஓடிப் போய்ப் பாருங்கள்!"

"எல்லோரும் ஓடுங்கள்! இவன் எங்கும் போய்விட மாட்டான்."

தூக்கிய கந்தமாறனைக் கீழே போட்டு விட்டு எல்லோரும் ஓடினார்கள். "பேப்பே! பேப்பே! பேப்பே!" என்ற அமுதன் அன்னையின் ஓலம் அவர்களைத் தொடர்ந்து வந்தது.

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

பழையாறை

வந்தியத்தேவன் வழியில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி, பல அபாயங்களுக்குத் தப்பிப் பழையாறை நகருக்கு வந்து சேர்வதற்கு முன்னால், நம்முடன் பழையாறைப் பதிக்கு விஜயம் செய்யும்படி நேயர்களை அழைக்கிறோம்.

அரிசிலாற்றுக்குத் தென் கரையில் நின்று அந்நகரைப் பார்ப்போம். அடடா! வெறும் நகரமா இது? தமிழ்த் தாயின் அழகிய நெற்றியில் தொங்கும் ஆபரணத்தைப் போல அல்லவா விளங்குகிறது? பச்சை மரகதங்களும், சிவந்த ரத்தினங்களும், நீலக்கற்களும் பதித்த நெற்றிச் சுட்டியைப் போல அல்லவா திகழ்கிறது!

நதிகளும் ஓடைகளும் தடாகங்களும் கழனிகளும் புதுநீர் நிறைந்து ததும்புகின்றன. அவற்றில் பல வர்ண மலர்கள் பூத்துத் திகழ்கின்றன. தென்னை மரங்களும் புன்னை மரங்களும் குளிர்ச்சியான பசுமையைப் புரப்புகின்றன. இவ்வளவுக்கும் இடையிடையே விண்முட்டும் மணி மாடமாளிகைகளின் பொற்கலசங்களும், கோயில் கோபுரங்களின் உச்சியில் உள்ள தங்க ஸ்தூபிகளும் ஒளிவீசுகின்றன.

அப்பப்பா! பழையாறை என்னும் இந்த ஒரு பெரும் நகரத்துக்குள்ளே எத்தனை சிறிய ஊர்கள்? நந்திபுர விண்ணகரம், திருச்சத்தி முற்றம், பட்டீச்சுரம், அரிச்சந்திரபுரம் முதலிய ஊர்களும் அந்த ஊர்களின் ஆலயங்களும் இந்தப் பழையாறை என்னும் சோழர் தலைநகரில் அடங்கியுள்ளன. பழையாறையின் நாலு திசைகளிலும் வடதளி, கீழ்த்தளி, மேற்றளி, தென்தளி என்னும் நாலு சிவனார்


கோயில்கள் இருக்கின்றன. போர் வீரர்கள் குடியிருக்கும் ஆரியப் படை வீடு, புதுப் படைவீடு, மணப்படை வீடு, பம்பைப் படைவீடு ஆகிய நாலு வீரபுரிகள் காணப் படுகின்றன. இவ்வளவுக்கும் நடுநாயக மாகச் சோழ மாளிகை என்றால், ஒரே மாளிகையா? விஜயாலய சோழருக்கு முன்னால் இது ஒரு தனி மாளிகையாக இருந்தது. பிறகு ஒவ்வொரு அரசகுமார னுக்கும் ஒவ்வொரு இளவரசிக்குமாகப் பழைய சோழமாளிகையையொட்டிப் புதிய புதிய மாளிகைகள் எழுந்து நிற்கும் காட்சியைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும். வர்ணிப்பதற்கோ பதினாயிரம் கவிஞர்களின் கற்பனாசக்தி போதாது.

இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த சேக்கிழார் பெருமான்,

"தேரின் மேவிய செழுமணி வீதிகள்
சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதி
பழையாறை"

என்று வர்ணித்தார் என்றால், சுந்தர சோழரின் காலத்தில் இந்த நகர் எவ்வளவு கோலாகலமாயிருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

எனினும், நாம் முதன் முதலில் இந்தப் பழம்பெரும் பதிக்குச் செல்லும் சமயத்தில் அதைப் பூரண கோலா கலத் தோற்றத்துடன் பார்த்து மகிழ முடியவில்லை.



சுந்தர சோழ சக்கரவர்த்தி இந்நகரின் சோழ மாளிகையில் வீற்றிருந்து அரசு செலுத்திய காலத்தில் இங்கு வந்து பார்க்க நமக்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை.


சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை மாநகர் சென்ற பிறகு வெளிநாடுகளி லிருந்து சிற்றரசர்களும் இராஜ தூதர் களும் மந்திரிப் பிரதானிகளும் சேனாதி பதிகளும் இங்கு வருவது நின்று போயிற்று. அவர்களுடன் வழக்கமாக வரும் பரிவா ரங்களின் கூட்டமும் குறைந்து விட்டது.

நாலு படை வீடுகளிலும் வசித்த போர் வீரர்களில் பாதிப் பேர் இப்போது ஈழ நாட்டுப் போர்க்களங்களில் தமிழர் வீரத்தை நிலைநாட்டிக் கொண்டிருந் தார்கள்.

மற்றவர்களில் ஒரு பகுதியார் வடதிசை எல்லையிலும் இன்னொரு பகுதியினர் மதுரையிலும் இருந்தார் கள்.

எனவே, படைவீட்டுப் பகுதி களில் இப்போது பெரும் பாலும் வயோதிகர்களும் பெண்மணிகளும் சிறுவர் சிறு மிகளுமே காணப்பட்டார்கள்.

மழவர்பாடியில் வாழ்ந்து



வந்த வேளக்காரப் படையினர் தத்தம் குடும்பங்களோடு தஞ்சைக்குச் சென்று விட்டபடியால், நகரின் அப்பகுதியானது பூட்டப்பட்ட வீடுகளுடன் வெறிச்சென்று இருந்தது.

இராஜாங்க காரியங்களை நடத்தி வந்த அமைச்சர்கள், சாமந்தகர்கள், அதிகாரிகள் அனைவரும் தத்தம் குடும்பத்தோடு தஞ்சைபுரிக்குச் சென்று விட்டார்கள்.

இப்படியெல்லாமிருந்தபோதிலும் பழையாறை வீதிகளில் கூட்டத்துக்கும் கலகலப்புக்கும் குறைவில்லை. இப்போது அவ்வீதிகளில் பெரும்பாலும் ஆலய ஸ்தபதிகள், சிற்பக் கலைஞர்கள், சிவனடியார்கள், தேவார ஓதுவார்கள், அரண்மனை ஊழியர்கள், ஆலயப் பணியாளர்கள், கோயில்களில் சுவாமி தரிசனம் செய்யவும் திருவிழாக் காட்சிகளைப் பார்க்கவும் வெளியூர்களிலிருந்து வரும் ஜனங்கள் ஆகியோர் அதிகமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

இன்றைக்கு ஏதோ திருவிழா போலக் காண்கிறது. வீதிகளில் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து ஆடவரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் உலாவி வருகின்றனர். தெருமுனைகளில் ஆங்காங்கு ஜனங்கள் கும்பல் கூடி நிற்கின்றனர். அக் கும்பல்களுக்கு மத்தியில் ஏதேதோ வேடம் புனைந்தவர்கள் நின்று ஆடிப் பாடுகிறார்களே! சற்றுக் கவனித்துப் பார்க்கலாம். ஆம்; இவர்கள் கிருஷ்ணனைப் போலவும் கோபாலர்களைப் போலவும் அல்லவா வேடம் புனைந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத்துக்கு நடுவில் ஒரு கிருஷ்ணர் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறாரே? அவரைத் தேவராஜனாகிய இந்திரன் வந்து வணங்குகிறானே? இன்னொரு கூட்டத்தின் நடுவில் கிருஷ்ணனை நாலு முகங்கள் உள்ள பிரம்மதேவர் வந்து தோத்திரித்து வணங்குகிறாரே! ஆகா! இப்போது தெரிகிறது. இன்று ஸ்ரீஜயந்தி; கண்ணன் பிறந்த நாள். அந்த விழாவைத் தான் ஜனங்கள் இவ்வளவு குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். அங்கங்கே உறியடித் திருநாள் நடைபெறுகிறது. மஞ்சள் நீரை வாரி இறைக்கிறார்கள்.

நந்திபுர விண்ணகரத்துப் பெருமான் கோவிலைச் சுற்றி இந்தத் திருவிழாக் கொண்டாட்டங்கள் அதிகமாக நடைபெறுகின்றன.

இது என்ன?

''கண்டேன் கண்டேன் கண்டேன்
கண்ணுக்கினியன கண்டேன்!''

என்று பாடுவது யார்? தெரிந்த குரலாயிருக்கிறதே! இதோ நமது பழைய சிநேகிதர் ஆழ்வார்க்கடியார் நம்பி சாக்ஷாத்காரமாக நிற்கிறார்! நின்று பாடுகிறார். அவரைச் சுற்றிலும் ஒரு கும்பல் கூடுகிறது. சிலர் பக்தி சிரத்தையுடன் கேட்கிறார்கள். வேறு சிலர் எகத்தாளம் பண்ணத் தொடங்குகிறார்கள். ஆழ்வார்க்கடியாரின் கைத் தடியினால் யாருடைய தலைக்குச் சேதம் நேருமோ என்று நாம் அஞ்சுகிறோம்.

விண்ணகரக் கோயிலின் வாசலில் ஒரு சலசலப்பு. வீதிப்புறத்தில் நிறுத்தியிருந்த ரதங்களும் பல்லக்குகளும் கோயில் வாசலுக்கு வருகின்றன. கோயிலுக்குள்ளேயிருந்து மாதரசிகள் சிலர் வருகிறார்கள். இப்பெண்மணிகள் பெரிய குலத்துப்



பெண்டிராகவே இருக்க வேண்டும்.

ஆம்; ஆம்! பழையாறை அரண்மனை களில் வாழும் மகாராணிகளும் இளவரசி களுந்தான் இவர்கள்.

எல்லாருக்கும் முதலில் 'பெரிய பிராட்டி' என்று நாடு நகரமெல்லாம் போற்றும் செம்பியன் மாதேவி வருகிறார். இவர் மழவரையர் குலப் புதல்வி; சிவஞானச் செல்வரான கண்டராதித் தரின் பட்ட மகிஷி. வயது முதிர்ந்த வித வைக் கோலத்திலும் இவருடைய முகத் தில் எத்தகைய தேஜஸ் ஜொலிக்கிறது! அவருக்குப் பின்னால் அரிஞ்சய சோழரின் பத்தினியான வைதும்பராயர் குலப் புதல்வி ராணி கல்யாணி வருகிறார். ஆகா! இவருடைய அழகை என்ன வென்று சொல்ல! இந்த முதிய பிராயத்தி லும் இவர் முகத்தில் இப்படிக் களை வீசுகிறதே! யௌவனப் பிராயத்தில் எப்படி இருந்திருப்பாரோ? இவருடைய புதல்வராகிய சுந்தரசோழர் வனப்பு மிக்கவர் என்று பிரசித்தி பெற்றிருப்பதில் வியப்பு என்ன?

இவரைத் தொடர்ந்து சுந்தர சோழரின் மற்றொரு பத்தினியான சேரமான் மகள் பராந்தகன் தேவி வருகிறார்.

இன்னும் பின்னால், வானுலகிலிருந்து நேரே இறங்கி வந்த தேவ கன்னிகை யரையொத்துக் குந்தவைப் பிராட்டி, வானதி, இன்னும் நாம் அரிசிலாற்றங் கரையில் பார்த்த அரசகுலப் பெண்கள் வருகிறார்கள்.

விஜயாலயன் காலத்திலிருந்து சோழ வம்சத்தினர் சிவனையும் துர்க்கையையும் குலதெய்வ மாகக் கொண்டு வழிபடுகிறவர்கள். ஆனால் திருமாலிடமும் மற்ற சமயங்களி டமும் இவர்களுக்குத் துவேஷம் என்பது கிடையாது. இன்று கண்ணன் பிறந்த நாள் என்பதை முன்னிட்டுப் பெருமாள் கோவி லுக்கு வந்தார்கள் போலும்.

பெரியபிராட்டி செம்பியன் மாதேவி பல்லக்கில் ஏறும் சமயத்தில் ஆழ்வார்க் கடியாருடைய பாடல் அவருடைய காதில் விழுந்தது. அதற்காகவென்றே



ஆழ்வார்க்கடியார் உரத்த சத்தம் போட்டுப் பாடினார் போலும். செம்பியன் மாதேவி அவரைத் தம் அருகில் அழைத்து வரச் செய்தார்.

ஆழ்வார்க்கடியார் அடக்க ஒடுக்கத்துடன் வந்து நின்றார்.

"திருமலை! சில நாட்களாக உன்னைக் காணோமே? ஸ்தல யாத்திரை சென்றிருந்தாயோ?" என்று கேட்டார்.

"ஆம், தாயே! ஸ்தல யாத்திரை சென்றிருந்தேன். திருப்பதி, காஞ்சி, வீரநாராயணபுரம் முதலிய பல க்ஷேத்திரங்களைத் தரிசித்தேன். சென்ற இடங்களிலெல்லாம் பல விந்தைகளைக் கண்டும் கேட்டும் வந்தேன்!"

"அரண்மனைக்கு நாளைக்கு வந்து, யாத்திரையில் கண்டு கேட்ட விந்தைகளைச் சொல்லு!"

"இல்லை, அம்மா! இன்றிரவு மறுபடியும் நான் புறப்பட வேண்டும்."

"அப்படியானால் இன்று மாலையே வந்துவிட்டுப் போ!"

"வருகிறேன் தாயே! தங்கள் சித்தம் என் பாக்கியம்!"

பல்லக்குகள், ரதங்கள் எல்லாம் புறப்பட்டு அரண்மனைக்கு விரைந்து சென்றன.

குந்தவைப் பிராட்டி, ஆழ்வார்க்கடியாரைச் சுட்டிக்காட்டி ஏதோ கூற, மற்ற அரசிளங்குமாரிகள் கலீர் என்று சிரித்தார்கள்.

சிரிப்புக்குக் காரணம் கண்டறிய ஆழ்வார்க்கடியார் அந்தப் பக்கத்தை நோக்கினார்.

குந்தவைப் பிராட்டியின் கண்கள் ஆழ்வார்க்கடியாருடன் ஏதோ சங்கேத பாஷையில் பேசின.

ஆழ்வார்க்கடியார் அச்செய்தியை அறிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலைவணங்கினார்.

சோழ மாளிகைகளிலே செம்பியன் மாதேவி வசித்த மாளிகை நடுநாயகமாக இருந்தது. அதன் சபா மண்டபத்தில் பொன்னால் செய்து நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் அந்தப் பெரு மூதாட்டி அமர்ந்திருந்தார். காரைக்காலம்மையார், திலகவதியார் முதலான பரம சிவ பக்தைகளின் வழித்தோன்றிய அப்பெண்மணி வெண் பட்டாடை உடுத்தி, விபூதியும், ருத்ராட்ச மாலையும் தரித்து, வேறு எவ்வித ஆபரணங்களும் பூணாமல், அளவற்ற செல்வங்களுக்கிடையில் – அஷ்டைசுவரியங்களுக்கு மத்தியில், – வைராக்கிய சிலையாக வாழ முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள். தலையில் மணிமகுடமும் வேறு ஆபரணங்களும் அணியாதிருந்த போதிலும் அவருடைய கம்பீரத் தோற்றமும் சுயம்பிரகாசமான முகமும் அரச குலத்தில் பிறந்து அரச குலத்தில் புகுந்த அரசர்க்கரசி என்பதைப் புலப்படுத்தின. சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் விதிவிலக்கின்றி இந்தப் பெரும் மூதாட்டியைத் தெய்வமாக மதித்துப் பாராட்டிக் கொண்டாடி அவருடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் சொல்லாமல் நடந்து வந்ததில் யாதொரு வியப்பும் இல்லை என்றே நினைக்கத் தோன்றும்.

ஆயினும் அத்தகைய பயபக்தி மரியாதைக்கு இப்போது ஒரு களங்கம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பெண்ணரசியின் புதல்வர் மதுராந்தகத் தேவர் அன்னையின் கருத்துக்கு மாறாக, அவருடைய கட்டளையை மீறி, பழுவேட்டரையர் குலத்தில் மணம் புரிந்து கொண்டார். அதுமட்டுமின்றி சோழ சிம்மாசனத்துக்கு அவர் ஆசைப்படுகிறார் என்ற செய்தியும் பராபரியாக வந்து செம்பியன் மாதேவியின் காதில் விழுந்து அவருக்குச் சிறிது மனக் கவலையை ஏற்படுத்தியிருந்தது.

செம்பியன் மாதேவியின் அரண்மனை முற்றத்திலும் சபா மண்டபத்திலும் சிற்பிகளின் கூட்டமும் தேவாரப் பாடகர்களின் கோஷ்டியும் ஜே ஜே என்று எப்போதும் கூடியிருப்பது வழக்கம். தூர தூர தேசங்களிலிருந்து சிவனடியார்களும் தமிழ்ப் புலவர்களும் அடிக்கடி வந்து பரிசில்கள் பெற்றுப் போவது வழக்கம். சிவபூஜைப் பிரசாதம் கொண்டு வரும் அர்ச்சகர்களின் கூட்டமும் அதிகமாகவே இருக்கும்.

அன்றைக்குத் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), தென்குரங்காடுதுறை, திருமழ



பாடி முதலிய ஊர்களிலிருந்து சிற்பிகளும் சிவபக்தர்களும் வந்து தத்தம் ஊர்களில் கோயில்களில் கருங்கல் திருப்பணி செய்வதற்கு மகாராணியின் உதவியைக் கோரினார்கள். கோயில்களை எந்தெந்த ஊர்களில் என்ன முறையில் கட்ட உத்தேசம் என்பதற்குச் சித்திரங்களும் பொம்மைக் கோயில்களும் கொண்டு வந்திருந்தார்கள்.

முதல் இரண்டு கோயில்களின் திருப்பணியைச் செய்ய உதவி அளிப்ப தாகச் சொல்லிவிட்டு, "மழபாடியா? எந்த மழபாடி?" என்று பெரிய பிராட்டி கேட் டார்.

"சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குரல் கொடுத்து அழைத்துப் பாடல் பெற்றாரே, அந்தப் பெருமான் வீற்றிருக்கும் மழ பாடிதான்!" என்று அந்த ஊர்க்காரர் சொன்னார்.

"அது என்ன சம்பவம்?" என்று மழவரையரின் செல்வி கேட்க, மழ பாடிக்காரர் கூறினார் :-

"சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோழநாட்டு ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து கொண் டிருந்தபோது ஒரு நதியைக் கடக்க வேண் டியதாயிருந்தது. நதியைத் தாண்டி அப்பால் செல்லத் தொடங்கினார். அப்போது, 'சுந்தரம்! என்னை மறந் தாயோ!' என்ற ஒரு குரல் கேட்டது.

சுந்தரமூர்த்தி திடுக்கிட்டார். அது தம்மை ஆட்கொண்ட இறைவனுடைய குரல் என்பதை உணர்ந்தார்.

பக்கத்தில் இருந்த சீடர்களைப் பார்த்து, "இங்கே சமீபத்தில் எங்கேயாவது சிவன் கோயில் இருக்கிறதா?" என்று கேட்டார்.

'ஆம், சுவாமி! அந்தக் கொன்னை மரங்களின் மறைவில் மழபாடி கிராமத் துச் சிவன் கோயில் இருக்கிறது!' என்று சீடர்கள் சொன்னார்கள்.

உடனே சுந்தரமூர்த்தி அங்கே சென் றார். பூத்துக் குலுங்கிய கொன்னை மரங்களின் மறைவில் ஒரு சிறிய கோவில் இருந்தது. சுந்தரமூர்த்தி அங்கே சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மன முருகிப் பாடினார். அன்றொரு நாள் தன்னைத் தடுத்தாட்கொண்டது போல், இன்றைக்குத் தன்னைக் கூப்பிட்டு அருள்புரிந்த கருணைத் திறனை வியந் தார். 'சுவாமி! தங்களை நான் மறந்து விடுவேனா? என்ன கேள்வி கேட்டீர்கள்? தங்களை மறந்துவிட்டு வேறு யாரை நினைப்பேன்?' என்னும் கருத்து அமைத்து,

பொன்னார் மேனியனே!
புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே!
என்னே உன்னையல்லால்
இனி யாரை நினைக்கேனே?

என்று பாடினார். தாயே! இன்னும் அந்தக் கோயில் சிறிய கோயிலாகக் கொன்னை மரங்களின் மறைவிலேயே இருக்கின்றது. அதற்குத்தான் உடனே திருப்பணி ஆரம்பிக்க வேண்டும் என்று கோருகிறோம்."

"அப்படியேயாகட்டும்!" என்றார் செம்பியன் மாதேவி.

ஆழ்வார்க்கடியாரும் அவருடன் இன்னொருவரும் சற்று முன்னால் வந்து நடந்ததையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்).



கல்கி கலெக்ஷன்

தமிழ்த் தாத்தா தமது எண்பத்தேழாவது வயதில் காலமானபோது, ரா.கி. என்ற பெயரில் அமரர் கல்கி எழுதிய இரங்கல் கட்டுரையிலிருந்து...

வீழ்ந்த ஆலமரம்

விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல் மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நம்மைப் பிரிந்து சென்று விட்டார். திருவட்டீசுவரன் பேட்டை 'தியாகராஜ விலாச'த்தின் மேல் மாடியில் தமிழ்த் தாத்தா இன்று இல்லை - விசு பலகையில் படுத்த வண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை- சிடப் பிள்ளைகளிடம் எழுதுவதற்கு விஷயம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை- என்பதை நினைத்தால் நெஞ்சை என்னமோ செய்கிறது. தமிழ்த் தாத்தா போய்விட்டார்; அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப் போகிறது?

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்புகளாக வெளியிட்டார். அவற்றில் 'சீவகசிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'புறநானூறு', 'பத்துப்பாட்டு' என்னும் நூல்கள் முக்கியமானவை. இந்த நூல்களைக் கண்டுபிடித்து வெளியிடும் முயற்சியில் அவர் அடைந்த சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோ வித எதிர்ப்புகளும், எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரிகளில் முக்கியமான எதிரி கறையான்! கறையான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஒரு மகாகவி வர்ணிக்க வேண்டுமே தவிர சாதாரண வார்த்தைகளில் எழுத முடியாது.

ரயில் பாதைக்கு வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஓலைச் சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் கிடக்கும் செய்தியை டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். அவர் மேற்படி கிராமத்தை நோக்கி விரைந்து வருவார். ரயிலோ, கட்டை வண்டியோ, கால் நடையோ- எதுவாயிருந்தாலும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடி வருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி, உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்கு நான் ஓலைச் சுவடியை நெருங்கிக் கொண்டிருக்கும். இதோ ஓலைச் சுவடி கிடக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்து விட்டது.

"பேஷ்! பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று!" என்று அவை கொம்மாளம் அடித்துக் கொண்டு நெருங்குகின்றன. ஓலைச் சுவடியை ருசியும் பார்த்தாகி விட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு அவை சுறுசுறுப்பாக வேலை தொடங்குகின்றன.

அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேர்கிறார் ஸ்ரீ உ.வே.சாமி



நாதய்யர். வீட்டு எஜமானைப் பார்த்து, "ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச் சுவடி ஒன்று இருக்கிறதாமே?" என்று கேட்கிறார்.

"பரண் மேலே கிடந்தது. என்னத்திற்குக் கேட்கிறீர்கள்?" என்கிறார் வீட்டுக்காரர்.

அவரிடம் ஸ்ரீ சாமிநாதய்யர் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, ஓலைச் சுவடியைப் பார்க்க வேண்டும் என்கிறார்.

"சாயங்காலம் பார்ப்போம்; இப்போது வயலுக்குப் போகிறேன்" என்கிறார் வீட்டுக்காரர்.

இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின் மேல் ஸ்ரீ சாமிநாதய்யரின் பார்வை விழுகிறது.

"ஐயையோ! பரண்மேல் கறையான் ஏறிக் கொண்டிருக்கிறதே! சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை!" என்கிறார் சாமிநாதய்யர்.

அமரர் கல்கி

அவருடைய பதைபதைப்பை வீட்டுக்காரர் பார்த்து விட்டு, பரண்மேல் ஏணி வைத்து ஏறி ஓலைச் சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார்.

சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன. ஸ்ரீ சாமிநாதய்யர் அதை அவசரமாக உதறி எடுத்துத் தம் சிரமீது வைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

பிறகு, ஓலைச் சுவடியைப் பிரித்துப் பார்க்கிறார். ஐயரின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல; அளவிலாத ஏமாற்றத்தினால்! ஏனெனில், அவர் தேடி வந்த பழந் தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச் சுவடியிலில்லை. சமீப காலத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தல புராணம் அது. "இவ்வளவுதானா?" என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். "இதுவும் ஒரு மூலையில் கிடக்கட்டும்; ஏதாவது பிரயோஜனப்படும்" என்று எண்ணி ஓலைச் சுவடியை எடுத்துக் கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டுப் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச் சுவடியைத் தேடிக் கொண்டுதான்!

சுமார் பத்து வருஷத்துக்கு முன்பு டாக்டர் உ. வே. சாமிநாதய்யரை முதன் முதலாக நான் பார்த்தேன். ஒரு விசேஷ ஆண்டு மலருக்குக் கட்டுரை கேட்கும் நோக்கத்துடன் அவரிடம் சென்றேன். போகும் போது நெஞ்சு கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பழந் தமிழ்ப் பண்டிதர் நம்மை எவ்விதம் நடத்துகிறாரோ என்ற பயந்தான் காரணம். காலஞ்சென்ற வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரிடம் வருகிறவர்களைப் பார்த்து சாஸ்திரியார், "நீவிர் யாண்டுப் போந்தீர்?" என்று கேட்பாராம். தமிழ்த் தாத்தா அப்படியெல்லாம் என்னைத் திண்டாட வைக்கவில்லை. நம்மையெல்லாம் போல் சாதாரண வீட்டுத் தமிழிலேயே பேசினார். நான் இன்னாரென்று தெரிவித்துக் கொண்டதும், "டி.கே. சிதம்பரநாத முதலியார் உம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்" என்றார். எனக்கு அப்போது டி.கே. சிதம்பரநாத முதலியார் இன்னார் என்பதே தெரியாது. அவர் எதற்காக என்னைப் பற்றிச் சொல்லியிருக்கப் போகிறார் என்று திகைத்தேன். என்னுடைய திகைப்பை அதிகமாக்கும் படியாகத் தமிழ்த் தாத்தா மேலும் ஒரு விஷயம் சொன்னார். அதற்குச் சில காலத்துக்கு முன்பு

முதல் முதல் வெளியான தமிழ்ப் பேசும் படத்தைப் பற்றி, "தமிழ்ப் பாட்டி" என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். "தப்பிலி கப்" என்ற கதையொன்றும் வெளியாகியிருந்தது. மேற்படி கட்டுரையையும் கதையையும் பற்றித் தமிழ்த் தாத்தா திருப்பித் திருப்பித் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தாம் ரஸித்த சில சில வாக்கியங்களையும் அப்படியே சொன்னார். எனக்கு இதெல்லாம் ஒரு பக்கம் சந்தோஷமாயிருந்தாலும், இன்னொரு பக்கம் சங்கடமாயிருந்தது. எனவே, பேச்சை மாற்றும் பொருட்டு, அவரைச் சுற்றிலும் இருந்த ஓலைச் சுவடிகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். உடனே, தமிழ்த் தாத்தா தமது பழைய அநுபவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அவை மிகவும் ரஸமாயிருந்தன. உணர்ச்சியுடன் நகைச்சுவை பொருந்தியும் இருந்தன. அன்று அவர் சொன்னவற்றில் ஒன்று இன்னமும் எனக்குத் தெளிவாக ஞாபகமிருக்கிறது :

மற்றவர்களைப் புத்தகம் எழுதச் சொல்லித் தம் பெயரால் வெளியிடும் மகானுபாவர் ஒருவர் இருந்தாராம்! அவர் ஒருநாள் ஐயர்வாளைப் பார்க்க வந்தார். வந்தவர், அந்த அறையில் அடுக்கியிருந்த ஓலைச் சுவடிகளை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தாராம். உடனே, ஐயர்வாள், "இதோ பாரும்! நீர் என்னைப் பார்க்கத்தானே வந்ததாகச் சொன்னீர்? என்னைப் பார்க்க வந்திருந்தால், என்னைப் பார்த்துப் பேசும். இல்லாவிட்டால் நடையைக் கட்டும். அங்கே இங்கே பார்த்து விழிக்க வேண்டாம்!" என்றாராம்.

இம்மாதிரி எவ்வளவோ சம்பவங்கள் சொன்னார். ஒரு சமயம் ரஸிகரான ஒரு ஜமீன்தார் முன்னிலையில் ஸ்ரீ சாமிநாதய்யரும், இன்னொரு தமிழ்ப பண்டிதரும் இருந்தார்களாம். ஜமீன்தார் அந்த இன்னொரு தமிழ்ப் பண்டிதரைப் பரிகாசமாகப் புகழ்ந்து, "சாமிநாதய்யருக்கு என்ன தெரியும்? பழைய ஓலைச் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருப்பார். உம்மைப் போல் அவரால் நிமிஷத்துக்கு ஒரு பாட்டுப் பாட முடியுமா?" என்றாராம். இந்தப் புகழ்ச்சியை அந்தப் பண்டிதர் உண்மையென்றே நினைத்துக் கொண்டு, தம் மார்பைப் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டாராம். - இதை அய்யர்வாள் சொன்னவுடனே, நான், "தாங்கள் கூடக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னுடைய எழுத்துத் திறமையை ரொம்பவும் பாராட்டினீர்கள். சிறு பிள்ளையாச்சே என்று உற்சாகப்படுத்துவதற்காகத் தாங்கள் சொன்னதையெல்லாம் நான் அப்படியே நிஜமென்று எடுத்துக் கொள்ளலாமா?" என்றேன். தமிழ்த் தாத்தா 'குபீர்' என்று சிரித்த சிரிப்பின் ஒலி இன்னும் என் காதில் தொனிக்கிறது.

இதையெல்லாம் விடப் பெரிய ஆச்சரியம் எனக்குக் காத்திருந்தது. ஆண்டு மலருக்குத் தமிழ்த் தாத்தாவின் கட்டுரை வந்தது. "பரம் பரைக் குணம்" என்னும் தலைப்புடன், உண்மையாக நடந்த சம்பவம் ஒன்றை எளிய பேச்சு நடையில் மிக ரஸமாக எழுதியிருந்தார். பழைய காலத்துத் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் - அதிலும் பண்டித உலகில் இவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவர் - இவ்வளவு எளிய நடையில் எழுதக்கூடும்; எழுதும் துணிச்சல் அவருக்கு ஏற்படும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.


அது முதல் நான் சில சமயம் தனியாகவும், பெரும்பாலும் டி.கே.ஸி.யுடனும் தமிழ்த் தாத்தாவை அடிக்கடி பார்க்கப் போவதுண்டு. அப்போதெல்லாம் அப்பெரியாரின் வாழ்க்கை அநுபவங்கள் சிலவற்றை அவருடைய வாய்மொழியாகக் கேட்க நேரும். கேட்கக் கேட்க, அந்த அநுபவங்களையெல்லாம் அவர் புத்தகமாக எழுத வேண்டும் என்ற ஆசை உண்டாகும். "உங்களுடைய சுய சரித்திரத்தை நீங்கள் எழுத வேண்டும்" என்று அடிக்கடி தெரிவித்துக் கொள்வோம். மகாத்மா, ஜவாஹர்லால் நேரு முதலியவர்கள் 'சுய சரிதம்' எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுவோம். "என்னுடைய சரித்திரத்தை நானே எழுதிக் கொள்வது என்பது பிடிக்கவில்லையே?" என்பார் ஐயர்வாள். ஆனாலும் நாங்கள் விடுவதில்லை. "அதில் ஒரு பிசகும் இடையாது. தங்களுடைய சுய சரித்திரம் என்றால், அது தமிழ் நாட்டின் எண்பது வருஷத்துச் சரித்திரமாக அல்லவா இருக்கும்?" என்று வற்புறுத்துவோம். எங்களுடைய வேண்டுகோளை அவருடைய அருமைப் புதல்வர் ஸ்ரீ கல்யாண சுந்தரமய்யரும், அவருடைய தலைசிறந்த சிஷ்யரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதய்யரும் ஆதரித்தபடியால், கடைசியில் எங்கள் மனோரதம் நிறைவேறிற்று. தமிழ்த் தாத்தா, தமது சுயசரிதத்தை எழுதச் சம்மதித்து எழுதியும் வந்தார். அது பூர்த்தியாவதற்குள் அவர் காலஞ்சென்றது தமிழ் நாட்டின் பாக்கியக் குறைவேயாகும்.

(கல்கி, மே 16, 1942)

ஒரு மருத்துவ சாதனை:

தொப்புள் கொடியும் மருந்தானது!

தங்கைப் பாப்பாவின் தொப்புள் கொடியைப் பயன்படுத்தி அண்ணன் குழந்தையின் கான்ஸரைக் குணமாக்கிய மருத்துவ சாதனை நடந்துள்ளது. சென்னை அப்போலோ கான்சர் மருத்துவமனையில், சென்ற மாதம் தாம் செய்த இந்தப் புதுமையான முயற்சியை விவரிக்கிறார் டாக்டர் சுசுவர் விசுவேச்வர்...



• ஷிவான்சு: சிகிச்சைக்கு முன்...

• சிகிச்சைக்குப் பின்...

"அந்தக் குடும்பம் கௌஹாத்தியிலிருந்து சிகிச்சைக்காகச் சென்னை வந்திருந்தது. சிகிச்சை, மூன்று வயதுப் பையன் ஷிவான்சுவுக்கு.

"ஷிவான்சுவின் வலது கண்ணின் பின்புறம், லுகிமியா எனப்படும் ரத்தப் புற்று நோய் தாக்கியிருந்தது. கண்ணே விகாரமாகி, சற்றே வெளித்தள்ளிய நிலையில் இருந்தது.

"லுகிமியா செல்களை அழிக்க, நாங்கள் கிமோ தெரபி வைத்திய முறையைக் கையாண்டோம். கிமோதெரபியில் சில கெமிகல்கள் இயங்க ஆரம்பித்து, லுகிமியா செல்கள் அழியும். ஆனால் அந்த செல்களில் ஒரு சிறு பகுதியாவது தங்கியிருந்து, மறுபடி அது பரவிவிட்டால், உடம்பு முழுக்கப் பாதிக்கப்படும். அப்போது Bone Marow சிகிச்சையைத்தான் ஆரம்பிக்க வேண்டும். இடுப்பின் (பின்புற பகுதியிலுள்ள) எலும்பு மஜ்ஜையைத்தான் இதற்காக உபயோகிப்பார்கள். கூடப்

பிறந்த சகோதரன் அல்லது சகோதரியின் இடுப்பு எலும்பு மஜ்ஜையைத்தான், அனெஸ்தீசியா கொடுத்து, எடுத்து, நோயாளிக்கு மாற்றுவோம். இதைத்தான் 'போன் மாரோ டிரான்ஸ்பிளான்டேஷன்' என்பார்கள்.)

"துரதிர்ஷ்ட வசமாக, ஷிவான்சுவுக்குச் சகோதரனோ, சகோதரியோ இல்லை!

''ஆனால், ஷிவான்சுவின் அம்மா கர்ப்பமாக இருந்தார். சீக்கிரமே பிரசவமும் ஆகக் கூடிய நிலை. அப்படியும் மகனின் சிகிச்சைக்காகப் பயணம் செய்து சென்னைக்கு வந்திருந்தார்!

"ஷிவான்சுவின் அப்பாவிடமும், அம்மாவிடமும், 'பயப்படாதீர்கள். ஷிவான்சுவைக் காப்பாற்றிவிடலாம்!' என்று மட்டும் சொல்லிவிட்டு, மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் வசந்தியிடம் நிலைமையை எடுத்துச் சொன்னேன். பிறகு, 'டாக்டர், நீங்கள் ஷிவான்சுவின் அம்மாவுக்குப் பிரசவம் ஆனவுடன் தொப்புள் கொடியை வெட்டிப் பத்திரமாக என்னிடம் தாருங்கள். அதை வழக்கம் போல வீசிவிட வேண்டாம்!' என்று கேட்டுக் கொண்டேன்.

''நான் கேட்டுக் கொண்டபடியே, டாக்டர் வசந்தி ஷிவான்சுவின் தாயாருக்குப் பிரசவம் பார்த்த உடனே தொப்புள் கொடியைத் துண்டித்து அப்போலோ கான்சர் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார். அதிலுள்ள ரத்தத்தை அப்படியே ஷிவான்சுவுக்குச் செலுத்தினேன். ஷிவான்சு முழுதும் தேறிவிட்டான். போன் மாரோ செய்வதற்குப் பதிலாக, Cord Blood Transplantation முறையைக் கையாண்டு, பையனைக் காப்பாற்றிவிட்டோம்.

"ஏன் தொப்புள் கொடியிலிருந்து இரத்தம் எடுத்தீர்கள் என்று கேட்கலாம். அதில் நிறையவே இரத்தத்தின் 'மதர் செல்கள்' இருக்கின்றன. சிவப்பு அணுக்கள், வெள்ளை அணுக்கள், ப்ளேட்லெட்டுகள் எல்லாமே முழுமையாக உள்ள இரத்தம் அது.

"அயல் நாடுகளில் சமீபத்தில் மூன்று மாதம் சுற்றுப் பயணம் போயிருந்த போது, இந்த மாதிரி சிகிச்சையை அவர்கள் லூகிமியா நோயாளிகள் விஷயத்தில் வெற்றிகரமாகக் கையாண்டு வருவதைப் பார்த்தேன். அதனால்தான் தைரியமாக இந்தச் சிகிச்சையை மேற்கொண்டேன்.

"இதற்கு முன்பு, இரண்டு வருடங்களுக்கு முன்னால், பம்பாயில் ஒரு பையனுக்கு இப்படிச் சிகிச்சை அளித்தார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அது பலன் அளிக்கவில்லை. ஷிவான்சு விஷயத்தில் சிகிச்சை வெற்றி அளிக்கவே அவன் உயிர் பிழைத்தது எங்களுக்கு ஒருபுறம் மகிழ்ச்சி. முதல் தடவை இங்கே இது நடந்தது என்பது மறுபுறம் ஒரு சாதனை!"

— சாருகேசி



"பி.எம். சார்., போன்ல அம்மா பேசறாங்க."

"அய்யய்யோ... அம்மாவா?"

"பதறாதீங்க சார். வீட்ல இருந்து உங்க அம்மாதான்!"

— பா. ஜெயக்குமார்

''அவர் போலி டாக்டர்னு தெரிஞ்ச பிறகும் அவர்கிட்டே எப்படி இவ்வளவு பெண்கள் கூட்டம்?''

''அவங்களெல்லாம் தங்களோட மாமியாரை சிகிச்சைக்கு அழைச்சுக்கிட்டு வந்தவங்க!''

— குல்லூ



மல்லிகைப் பூ

காலம் இது

மல்லிகைப் பூ புனிதத் தன்மை தந்து சமநிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

—சிவமஹா புராணம்

மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவான்.

மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்ற மடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களை வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட காட்டிலிருந்து சேகரித்த பூக்களால் அர்ச்சிப்பது மும்மடங்கு பலனைக் காட்டும்.

— அக்னிப் புராணம்

அத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.



திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத்தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை – 20
போன் : 4915662 / 4914213



செல்வந்தி

தட்தட தடவென்று வேலிக் கதவை இழுக்கும் சப்தம். சக்திவேல் மாடி ஜன்னலைத் திறந்தான். குசச் செட்டியார்! அவர் பெயர் நினைவில்லை. குசச் செட்டியார் என்றுதான் ஊர் முழுக்க நின்று விட்டது. அவர் வெறுமனே சட்டி பானை மட்டும் செய்கிறவர் இல்லை. யானை செய்வார். குதிரை செய்வார். குச்சனூர் சனீஸ்வர பகவானுக்குக் காக்கை செய்வார். காக்கையில்தான் எத்தனை தினுசு. எத்தனை தடவை காக்கைகளைப் பார்த்திருக்கிறோம். அதன் முக லட்சணம் மனசில் நிறகிறதா? எல்லா காக்கைகளுக்கும் ஒரே மாதிரி முகம்தான் நமக்குத் தெரிகிறது. ஆனால் அவருக்கு அப்படியல்ல. ஒவ்வொரு காக்கைக்கும் ஒவ்வொரு முகலட்சணம். அதை அவர் அந்தக் களிமண்ணால் நிரூபித்து விடுவார்.

அம்மாவுக்கு விதவிதமான உலை மூடிகள் பண்ணிக் கொடுத்திருக்கிறார். தை மாசப் பிறப்புக்கு இவர் பெயர்தான் ஊர் முழுக்கப் பானையாய் உருளும். அவருக்கு இதில் கிறுக்கு. சாத்தாவு ராயன் திருவிழாவிற்கு நாலு மண்டலம் விரதம் இருப்பார். பிற்பாடுதான் மண்ணைத் தொடுவார். ஒரு வாரமோ, பத்து நாளோ, அந்தச் சாமியை உயிரோடு கொண்டாந்து நிறுத்திப் போடுவார்.

அதோடு நிற்க மாட்டார். குயில் செய்வார். குயில்னா குயில் மாதிரியேதான் இருக்கும். எங்கே கூவிவிடப் போகிறதோ என்னும்படிக்கு அதன் வாயையும் முக அமைப்பையும் பண்ணிப் போடுவார். அவர் மண்ணைத் தொட்டால் மனசை மீட்டாமல் விட மாட்டார். சக்திவேலுக்கு அவர் மீது பிரியம். சின்ன வயசில் இருந்தே பிரியம்.

"வாங்க செட்டியாரே..." என்றார் அப்பா. மாட்டுக் கொட்டத்தில் சாணி அள்ளிக் கொண்டிருந்த அம்மா கையைக் கழுவி விட்டு வந்தாள். "வாங்கண்ணா" என்றாள். அதற்கு அவர் "வர்றேன் பாப்பா" என்றார். அவர் அம்மாவை அப்படித்தான் கூப்பிடுவார்.

"மாயக்கா எப்படி இருக்கு?"

"ஏதோ இருக்கு பாப்பா. ஆத்தமாட்டாப்புல இருக்கு."

"மோர் கொண்டாரட்டுமா?"

"வேண்டாம். இப்பத்தேன் ரெண்டு வெத்தலையைப் போட்டேன்."

"இந்த வாட்டி தீர்த்தத்துக்கு வரக்

காணோம்.''

''முடியலை பாப்பா. முன்ன மாதிரி இல்லை. உடம்பு ஒத்துழைச்சாத்தானே?''

''இப்ப எங்கே ஜோலி?''

''முன்ன மாதிரி மண்ணைத் தொடவா முடியுது? எல்லாம் பிளாஸ்டிக், ரப்பர், சில் வர்னு தாவிட்டது. இப்ப முத்துப்பிள்ளை கூட ஒத்தாசையா இருக்கேன்.''

செட்டியார், நடை வாசலை ஒட்டி இருக்கிற, வெளித் திண்ணையில் உட்கார்ந் தார். வெயிலைத் தடுக்க சாக்குப்படுதா. படுதாவின் கிழிசல் வழியாக ஒன்றிரண்டு வெயில் பொட்டுகள். அப்பாவின் மார்பில் ஒன்று, செட்டி யாரின் நெற்றியில் ஒன்று, மீதம் சுவர் முழுக்கச் சிதறிக் கிடந்தன. செட் டியார் உடலை அசைத்து அசைத்து அந்த வெயிலை ஒழுங்கு பண்ணிக் கொண்டார்.



''ஒரு சங்கதி. கலந்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''நல்லது.''

''நல்ல நேரம் பார்த்துத்தான் கிளம்பு வேன். முதச் சொல்லு விஷத்துலெ விழுந் திடப்படாது. பாப்பா, அந்தப் பஞ்சாங் கத்தை இப்படி எடுத்துக் கொண்டா!''

அம்மா மாடத்தில் இருந்த பஞ்சாங் கத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். படபட வென்று பக்கங்களைத் தள்ளினார். ஒரு சதுரக் கட்டத்தில் அவர் பார்வை குத்தி நின்றது. கண்களை இடுக்கி எதையோ ஆராய்ந்தார். பின் மணிக்கட்டைத் திருப்பி கடிகாரத்தைப் பார்த்தார். காந்தி காலத்துக் கடிகாரம். அவர் முகத்தில் திருப்தி. பஞ் சாங்கத்தை மூடி மடியில் வைத்துக் கொண் டார்.

''நம்ம முத்துப்பிள்ளைக்கு ஒரு ஆசை. அவர் மகள் கோமதி இந்த வீட்டுலெ வந்து விளக்குப் போடணும்னு பிரியம். ரொம்பப் பிரியப் படுறார். அந்தப் பாப்பாவும் எட்டோ பத்தோ படிச் சிருக்கு. தீர்த்தத்துலெ தம்பியைப் பார்த்தாராம். பேசினாராம். அப் பவே தீர்மானம் பண்ணிப் பிட் டாராம். அதான் உங்களைக் கலந்துட்டு வரச் சொன்னார்.''

அப்பா அம்மாவைப் பார்த் தார். திகைக்கிற பார்வை. பின் செட்டியாரைப் பார்த் தார்.

''முத்துப்பிள்ளையைப் பற்றிச் சொல்ல வேண் டாம். உங்க மகன் உத்தி யோகத்துக்கு நானாச் சுங்கிறார். எல்லாம் கூடி வந்தால் அடுத்த மாசமே கூட ஒரு வேலைக்கு ரெடி பண்ணிப் போடுவார். அவர் காசால் அடித்து கல்லைக் கூட கனிய வச்சிடுவார். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாததில்லை....

சிலீரென்று அப்பாவின் முகத்தில் ஒரு

பாரதிபாலன் 7

பிரகாசம்! ஒரு ஜொலிப்பு. நெஞ்சு குது குதுவென்று தவிப்பாய் இருந்தது. அவருக்குத் திருப்தி. எதுவும் வீணாகி விடவில்லை என்று திருப்தி. அத்தனை வேண்டுதலும் பலித்து விட்டது. சிந்திய வேர்வைகள் அத்தனையும் துளிர்த்து விட்டது. அந்தத் திருப்திதான் கண்ணில் திகைப்பாய் நின்றது. அவர் உள்ளக் கசிவு உதடுவரை ஒழுகி விட்டது. அதை ஒரு மௌனத்தில் வழித்துப் போட்டு விட்டார். இருந்தாலும் அவரின் கண்ணின் பளபளப்பு அதைச் சொல்கிறது. அம்மாவைப் பார்த்தார். அவள் பார்வையிலும் திருப்தியும், திகைப்பும்தான் கழியிட்டிருந்தது.

"நீங்களும் யோசனை பண்ணுங்க!"

அப்பா பதில் பேசவில்லை. ஒரு பார்வை பார்த்தார்! மனசை நோண்ட இதில் என்ன இருக்கிறது என்று தீர்மானத்திற்கு வந்து விட்டாற்போல் ஒரு பார்வை.

அவர் உயரத்தின் எல்லை முத்துப் பிள்ளைதான். அதற்கு மேல் உயர இடமில்லை என்று ஒரு தீர்மானம். முத்துப் பிள்ளைக்கு உட்கார்ந்த இடத்திலே எல்லாம் நடந்து விடுகிறது. ஊரே நடுங்குகிறது. அவர் யாரையும் அதட்டுவது கிடையாது. மிரட்டுவது கிடையாது. அப்பேற்பட்ட முகமே இல்லை அது. ஆனாலும் ஊர் அவருக்கு நடுங்குகிறது. அன்று முழுவதும் அப்பா பரபரப்பாகத்தான் இருந்தார். அதை அவர் மறைத்தாலும், துடைத்துப் போட்டாலும் அது தெரியாமல் இல்லை.

சக்திவேலுக்கு உறுத்திக் கொண்டேதான் இருந்தது. இத்தனை படிப்பும் புத்திக் கூர்மையும் இருந்து களவு கொடுத்து விட்டோமோ என்ற கவலை. இங்கே குறுக்கே விழுந்த முட்டுக் கட்டை தயக்கமில்லை. பயமில்லை. அப்பாவின் கனவும் கனிவும் தான். அவர் எத்தனை வருடம் அடைகாத்த கனவு! பொத்திப் பொத்தி வளர்த்த கனவு. "அப்பா உங்கள் கனவு முக்கியமா? என் வாழ்வு முக்கியமா? என்று கேட்கத் தென்பு இல்லை. அவர் என்னை அப்படி வளர்க்கவில்லை. நான் கிடுகிடுவென்று முன்னேற வேண்டும் என்பதற்காக, அவர் மண்ணைக் கொத்தி, மரத்தைக் கொத்தி தன்னுடைய சுகத்தையெல்லாம் புதைத்து விட்டவர். இது ஒரு தகப்பனின் கடமை என்று சொல்லலாம். அப்பா இதுவரை எதையும் கடமையாகச் செய்யவில்லை. ஒரு தகப்பனின் கடமை என்னவென்ற தியரி அவருக்குத் தெரியாது. அவர் தனி. நிறையப் பார்த்திருக்கலாம். நிறையப் படித்திருக்கலாம். இது வேறு. என்னால் புரியும்படி சொல்லத் தெரியவில்லை. எத்தனை விவரித்தாலும் அது சமாதானச் சடங்காகத்தான் முடியும். இதெல்லாம் கண்ணால் பார்த்துக் கற்றுக் கொண்டால்தான் ஆச்சு. எத்தனை சொன்னாலும் அது அரிச்சுவடியாகவேதான். நிற்கும். எனவே நான் அதைத் தொடவில்லை.

ஒருநாள் –

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. நான் ஏழோ, எட்டோ படிக்கிறேன். பள்ளியில் எல்லோரும் வைகை அணை டூர் போகிறார்கள். எட்டு ரூபாய் பணம் வேண்டும். அப்போது அப்பாவுக்கு இந்தக் காணி நிலம் சொந்தமில்லை. கூலிதான். தினக்கூலி. சேறு மிதிப்பதற்கும், உரம் போடுவதற்கும் போவார். அப்போது அப்பா என்னைத் தட்டிக் கழித்திருக்கலாம். எதையாவது சொல்லித் தடுத்திருக்கலாம். செய்யவில்லை. பரபரவென்று கொளுத்தும் வெயிலில் சேற்றில் இறங்கி விட்டார். இறங்கி விட்டாரே தவிர அவரால் அழுத்தி சேற்றை மிதிக்க முடியவில்லை. "என்ன வேலுப்பிள்ளை, வயல்லெ நின்னுக்கிட்டு டான்ஸ் ஆடுறீர்?" என்று முதலாளி ஓர் அதட்டும் போட்டார்.

அப்பா சட்டென்று வேஷ்டியை விலக்கிக் காட்டினார். முட்டிக்கு மேல் தொடை வரை சொத சொதவென்று புண். பழுத்துச் சிவந்து கிடந்தது. ஏதோ விஷக் கடி! அரையில் நெறி வேறு கட்டியிருந்தது. அதைப் பார்த்ததும், அந்த முதலாளி அப்பாவின் முகத்தைப் பார்த்தார். அப்பாவுக்குக் கண்ணில் நீர் கட்டிக் கொண்டது. ஒரு ஆண் – வெடவெடவென்று நல்ல உயரமும் முறுக்கு மீசையும் கொண்ட ஆண் அழுவதை அன்றுதான் பார்த்தேன். எனக்குத் திகைப்பு தாள முடியவில்லை. அந்தக் காட்சி அப்படியே என் ரத்தத்தில் கலந்து விட்டது.

அப்பாவின் நேர்மைக்கும் தியாகத்திற்கும் நான் அடிமையாகி விட்டேன் என்ற ஒரு மிரட்டல் குரலும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு தலைமுறை முழுக்க இந்தச் சேறும், வேகாத சோறும்தான் சொந்தம் என்று எழுதி வாங்கி வந்திருக்கிறது. அந்த எழுத்தை மாற்ற அப்பா ஆயுசு முழுக்க அடிமையாக இருந்திருக்கிறார். அப்பா என்னை அடித்து வளர்க்கவில்லை. மிரட்டி வளர்க்கவில்லை. இப்போது என்

மனதைத் திறந்தால் கூட அப்பா தன்னைத் திருத்திக் கொள்வார். அவர் மனசு அப்படி! அதுதான் என்னை ஊனமாக்கி விட்டது. பேச முடியாதபடிக்கு ஊனம் பண்ணி விட்டது. சக்திவேல் மல்லாந்து படுத்திருந்தான். மூடிய கண்களைத் திறக்க முடியவில்லை. நெற்றியில் நெருப்புப் பொறி பறந்தது!

சக்திவேல் வாய்க்காலுக்குப் போனான். பொன் மஞ்சள் நிற வானம் கருகருவென்று உருமாறிக் கொண்டிருந்தது. அந்தி இத்தனை கருக்கக் கருக்காது. இன்று ஏனோ இத்தனை கருக்காகக் கருத்து விட்டது. கூட்டம் கூட்டமாய் பறவைகள் திரும்பிக் கொண்டிருந்தன. தென்னைகள் ஒன்றோடு ஒன்று உரசி ஓலமிடத் துவங்கி விட்டன. தவளைகள் கொர கொரத்தன. சில் வண்டுகள் இரையத் துவங்கி விட்டன. இத்தனை ஓசைகளில் ஒன்று கூட காதில் ஏறவில்லை. அவன் கண்கள் மட்டும் ஓடுகிற நீரில் மிதந்து கொண்டிருந்தன. காற்று குளிர்ந்தது. என்றுமில்லாத குளிர். எங்கிருந்தோ மண் வாசனை. மற்ற நேரமெனில் மனசு துள்ளும். இன்று அப்படியே குறுகுறுவென்று குறுகிப் போனது.

வெறுமனே இருக்கும் படித்துறை. படபடவென்று படித்துறையில் மோதித் தெறிக்கும் சிற்றலை நீர். தாழம் புதர். புதரில் ஒன்றிரண்டு பூத்திருக்கும் போல், அது சிதறும் வாசனை. அவனால் முடியவில்லை. நடந்தான். கண்ணுக்குத் தெரியாமல் மனசுக்குப் புலப்படாமல் ஏதோ ஒன்று கூடவே வந்து தொலைந்தது. சட்டென்று அதை விரட்ட முடியவிலலை. துரத்தித் துரத்தி வருகிறது. வழி நெடுகிலும் அது விரட்டிக் கொண்டுதான் வந்தது. சட்டென்று விலகி விட முடியவில்லை. இலைச் சருகுகள், வீழ்ந்து கிடக்கின்ற மர நிழல். அசையும் பயிர். படரும் புல் என்று எல்லாவற்றிலும் அது தெறிக்கிறது. அவளின் நினைவுதான் அது. இது இம்சைதான். இருந்து விட்டுப் போகட்டும் என்று விட முடியாமலும் விரட்ட முடியாமலும் என்ன செய்வது என்று தெரியாத திகைப்பாக அது கூடவே வந்தது.

எந்த நினைவும் அழிக்கக் கூடியதாக இல்லை. எதுவும் நினைவாகவே இல்லை. உயிராகத்தான் நிற்கிறது. சதையும், நரம்பும் ரத்தமும் சேர்த்துக் கட்டிய உயிராகத்தான் நிற்கிறது. பயந்து, பயந்து, அங்குலம் அங்குலமாக அடிவைத்து கடைசியில் இப்படி மனசு மாட்டிக் கொண்டு தவிக்கிறது. சக்தி வேல் வாய்க்கால் கரையோரமாகவே நடந்தான். பளீர் பளீர் என்று தென்னந் தோப்பில் ஒரு மின்னல் சொடுக்கிற்று. ஒரு மேகக் கூட்டம் கிழக்கில் இருந்து மேலே ஏறிற்று. சாட்டையைச் சொடுக்கினாற் போல் மீண்டும் ஒரு மின்னல் தெறித்தது. ஒரு பேரொலி. அது அவன் மனதிலும் ஒலித்தது. எல்லாம் அடக்கி அடக்கி அடி ஆழத்தில் பதிந்து விட்டது. இதையெல்லாம் எப்படி அலறித் தீர்த்தாலும் தீர்த்து விட முடியாது. அவனை அறியாமல் கண்ணில் கரகரவென்று நீர் பெருகியது. உதடு துடித்தது.

செல்வந்தியைப் பார்த்து இரண்டு நாட்களாகி விட்டது. அவளைப் பார்க்கவே முடியவில்லை. வீட்டிற்குள்ளே முடங்கிப் போனாள். சுருளித் தீர்த்தத்திற்குப் போய்த் திரும்பிய மறுநாள். இரவு பெண்கள் எல்லோரும் வாசலில் உட்கார்ந்து கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சில் குதூகலமும் கொண்டாட்டமும் கொப்பளித்தது. அடிக்கொரு தரம் ஒரு சிரிப்புச் சிதறும். என்ன பேசுவார்களோ ஏது பேசுவார்களோ தெரியாது. ஆனால் சுவாரஸ்யத்திற்கு மட்டும் குறைவிருக்காது.



"பெயிண்டர் என் பேரை எழுதும் போது, தவறுதலா... கூடவே எம்.பி.பி.எஸ்.ன்னு எழுதிட்டான். அதனால்தான் டாக்டரா பிராக்டிஸ் பண்றேன். மற்றபடி ஏமாற்றிச் சம்பாதிக்கணும்கிற ஆசையெல்லாம் கிடையாது..."

– ராஜீராதா

சக்திவேல் மெயின் ரோட்டிற்குப் போய் திரும்பிக் கொண்டிருந்தான். தெருவிளக்கு எரியவில்லை. வடக்குத் தெருவில் மட்டும் ஒரு விளக்கு. அந்த வெளிச்சத்தில் நடந்து வந்தான். இவனுக்கு முன்னால் ஒரு வண்டி. மாட்டு வண்டி. பருத்திப் பாரம் சுமந்து கொண்டு சென்றது. அவன் வண்டியை



"சே! இந்த அரசியல்வாதிகளே இப்படித் தான்..."

"எதைச் சொல்றீங்க?"

"நான் ஜாமீன் கொடுத்ததுக்காக, 'நீதிமான் நீலகண்டன் அவர்களுக்கு நன்றி!'ன்னு ஊர்முழுக்க போஸ்டர் அடிச்சு ஒட்டிருக்காரு ஒரு முன்னாள் அமைச்சர்..!"

– சீர்காழி வி. ரேவதி

முந்த முடியாமலும், விலக முடியாமலும் பின்னாடியே சென்று கொண்டிருந்தான். குறுகலான தெரு. கருப்பையா நாடார் கடைத் திருப்பத்தில் திரும்பி வாய்க்கால் தெருவுக்கு வந்தது. நாடார் கடை வெளிச் சத்தில்தான் வண்டிக்காரரைப் பார்த்தான். செவ்வந்தியின் அப்பா! கூட்டு வண்டி ஓட்டுகின்ற தினுசு வேறாகவும் மொட்டை வண்டி ஓட்டுகின்ற தினுசு வேறாகவும் இருந்தது.

வாசலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பெண்கள் எழுந்தனர். ஒதுங்கி வண்டிக்கு வழி விட்டனர். அதில் செவ்வந்தியும் இருந்தாள். அவள் அம்மாவும் இருந்தாள். சக்திவேலின் அம்மாவும் இருந்தாள். எல்லோரும் இருந்தார்கள். அத்தனை பேரும் ஏன் இருந்தார்கள் என்று ஆயிற்று! அப்போதுதான் அது நடந்து விட்டது. பூக்காரப் பெரியசாமி, வீட்டு வாசலை ஒட்டி பூ மூட்டைகளை அடுக்கி வைத்திருந்தான். அரளி, மரிக்கொழுந்து, துளசி, வாடாமல்லி என்று வரிசையாய் மூட்டைகள். காலையில் சந்தைக்குப் போக வேண்டியது. பக்கத்தில் காவலுக்கு அவன்.

வண்டிச் சுப்பையா வண்டியை ஓட்டி வந்தார். அது மிகவும் குறுகலான தெரு. மிகவும் சிரமப்பட்டு ஓட்டி வந்தார். இடக் காளையை ஒடித்து, வலக் காளையை விரட்டினார். தடதடவென்று வலது சக்கரம் பூ மூட்டை மீது ஏறிற்று. சரசரவென்று அத்தனையும் சரிந்து விட்டது. கணநேரம்தான். அதற்குள் இது நிகழ்ந்து விட்டது.

பெரியசாமிக்குச் சொரேர் என்றது.

"அடச் சண்டாளா... சண்டாளா" பெரியசாமியின் குரல் தெருவையே திரட்டியது.

"என்னய்யா இது! வம்பு பண்றீயா?"

"பண்றதையும் பண்ணிப் போட்டு, நானா வம்பு பண்றேன்!"

"நீ பண்ணின அக்குறும்புதானே இதெல்லாம். நடைபாதையிலே எதுக்குப் பூ மூட்டையைப் போடணும்!"

"உங்கப்பன் வீட்டுச் சொத்தா?"

"விவகாரம் பண்றதுனே முடிவு பண்ணிட்டே?"

"என்னடா விவகாரம் பண்றாங்க. பூவெல்லாம் நாசம் பண்ணிப் போட்டு பேசுறான் பாரு பேச்சு!"

"அக்குறும்புதானே இதெல்லாம்!"

"போடா பொச கெட்ட நாயே! உன்னை என்ன பண்றேன் பார்?"

"என்னடா பண்ணுவே?" என்று கூறிக் கொண்டே, வண்டிச் சுப்பையா முளக் குச்சியை வண்டியில் இருந்து உருவி எடுத்தார். அது பெரியசாமியின் தைரியத்துக்குச் சவாலாகத் தோன்றியிருக்க வேண்டும். ஒருக் களித்து நின்ற வண்டியைத் தரதரவென்று பிடித்துத் தள்ளினான். அந்த விசையில் மாடுகள் மிரண்டு வண்டியை உலுக்கின. மடமடவென்று பாரம் சாய்ந்து விட்டது.

"டேய் உன்னை என்ன பண்றேன் பார்" என்று சீறிக் கொண்டே வந்தார் சுப்பையா.

"என்னடா பண்ணுவே?"

"மரியாதையாப் பேசு."

"உனக்கென்னடா மருவாதை?"

"உன் திமிரை அடக்குறனா இல்லையா பார்."

"முதல் அந்த வளையல் செட்டியார் திமிரை அடக்கு" என்று காறித் தெருவில் உமிழ்ந்தான்.

அவர் முகம் சுளித்து விட்டது. அசிங்கத்தை முகத்தில் வீசி அடித்தாற்போல் ஆயிற்று! அவன் வாயில் இத்தனை முள் இருக்கும் என்று தெரியாது. அவருக்கு மனசெல்லாம் ரத்தம் கொட்டியது. அந்தத் தெருவே ஒருகணம் திகைத்துப் போயிற்று. அரை நொடி கண் இமைக்காமல் அவனைப் பார்த்தார். பொலபொலவென்று அவர் கண்கள் நிரம்பின. வண்டியைப் போட்டது போட்டபடி போட்டுவிட்டு வீட்டிற்குள் ஓடிப் போனார். செவ்வந்தியும் தலையைக் குனிந்து கொண்டே வீட்டிற்குள் ஓடினாள். கதவை மடேர் என்று சாத்தி மூடினாள்.

(தொடரும்)

புளித்த கண்களுக்கு ஒரு புதிய பரவசம்!

✉ சினிமா நடிகர், நடிகைகளை, அரசியல் வாதிகளை பல இதழில் பார்த்து புளித்துப் போன கண்களுக்கு, இவ்விதழின் அட்டை மிகுந்த பரவசம் ஏற்படுத்தியது. பிரேம் பண்ணைக் கொடுத்து விட்டேன்!
மோகனூர், கவிமணி செந்தில்.

✉ "வாஜ்பேயி, குஜ்ரால், சோனியா மூவருக்கும் ஸ்பெஷல் பாராட்டு. தலையங்கம் தங்களின் ஆழமான சிந்தனையைக் காட்டுகிறது.
தக்கோலம், அ. முஸ்தபா.

✉ சின்னமுள் – பெரிய முள் கடிகாரக் கார்ட்டூன் அசத்தல்! சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் கல்கிக்கு நிகர் கல்கியே
வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ ஆறறிவுள்ள மனிதன் தன்னுடைய கண்டுபிடிப்புகளை (மருந்துகளை) சோதனை செய்வதற்காக ஐந்தறிவு ஜீவன்களை இம்சிப்பதற்கு எந்தவித தார்மீக உரிமையுமில்லை. அந்த வகையில் 'நாய்க்காக யுத்தம்' நடத்தும் மேனகாவின் வாதங்கள் ஏற்கக் கூடியனவே!
பெங்களூர் – 16,
அ. சங்கரன்.

✉ "காதலிக்க நேரமில்லை!" இந்த வார' இளைஞர் பகுதியில் இடம் பெற்ற மகேஷ் பூபதி விவரமான ஆள்தான் போங்கள்!"
மதுரை – 17, ஜி. ஆண்டாள்.

✉ 'எதிலும் நம்பர் ஒன் என்பதுதான் அம்மாவின் இலட்சியம்' என்ற தராசு பதிலில் அசாத்திய துணிச்சலும், அ.தி.மு.க. மத்திய அமைச்சர்களின் ஆட்சிக் கலைப்பு பற்றிய பேச்சு, பூலான்தேவியின் கூற்றுக்கான பதில்களில் சாதுர்யமான கிண்டலும் வெகு அருமை.
தலைஞாயிறு, எஸ். ராஜகணேஷ்.

✉ தான் ஓர் அகில இந்திய(ன்) புகழ் நடிகை என்கிற பந்தா இல்லாமல், (என் கவர்ச்சி நிலைக்காது) பணிவான பதில்கள் மூலம், ஊர்மிளா, வாசகர்கள் நெஞ்சத்தில் நிறைந்து விட்டார்.
பெங்களூர் – 47, மு. புஷ்பராசன்.

✉ பெண் கவுன்சிலருக்கு ஆபத்து என்ற செய்தி படித்தபோது யாரைத்தான் நம்புவது என்றே தெரியவில்லை. ஊழலை ஒழிக்கப்

பிறந்த கட்சி என்ற மதிப்பில் இருந்து அது குப்புற வீழ்ந்து விட்டது.
தென்குத்துபுதுநகர்,
ஆர். தமிழரசி தேவசேனாபதி.

✉ ஏதோ தவறுகள் நடக்கின்றன என்பதற்காக, 'அவார்டுகளே வெறும் ஹம்பக்' என கூலாக புரட்சிக் கலைஞர் கூறுவது 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்பது போலத்தான்!
தூத்துக்குடி-1, ப. சுகுமார்.

✉ 'நரிகள்' சிறுகதை அக்னி நட்சத்திரம் போல் சுள்ளென்று இருந்தது. அஜய்குப்தா போன்ற ஆண் நரிகள் இருப்பது போல் பெண் நரிகளும் சில நிறுவனங்களில் இருப்பதை மறுக்க முடியாது.
கோவை – 14, ஏ.எஸ். இராமசாமி.

✉ "தாண்டவமாடிய மிருக வெறி" கண்களில் ரத்தம் கசிய வைத்தது அவசாரமும் கோபமும் மனிதனுக்கு எத்தனை பெரிய எதிரிகள் என்பதை கட்டிக் காட்டியது. உண்மைச் சம்பவங்களை உரைத்த செல்வி அமுதா பாராட்டுக்குரியவர். அவரைப் போல் எல்லாப் பெண்களும் முன் வர வேண்டும்.
சித்தோடு, டி. சந்திரன்.

✉ "சிக்கலில் சின்ஹா" என்ற அரசியல் கட்டுரையில் "தேர்தலில் தோற்றிருந்தாலும், ஜஸ்வந்த் சிங்கிற்குத்தான் நிதியமைச்சர் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் இயக்கம் வற்புறுத்தியது" என்ற தகவல் முற்றிலும் தவறானது.

மாறாக, தேர்தலில் தோற்ற ஜஸ்வந்திங் அவர்களுக்கு வாஜ்பாய் அவர்கள் நிதி அமைச்சர் பொறுப்புக் கொடுக்க விரும்பியும்கூட, ஆர்.எஸ்.எஸ். இயக்கம்தான், தேர்தலில் தோற்றவருக்கு அப்பொறுப்பு தரப் படக் கூடாது என்று வற்புறுத்தியது.
மாடம்பாக்கம், கமலநாதன்.




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

போன வாரமெல்லாம் பிரமாதமான பிரச்னைகள் ஒண்ணும் இல்லாட்டாலும் எப்பவும் சின்னத் தொந்தரவுகள் இருந்திருக்குமே! இப்ப அதெல்லாம் மறந்துடுங்க. கொஞ்சம் கொஞ்சமா உங்க சகஜ நிலைமை மீண்டு வரும். மனசுல அமைதியும் நிம்மதியும் சேரும். உங்க வாழ்க்கைத் துணைவர்/துணைவி எப்பவும் உங்களுக்கு ஆதரவா, அன்பா இருப்பாங்க. அவங்க மனசு கோணாம நடந்துகிட்டாப் போதும். பிரச்னைகளை அவங்க சமாளிப்பாங்க. இந்த வாரம் பக்தி யாத்திரை சான்ஸ் சிலருக்கு இருக்கும். வெளியூர் கோவில்களுக்குப் போய் வருவாங்க. பணக்கையிருப்பு திருப்திகரமா இருக்கும். கூல்ட்ரிங்ஸ் சாப்பிடாதீங்க. தொண்டையில் சிறு பிரச்னைகள் வரலாம். இடமாறுதல்கள் சிலருக்கு வரலாம். தவிர்க்கக் கூடியதா இருந்தா தவிர்க்கப் பாருங்க. எந்த மாறுதல்களுக்கும் இது சமயமில்லை.




தனுசு ராசிக்காரரான 'வணக்கம் தமிழகம்' உமாவுக்கு ரேஸ், லாட்டரி மாதிரியான சமாசாரங்களெல்லாம் வேண்டவே வேண்டாமாம்!

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*




உங்க துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஓங்கி இருக்கும். அதனால, எந்தப் பிரச்னையையும் சுலபமா சமாளிப்பீங்க. வீட்டுல யாருக்காவது உடம்பு சரியில்லாமப் போயி அலைச்சல், பண விரயம் ஏற்படலாம். வீண் செலவுகளைத் தவிர்க்கறது முக்கியம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயமான சூழ்நிலை உருவாகும். புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். சிலருக்கு சிறு விபத்துகளுக்கான சந்தர்ப்பம் உண்டு. கவனமா இருங்க. அரசியல், நிர்வாகத்துறைல இருக்கறவங்க ரொம்ப கவனமா, பொறுப்பா செயல்படணும். பாராட்டு, புகழ் உண்டுன்னாலும் தொழில்ல சறுக்கல் வர சான்ஸ் இருக்கு. கவனம்!

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*




பிரச்னை இல்லாத வாரம். வழக்குகளில் வெற்றி, பணவரவு, புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டு. சிலருக்கு நீண்ட தூரம் பிரயாணங்கள் உண்டு. அதனால பலனும் இருக்கும். விருந்து, கேளிக்கை வாய்ப்புகள் சிலருக்குக் கிடைக்கும். நிர்வாகத் துறைல இருக்கறவங்களுக்கு அரசாங்க அனுகூல சாத்தியம் தெரியுது. உடன் பிறந்தவங்களால சில உதவிகள் எதிர்பார்க்கலாம். திருமண யோகம், கன்னிப் பெண்களுக்கு இருக்கு. பெற்றோர்கள் மூலம் பையன்களுக்குச் சில மகிழ்ச்சிகரமான அனுபவங்கள் கிடைக்கலாம். அது, டூ-வீலர் யோகமாகவும் இருக்கலாம்! வீடு, நிலம் வாங்கற யோசனைல இருந்தீங்கன்னா, இது சரியான சமயம்.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*



நல்ல நேரம் கூடி வருது. புதிய திட்டங்களை செயல்படுத்தத் தயாராகுங்க. அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கப் பணியாளர்களுக்கும் மதிப்பு கூடும். குடும்பத்துல பிரச்னைகள் தீர்ந்து, மகிழ்ச்சி பிறக்கும். புதிய வீடு, கார்னு வாங்கற யோகம் இருக்குது. சிலருக்கு வெளிநாடு சான்ஸ் கூடி வரும். ஆனா, பெற்றோர் உடல் நலத்துல அக்கறை செலுத்துங்க. உஷ்ண நோய்களுக்கு அவங்க ஆளாகலாம். எதிர்பார்த்த பண வரவு, விருந்து உல்லாசம்னு இப்ப மகிழ்ச்சிக்குக் குறைவு இருக்காது. ஆனா, பயணத்துல எச்சரிக்கையா இருங்க. பிக்பாக்கெட் 'யோகமும்' உங்களுக்கு இருக்குது.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*



குருவும் சுக்கிரனும் நல்லா, சாதகமா இருக்காங்க. ஸோ, அறிவாற்றல் பிரகாசிக்கும். பொருளாதார ரீதில கஷ்டமே இருக்காது. லாட்டரி மாதிரி ஸ்பெகுலேடிவ் வருமானங்கள் கூட சிலருக்கு இருக்கும். கணவன் மனைவி உறவு பிரமாதமா இருக்குங்கறதால வீட்டுல குதூகலத்துக்குக் குறைச்சலில்லை. பேச்சாற்றல் ஓங்கி, எந்த இடத்திலும் நீங்க சொல்றது தான் எடுபடறாப்பல இருக்கும். சிலருக்கு திடீர் பிரயாண யோகம் தெரியுது. பயணத்துல எச்சரிக்கை அவசியம். சிறு மருத்துவச் செலவைத் தவிர்க்க முடியாது.


கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*



கிரக அமைப்புகள் சரியா இல்லை. பிரச்னைகள் பலவிதமா வந்து பயமுறுத்தும். எந்தக் காரியத்தையும் ரெண்டு தடவை யோசிச்சு செயல்படுங்க. தடைகள் இருக்கும். தவிர, வீண் வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனக்

நடக்குமென்பார்.

கஷ்டம் உருவாகலாம்! கொடுக்கல் வாங்கல், ஷேர், லாட்டரி எதுவும் வேணாம். பொருள் இழப்பு ஏற்பட்டா பின்னால கஷ்டப்படுவீங்க. கடன் வாங்காதீங்க. வெளிநாடு யோசனை இருந்து, இப்ப வாய்ப்பு வந்தா, கண்டிப்பா தள்ளிப் போடுங்க. நேரம் சரியா இல்லை. சிலருக்கு வேண்டாத இட மாறுதல்கள், குடும்பப் பிரிவு சூழ்நிலை வரலாம். மின்சாரம் நெருப்பு கிட்ட வேலை பார்க்கறவங்க ரொம்ப எச்சரிக்கையா நடந்துக்க வேண்டியது அவசியம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

ஆரோக்கியம் கூடும். எதிரிகள் அடங்கி இருப்பாங்க. புகழ், கௌரவம் கூடும். பணம் பிரச்னை இருக்காது. சொல்லப் போனா எதிர்பாராத பணவரவு கூட சிலருக்கு இருக்கும். மருத்துவர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் வளமான கால கட்டம் இது. நிறைய புகழ் சேரும். அரசுப் பணியாளர்களுக்கு, வேலையில் சிறு சிறு பிரச்னைகள் இருக்கும். சிலருக்கு இடமாறுதல்கள் வரலாம். வீட்டுல சில சுப காரியங்கள் நடக்கும். அதனால செலவு கூடுதலாகலாம்! சில பேர் வாயுத் தொல்லையால அவதிப்படலாம். ரியல் எஸ்டேட், ஷேர் பிஸினஸ் பண்றவங்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டங்களுக்கு சான்ஸ் இருக்கு!




விருச்சிகம் : *(விசாகம் 4 - ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

கஷ்டம் எதுவும் இல்லை சார்! மளமளன்னு உங்க காரியங்கள் எல்லாம் வேகமா நடக்கும். வெற்றி பற்றிய சந்தேகமே வேணாம். எல்லா கிரகமும் சாதகமா இருக்குது! சில பேர் தூர தேசம் பயணம் போவாங்க. வியாபாரிங்கன்னா, வெளிநாட்டுத் தொடர்பு மூலமா வணிக ஆதாயம் எதிர்பார்க்கலாம். ஆசிரியர்கள், கலைஞர்களுக்கு இது நல்ல வாரம். புகழும் பெருமையும் கூடும். குடும்பத்துல இருந்து வந்த சில்லறை மனஸ்தாபங்கள் எதுவும் இனி இருக்காது. உங்க பையன்/பெண் மூலமா அற்புதமான காரியம் ஒண்ணு சாதிச்சிப்பீங்க.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

காரியத் தடைகள், நிம்மதி இழப்பு, தூக்கமின்மை. இந்த வாரம் கொஞ்சம் அடக்கி வாசிக்கணும். வீண் விவகாரங்கள்ல மாட்டிக்கிட்டு கஷ்டப்படாதீங்க. சிலருக்கு மேலதிகாரிகளோட அதிருப்தியை சந்திக்க வேண்டி வரலாம். எச்சரிக்கை அவசியம். கடன் வாங்கறது, ஜாமீன் கையெழுத்துப் போடறது, ரேஸ், லாட்டரி மாதிரி சமாசாரங்கள் வேணவே வேணாம். சிலபேருக்கு இருமல் தொந்தரவு இருக்கும். அப்புறம் இருட்டு வேளைல வெளில சுத்தப் போகாதீங்க. பூச்சிக்கடி 'யோகம்' பீ கேர்ஃபுல்!




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

குருவும் சுக்கிரனும் நல்ல தெம்பா இருந்துக்கிட்டு உங்களை சப்போர்ட் பண்றாங்க. ஸோ, மதிப்பும் செல்வாக்கும் குப்புனு உயரப் போகுது. மனசுல மகிழ்ச்சி பெருகும். பையில பணம் பெருகும். சொந்தக்காரங்களும் நண்பர்களும் போட்டி போட்டுக்கிட்டு உங்களுக்கு உதவ முன் வருவாங்க. வெளியூர்க் கடிதம் ஒண்ணு உங்களை வியப்படையச் செய்யறாப் பல, சந்தோஷம் பிச்சிக்க வெக்கற நல்ல செய்தி கொண்டு வரும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளோட ஆதரவு உறுதி. பெண்களுக்கு நினைச்சது நடக்கும். புடைவையா வாங்கி அடுக்குவீங்க. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கைகூடப் போவுது. மொத்தத்துல பிரமாதமான வாரம் இது!



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கஷ்டகாலம் நீங்கி, சுகப்படப் போறீங்க. உடல் நலக் குறைவு, பணக் கஷ்டம், மனக் கஷ்டம்னு விதவிதமா பாடுபட்டீங்க இல்லையா? எல்லாமா சட்டுனு மறைந்து சந்தோஷமடையப் போறீங்க. வீட்டுலயும் ஆபீஸ்லயும் நல்ல பேரு, புகழ் கிடைக்கும். நண்பர்கள் உதவுவாங்க. புதிய ஆடை, ஆபரண சேர்க்கை இருக்கும். வெளியூர் கோவில்களுக்குப் போய் வருவீங்க. சிலருக்கு வெளியூர் இடமாறுதல்கள் கூட இருக்கலாம். தொழிலதிபர்கள் மட்டும் கொஞ்சம் கூடுதல் சாமர்த்தியத்தோட செயல்படணும் - தொழிலாளிகள் விஷயத்துல! மத்தவங்க காட்டுல கோடை மழைதான்!



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

வாரத் தொடக்கத்துல பிரச்னைன்னு பெரிசா ஒண்ணும் இல்லாம லைஃப் ஸ்மூத்தா போயிட்டிருக்கும். வெள்ளிக்கிழமைக்கப்புறம் பணத்தட்டுப்பாட்டுக்கு ஆளாகலாம். வீண் வம்புகள்ல மாட்டிக்காதீங்க. சிலருக்கு சனி ஆதிக்கம் காரணத்தால, பேச்சுல கடுமை கூடி, கெட்ட பேர் கொண்டாந்துடும். கவனமா இடம் பார்த்துப் பேசுங்க. குடும்பத்துல, சிறு சலசலப்பு இருக்கலாம். விட்டுக் கொடுத்து நடந்துக்கங்க. வெளியூர் பயணங்கள் புதிய முதலீடுகள் - இதெல்லாம் இப்ப தவிர்த்துடறது நல்லது. ●

டக்கும்!

காதுள்ளவன் கேட்கக் கடவன்

வாரா வாரம் ப்ரசன்னாவுக்கு ஷிப்ட் மாறும். பகல், இரவு என்றும் பகலோடு சேர்ந்த ஆஃப் நைட் என்றும். ஆஃப் நைட் ஷிப்ட்களின் போது கம்பெனியிலேயே தூங்கி எழுந்து காலையில் வருவான். ஃபுல் நைட் எனில் இங்கே வந்துதான் தூங்க முடியும்.

இன்றைக்கும் அப்படித்தான் ஏழே கால் இருக்கும் போது வந்தான். காலைக் கடன்கள் மற்றும் டீ சாப்பிடுவது எல்லாம் கம்பெனியிலேயே முடிந்துவிடும். இங்கே வந்த உடனே படுக்கை. தூக்கக் கலக்கத்தை சரிக்கட்ட சில மணி நேரங்களாவது படுத்துக் கொண்டிருந்து விட்டுத்தான் மற்ற காரியங்களைச் செய்வான் அவன். குளிப்பது, சாப்பிடுவது உட்பட. அதன் பிறகு சாயந்திரம் வரை தூங்குவான். மீண்டும் ஐந்தரைக்குக் கிளம்பிப் போக வேண்டும். இந்த நாட்களில் அவனோடு சரிவரப் பேசுவதற்கே முடியாது.

இப்போதும், "எங்கடா ஜோதியக் காணோம்?" என்று கேட்டதற்கு மேல் நந்தகுமாரிடம் அவன் எதுவும் பேசியிருக்கவில்லை. குமரகுருவை வெளியே பார்த்திருப்பானாக இருக்கும். குமரகுரு அப்போதும் தன் முறைக்காகக் குளியல் வரிசையில் காத்துக் கொண்டு நின்றிருப்பான் போல. இவர்களில் சமையல் செய்யத் தெரிந்தவன் நந்தகுமார் ஒருவன் தான். பாத்திரம் கழுவ, மளிகைச் சாமான்கள் வாங்கி வர, காய்கறி அரிந்து கொடுக்க என்பதான ஒத்தாசைகளை மற்றவர்கள் செய்வார்கள். ஆளுக்கொன்றாக அவற்றைச் செய்து கொடுத்துவிட்டு, சற்று முன்புதான் ஜோதிவர்மன் லாண்டரிக்குப் போயிருந்தான். குமரகுரு குளிப்பதற்கும்.

சமையலை முடித்துவிட்டு இவனும் போய்க் குளிக்க வேண்டும். ஒன்பது மணி வரைக்கும்தான் சிறுவாணித் தண்ணீர் வரும். இங்கிருக்கிற எட்டு குடித்தனங்களுக்கும் பொதுவாக வரிசைக்கு ஒன்று வீதம் இரண்டு பைப்கள் வெளியே, காம்பௌண்ட் கேட் ஓரம் உள்ளன. அதில் குடிநீர் எடுத்து வீடுகளில் நிரப்பி வைத்துக் கொள்வார்கள். இடது வரிசை நான்கு வீடுகளுக்கும் வலது வரிசை நான்கு வீடுகளுக்கும் பொதுவாக கிழக்குப் புறத்தில் கேட்டுக்கு இருபுறமும் குளியலறை, கழிப்பறைகள் ஒவ்வொன்று. அங்கே ட்ரம்களில் தண்ணீர்– குழாயில் வரும்போது இருக்கும். நேரம் கடந்து போனால் காணாது. ஒவ்வொரு போர்ஷனிலும் குறைந்தது மூன்று, நான்கு பேர் கொண்ட குடும்பங்கள். மொத்தமும் குளித்துக் கழித்து தண்ணீரைத் தீர்த்து விடுவார்கள்.

இதற்கும் ஆறு மணி தொடங்கிய வரிசை. நீ முந்தி நான் முந்தி என்று ஆண் – பெண், சிறிசு – பெரிசு பேதமின்றி காலை அவஸ்தைகளின் பாடு.

என்ன இருந்தாலும் இந்தக் காலை நேரங்களில் ஒரே அவசரங்களும் இரைச்சல்களுமாகத்தான் இருக்கும். அதிலும் இவர்களுடையது முதல் போர்ஷன் என்பதால் குளியலறை, கழிப்பறை மற்றும் குழாயில் தண்ணீர் பிடிக்கிற பெண்களின் அனாவசியப் பேச்சு சத்தங்கள் காதில் ஓயாமல் விழுந்து பிடுங்கும்.

பெருமாள் இருக்கிறாரே, அவரைத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை. அவருக்குக் காது மந்தம். மற்றவர்கள் சாதாரணக் குரலில் பேசுவது கேட்காது என்பது ஒருபுறமிருக்க, என்னவோ அவர்கள்தான் செவிடர்கள் போல இவர் கத்திப் பேசுவார்.

இடம், பொருள் பாராமல் வீட்டுக் காரிய ஞாபகங்கள் வந்துவிடும் அவருக்கு. அதை உடனே தன் மனைவியிடம் பரிமாறிக் கொள்ளவும் செய்வார். மேற்குக் கடைசியில் அவர்களது போர்ஷன். அதனுள் நீலவேணியக்கா ஏதும் வீட்டுப் பணிகளில் இருப்பாள். பாத்ரூமில் உள்ள பெருமாளுக்கு நினைவு தோன்றி, "ஏன் நீலவேணி, நேத்து



லஞ்ச் குடுத்து விட்டயில்ல. அதுல என்ன ஒரே உப்பா இருந்துது?" என்று தன் குரலை மேலும் உயர்த்திக் கேட்பார். நீலவேணி அக்காவும் அவருக்குச் சளைத்தவளல்ல. அங்கிருந்தபடியே, "நேத்து காலைலயும் அதத்தான சாப்பிட்டீங்க. அப்ப ஒண்ணும் சொல்லலியே" என்பாள். அதோடு நில்லாமல் தொடர்ந்து இது பற்றி விவாதிக்கவும் செய்வார்கள்.

அவர்களது போர்ஷனில் புருஷன் பெண்டாட்டி ரெண்டு பேரும் பேசிக் கொண்டாலே இங்கே கேட்கும். ஆளுக்கொரு பக்கம் இருந்து கொண்டு பேசினால் சொல்லணுமா? இங்குள்ளவர்கள் இதுபற்றி தங்களுக்குள் பேசிக் கொள்வார்களே அல்லாமல் நேரடியாக பெருமாளிடமோ நீலவேணியக்காவிடமோ சொல்வதற்கு முன்வருவதில்லை. காரணம், நீலவேணியக்காவின் வாய்த்திறம் அப்படிப்பட்டது. யாராவது அவள் வாயில் அகப்படும்படி நேர்ந்தால் இலகவதி அம்மா சொல்கிறபடி 'பிலுபிலு'வென்று செவ்வெறும்பாட்டம் பிடித்துக் கொள்வாள்.. இன்னதுதான் என்றில்லாமல் சரமாரியாக வார்த்தைகள் வந்து விழும். கூசாமல் பேசக் கூடியவள்.

அப்படிப்பட்டவள் வாயில் அகப்படும் படியாக நேர்ந்து விட்டது இன்று.

பெருமாள் குளித்துவிட்டு வந்து தலை உலர்த்த இவர்கள் போர்ஷனுக்கு வெளியே வெயில்பட நின்று கொண்டிருந்தார். அவருக்கு அப்போதுதான் ஞாபகம் வந்திருக்க வேண்டும். "நீலவேணி..." என்று அழைத்த சத்தலில் நந்தகுமார் கூட எட்டிப் பார்த்தான். வெளியில் இருந்தவர்களில் சிலரும் அவரைத் திரும்பிப் பார்த்தனர். அவரோ சாவகாசமாக துண்டு நுனியைச் சுருட்டி காது குடைந்து கொண்டிருந்தார். எந்தவித முகக் குறிப்புகளும் இல்லாமல்.

"என்னங்க...?" நீலவேணியக்கா குரல் அங்கிருந்தே விசாரித்தது.

"சுபாவுக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டணும்னு சொன்னயில்ல. அது எத்தனை ரூவா?"

ஷாராஜ்



''என்னது.. ஒரு எலும்பு முறிவு டாக்டருக்கு உதவி செஞ்சதுக்கு உங்களை கைது பண்ணிட்டாங்களா? என்ன உதவி செஞ்சீங்க?''

''அவருக்கு புது பேஷண்ட்டுக்கு ஏற்பாடு பண்ணினேன்.''

– வெ. ராஜாராமன்

பதில் வந்தது.

"லாஸ்ட் டேட் எப்ப?"

பதில் வந்தது.

''வெள்ளிக் கெழமைக்குள்ளதான. அதுக்குள்ள பணம் ரெடியாயிருச்சுன்னாப் பாக்கலாம். இல்லீன்னா உங்கிட்ட இருந்தாக் குடுத்துரேன்..."

இதற்கு மட்டும் எதிர்க் கேள்வி. "எங்கிட்ட ஏதுங்க?"

முன்பு அவர் வேறு ஏதேதோ காரியங்களுக்காகக் கொடுத்த தொகையில் மீதியை அவன் தரவே இல்லையாம். அவற்றில் எவ்வளவு வீதம் மீதமிருக்கும்? விலாவாரியாகக் கணக்கிட்டுப் பேசலானார் பெருமாள்.

ஒன்றில் ஒன்று இணைந்ததான போர்ஷன்களுக்கு முன்பு உள்ளதே நாலடி இடைவெளி. வாசல், நடைபாதை எல்லாமே அதுதான். வாயிற்படிகளை ஒட்டியவாறே ஜலதாரை. பாத்திரங்களைக் கழுவிக் கொள்வதும் அங்கேயே. தண்ணீர் நிறைக்கப்பட்ட பக்கெட், குடம், சிறிய ட்ரம் போன்றவை ஜலதாரையின் அருகில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும். கூடவே கழுவிக் கவிழ்த்திய பாத்திரங்கள், கூரையில் கட்டிய கயிற்றில் காயும் துணிகள். இவ்வளவுக்கிடையேதான் ஆட்கள் போய் வர வேண்டும். இதனால் பெருமாள் நடுவழியில் நிற்பது தண்ணீர் எடுக்கிற பெண்களுக்கு இடைஞ்சலாகி விட்டது. அவரை ஒதுங்கி நிற்கச் சொன்னார்கள். அவரும் ஒதுங்கி நின்று கொண்டார். குமரகுருவின் சைக்கிள் நிறுத்தப்பட்ட இடத்தில்.

தூங்கிக் கொண்டிருந்த ப்ரசன்னாவுக்கு பெருமாளின் ஓயாத உரத்த பேச்சால் உறக்கம் கலைந்து விட்டது. "இந்த ஸ்பீக்கர் வாயன் எதுக்கு இங்க வந்து கத்திட்டிருக்கறான்?" என்றபடியே எழுந்து பாயிலேயே உட்கார்ந்தான். அவர்கள் இருவரும் முடிக்கிற பாடில்லை. ப்ரசன்னாவுக்கு மிகுந்த எரிச்சல். எழுந்து சென்று கதவோரம் நின்றவன், இவனும் எதிர்பார்க்காதபடி பெருமானைக் கைநீட்டி, "ஏய்யா... அறிவிருக்கா உனக்கு?" என்று கேட்டுவிட்டு வந்து மீண்டும் படுத்துக் கொண்டான். என்ன, ஏதென்று கணிப்பதற்குள்ளாகவே நடந்து விட்டது இது.

அவன் சொன்னது அவரது காதில் விழுந்திருக்காது. நந்தகுமார் பார்க்கும்போது முகம் குழம்ப யோசிக்கிறவராக நின்று கொண்டிருந்தார். பிறகு தனக்குத்தானே பேசியபடி மேற்கே சென்றும் விட்டார். பெருமாள் நகர்ந்ததுமே இங்கே பார்த்து, "ஒரு கேள்வி கேட்டாலும் நாக்கப் புடுங்கிக்கிற மாதிரி கேட்டான், போ" என்றார் எதிர் போர்ஷனிலிருந்து கணபதி. நந்தகுமார் சிரித்துக் கொண்டான்.

வேகவைத்த காய்கறிகளுடன் 'மாகி' நூடுல்ஸை சமைத்து முடிப்பதற்குள் ஜோதிவர்மன் வந்து விட்டான். அடுத்ததாக குமரகுருவும். அவர்களிடம் நடந்ததைத் தெரிவிக்கவே, "எதுக்குடா வீணா அந்தாளப் போயி திட்டணும்?" என்றான் குமரகுரு. ஈரத் துண்டு, ஜட்டிகளை காயப் போட்டவாறே.

ஸ்டவ்வில் சிகரெட்டைப் பொருத்திக் கொண்டு ஜோதிவர்மன் சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். "ஆமா... இங்க வந்து நின்னுட்டு வாள் வாள்னு கத்துனா என்ன பண்றது? அவனே நைட் ஷிப்ட் முடிச்சுட்டு வந்து படுத்திருக்கறான். தூங்க விடாம அந்தாளு கத்திட்டிருந்தா மனுசனுக்கு கடுப்பாகாதா? இப்படி யாரும் கேக்கறதில்லேங்கறதுனாலதான் அவரு பாட்டுக்கு ஸ்பீக்கர் வாயத் தொறந்தர்றாரு. இனி மேலாவது அப்படி சத்தம் போட மாட்டாரில்ல?"

சமையல் முடிந்ததும் நந்தகுமார் குளிக்கத் தயாரானான். அவன் தலைக்கு எண்ணெய் வைத்துக் கொண்டிருக்கையில் ஆயில் கேனுடன் வந்து அதை நிரப்பிக் கொண்டான் குமரகுரு. ஒரு பழைய துணியையும் தேடிக் கிழித்தெடுத்துக் கொண்டு வெளியே சென்றான். சைக்

கிளை நுடைப்பதற்காக. அவனுக்கு கூரியர் சர்வீஸ் ஒன்றில் வேலை. சொந்தமாக சைக்கிள் வைத்திருக்க வேண்டும் என்கிற அவர்களின் நிபந்தனைக்காக சைக்கிள் வாங்க வேண்டியதாகி விட்டது. செகண்ட் ஹேண்ட் என்றாலும் தினமும் துடைத்து அவ்வப்போது எண்ணெய் விட்டு நல்ல நிலையில் வைத்திருப்பான்.

துண்டு, சோப்பு டப்பா முதலியவைகளுடன் நந்தகுமாரும் வெளியே வரும்போது குழாய்களில் தண்ணீர் பிடிக்கிற அவசரங்கள் குறைந்து விட்டன. குளியல் மற்றும் கழிப்பறைக் காத்திருப்பு வரிசையில் ஓரிருவரே.

சைக்கிள் துடைக்கிற குமரகுரு அருகில் நின்றபடி, குளியலறை வரிசையையும் கவனித்துக் கொள்ளலானான் நந்தகுமார். குழாயடி சத்தங்கள் குறையவே இப்போது டி.வி., டேப் ரெக்கார்டர் தருகிற வசனங்களும் பாடல்களும் ஆங்காங்கிருந்து கேட்கலாயின. இருந்தாற்போல, "எந்த நாயி அப்படிச் சொல்லுச்சு?" என்கிற நீலவேணி அக்காவின் கேள்வியில் நந்தகுமார் திரும்பினான். அவர்கள் போர்ஷனுக்கு வெளியே நின்றிருந்தனர் அவளும் பெருமாளும்.

"உங்களப் பாத்து அறிவிருக்குதான்னு கேட்டிருக்கறான். நீங்க பேசாம வந்துட்டீங்களே" என்றதில் குமரகுரு திகைப்புடன் நந்தகுமாரைப் பார்த்தான். "நான் நெனச்ச மாதிரியே ஆயிருச்சு. இன்னைக்கு ப்ரசன்னா தீந்தான்."

அப்படியானால் ப்ரசன்னா சொன்னது பெருமாளுக்குக் கேட்டிருக்கும்தான் போல. தான் பதில் பேசுவதை விட தனது மனைவி மூலம் கவனித்துக் கொள்ளலாம் என்றுதான் பேசாமல் போனாரா? ஆனால் அவள் நேரடியாக வந்து விசாரிப்பதாகத் தெரியவில்லை. தன் பாட்டுக்கு பேசுவதாக ஜாடைப் பேச்சுதான். இடையே உள்ளவர்களின் பேச்சுகள், பாத்திரங்களைக் கழுவுவதில் உரசும் ஒலிகள் கூட சன்னமாகி விட்டன. யாரோ, "அந்த டேப்பத்தான் கொஞ்சம் நிறுத்தேண்டா" என்பதை அடுத்து அதன் வால்யூம் குறைக்கப்பட்டது. மற்ற சில போர்ஷன்களிலிருந்து ஆண்களும் பெண்களுமாய் எட்டிப் பார்க்கவும் தங்களுக்குள் விசாரித்துக் கொள்ளவும் செய்தனர்.

"இப்பத்தான் மீசை மொளைக்கற பயலுங்கெளெல்லாம் உங்கள வயசு வித்தியாசமில்லாம பேசிட்டுப் போறானுகளே... நீங்க மீசை வெச்ச ஆம்பளையான்னு கேக்கறேன். அவனை அப்பவே 'ரை...'ன்னு ஒண்ணு வெச்சிருக்க வேண்டாம்?"

"அவன் எதுக்கு அப்படி சொன்னான்னே தெரியலை நீலவேணின்னா..."

"அவுங்களைப் போயி..." என்றதைத் தொடர்ந்து நீலவேணியக்கா சொன்ன செய்கைக்கு எட்டிப் பார்க்கிற இளம் பெண்கள் முகத்தை இழுத்துக் கொண்டனர். உள்ளேயிருந்து ஜோதிவர்மன் வந்தான். அவனைப் பார்த்ததும் குமரகுரு ஆயில்கேனை சைக்கிளுக்குக் கீழே வைத்துவிட்டு எழுந்தான். ஜோதிவர்மன் அங்கிருந்தபடியே, "இங்க பாருங்க, அனாவசியமா வாயில வந்ததையெல்லாம் பேசிட்டிருக்காதீங்க" என்றான், நீலவேணியக்காவை.

பட்டுப் புடவை

பரிசுப் போட்டி – 4

முடிவு!

'மம்தா பானர்ஜி' என்கிற சரியான விடையை எழுதி பி.எம். சில்க் சாரீஸ் வழங்கும் பட்டுப் புடவையை பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

சி.என். சுகன்யா,
108, மஹாதான தெரு,
திருவிடைமருதூர் – 612 104.

"நானா அனாவசியமாப் பேசறேன். நீங்க எதுக்குடா எம் புருசனைச் சொல்றீங்க?"

வேடிக்கையாளர்களின் பார்வை அதற்குப் பிறகு இங்கேயும் பதியலானது. இவர்கள் சம்பந்தமான விஷயம் என்பதே அப்போதுதான் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். குமரகுரு ஜோதிவர்மனிடம், "இங்க நின்னுட்டு அவங்களோட கத்த வேண்டாம்டா. வா, அங்கயே போயி பேசிக்கலாம்" என்று அழைத்துச் சென்றான். நந்தகுமாரும் அவர்களைத் தொடர்ந்தான். இவன் எதுவும் பேசவில்லை. ஜோதிவர்மனும் குமரகுருவுமே நடந்ததை நேரில் பார்த்தது போல விளக்கினார்கள்.

"ப்ரசன்னா அப்பத்தான் நைட் ஷிப்ட் முடிச்சுட்டு வந்து படுத்துட்டிருந்தான். எங்க



"இந்த டாக்டர் யாரையும் நம்ப மாட்டார் போலிருக்கு."

"எப்படிச் சொல்றே?"

"நாடி பிடிச்சு பார்க்கறதுக்கு பதிலா பாக்கெட்டுக்குள்ளே கையைவிட்டுப் பார்க்கிறார்!"

– வி.எஸ். கணேசன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

ரூமுக்கு முன்னாடி வந்து நின்னுட்டு இவரு சத்தம் போட்டுட்டிருந்தாரு. அவனுக்கு தூங்கறதுக்கு டிஸ்டர்ப்பா இருக்கேன்னு தான் அவன் அப்படிச் சொன்னான்."

"உங்க ரூமுன்னா அதுக்கு முன்னாடி வேற யாரும் வந்து பேசக் கூடாதா? என்னமோ உங்களுக்குன்னே கிருஷ்ணமூர்த்தி அக்ரிமெண்ட் போட்டுக் குடுத்துட்டாப்புல இல்ல பேசற நீ? எல்லாரும் இங்க உங்கள மாதிரி வாடகைக்குக் குடியிருக்கறவங்க தான். உங்க ரூமுக்குள்ள வந்து தூங்கிட்டிருக்கறவன் காதுலயா கத்துனாரு அவரு? நடக்கற நடத்துலதான நின்னுட்டிருந்தாரு."

ஜோதிவர்மனும் குமரகுருவும் சொல்கிற எதையும் நீலவேணியக்கா ஒத்துக் கொள்வதாக இல்லை. தன் ஸ்தாதியைக் கூட்டிக் கொண்டு இடுப்பில் இடது கையும், கேள்வியாக உயரும் வலது கை பாவனையுமாக விடாமல் பேசிக் கொண்டிருந்தாள். மார்பில் கைகளைக் கட்டிக் கொண்டு அவளையும் இவர்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் பெருமாள். பக்கத்து போர்ஷன்காரர்களும் அருகே வந்து சூழ்ந்து நின்றனர். "சரி விடுங்க. இதப் போயி பெரிசு பண்ணிட்டு" என்ற சிலரின் சமரசமும் எடுபடக் காணோம்.

குளிக்கப் போவதா, இது முடிகிற வரை தானும் கூடவே இருப்பதா என யோசித்துக் கொண்டிருந்தான் நந்தகுமார். தண்ணீர் நின்று விடப் போகிறதே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது. தலைக்கு எண்ணெய் தேய்த்திருக்காவிட்டாலாவது குளிக்காமல் இருந்து விடலாம். இனி அதற்கும் முடியாதே. சமையலுக்குப் பிடித்து வைத்திருப்பதிலிருந்துதான் ஒரு குடம் எடுத்துக் குளிக்க வேண்டியிருக்கும். வேறென்ன செய்ய?

நீலவேணியக்கா யாருடைய பேச்சுக்கும் சம்மதிக்காமல், "கிருஷ்ணமூர்த்தி வாடகை வாங்க வருவாரில்ல. அப்ப அவர்கிட்டயே நான் கேக்கறேன், இந்த நாயத்தை" என்றாள். நந்தகுமாருக்கு அப்போதுதான் பிரச்னையின் தீவிரம் உறைத்தது. பேச்சலர்கள் என்பதால் வீடு கிடைப்பதே கஷ்டம். தெரிந்தவர்கள், புரோக்கர்கள் மூலமாக வெல்லாம் தேடி அலைந்திருந்தார்கள். கடைசியாக, ஜோதிவர்மனுடன் பணி புரிகிற ஒருவரது ஏற்பாட்டில்தான் இங்கே கிடைத்தது. மிகுந்த சிரமத்திற்குப் பிறகு.


"பொண்டு புள்ளைகளோட பொழங்கற எடம்ப்பா. இவர் சொல்றதுனால உங்களுக்கு வீடு தர்றேன். வாடகை குடுக்கறது கொஞ்சம் முன்னப் பின்ன இருந்தாக் கூட பரவால்ல. ஆனா ஒழுக்கமா இருக்கணும். அதுல ஏதாவது தப்பு நடந்துதுன்னா மறு பேச்சில்லாம காலி பண்ணச் சொல்லிரு வேன்" என்றிருந்தார் கிருஷ்ணமூர்த்தி. அதனால், நந்தகுமார், "சரி.. வாங்கடா. பிரச்னையை நாமளே பெரிசு பண்ண வேண்டாம்" என்றழைத்தான்.

"நீ சும்மா இர்றா. என்னமோ இவங்களுக்குத்தான் பேசத் தெரியும், பண்ணத் தெரியும்னு குதிக்கறாங்க. ஹௌஸ் ஓனர்கிட்ட சொன்னா என்ன? வீட்டக் காலி பண்ணுங்கம்பாரு, அவ்வளவுதான். இங்க இல்லன்னா நமக்கு இந்த கோயமுத்தூர்ல வேற எடமே கெடைக்காமப் போயிருமாக்கும்?" ஜோதிவர்மனும் விடுவதாக இல்லை. சம்பந்தப்பட்ட ப்ரசன்னாவே வந்து பேசியிருந்தால் இவ்வளவுக்கு ஆகியிராது. ஆனால் அவனைத் தவிர மற்ற எல்லாரும்தான் இங்கே இருக்கிறார்கள்.

நந்தகுமாருக்குத் தோன்றவே, அவனையே எழுப்பிக் கூட்டி வரலாம் என்று திரும்பினான். திரும்பியதுமே தெரிந்தது. குமரகுருவின் சைக்கிள் கேரியர் மீது ப்ரசன்னா உட்கார்ந்திருப்பது. கையில் தட்டு. அவனை நோக்கி நடந்தான். தட்டில் இவன் சமைத்து வைத்த நூடுல்ஸ். அதை சாவகாசமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நெருங்கும்போதே நூடுல்ஸை விரல்களில் அளைந்து கொண்டு ப்ரசன்னா இவனிடம் கேட்டான் :

"அவங்களோட உங்களுக்கு என்னடா சண்டை? எல்லாருமா சேர்ந்து சத்தம் போட்டுட்டிருக்கறீங்க, என்னைத் தூங்க விடாம?" ●

டெலிவிஷன் கம்பெனி விளம்பரங்கள்; பணத்தைத் திருப்பித் தருவார்களா?



"**ப**ழைய டீ.வியைக் கொடுத்துவிட்டு, எங்கள் புத்தம் புதிய டீ.வியை வாங்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கூடுதல் தொகை செலுத்த வேண்டியிருக்கும் அவ்வளவே!' என்பது போன்ற விளம்பரங்கள் புதிதில்லைதான். ஆனால் சமீபத்தில் சில விளம்பரங்கள் இதையும் தாண்டி ஒருபடி மேலே சென்று விட்டன.

'ரிமோட்டோடு கூடிய உங்கள் பழைய கலர் டீ.வி. எதையாவது எங்களிடம் கொடுங்கள். கூடவே 14,900/- ரூபாயை செலுத்திவிட்டு எங்களது புதிய, ரிமோட்டுடன் கூடிய பஸூகா-21 கலர் டெலிவிஷன் செட்டை பெற்றுச் செல்லுங்கள். நீங்கள் செலுத்தும் இந்த முழுதொகையையும் ஆறு வருடங்களுக்குப் பிறகு நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.' இதே போல் தங்கள் வேறு சில மாடல் டீ.விக்களுக்கும் (வெவ்வேறு தொகைகளைக் குறிப்பிட்டு) விளம்பரம் செய்துள்ளது வீடியோகான் நிறுவனம்.

இந்தியாவிலேயே முதல் முறையாக நமக்குத் தெரிந்து இப்படி ஒரு (கொடுத்த பணத்தை திருப்பித் தரும்) திட்டம் இப்போதுதான் அறிமுகப்படுத்தப்படுகிறது.

"இந்தியாவில் மட்டுமல்ல. உலகிலேயே கூட இதுதான் முதல் முறை" என்கிறார்கள் இந்த திட்டம் தொடர்பான சந்தேகங்களைச் சரி செய்து கொள்வதற்காக நாம் அணுகிய வீடியோகான் நிறுவனத்தினர் மற்றும் டீலர்கள்.

நாம் அடுக்கிய பல்வேறு ஐயங்கள் மற்றும் 'குற்றச்சாட்டு'களுக்கு அவர்களிடமிருந்து வந்த பதிலின் தொகுப்பு இதுதான். "இப்படிப்பட்ட திட்டத்தில் விற்கப்படும் டீ.வி. செட்கள் கொஞ்சம் தரம் குறைந்தவையாக இருக்குமோ என்ற சந்தேகமெல்லாம் தேவையில்லாதது. காரணம் பிக்சர் ட்யூப் உட்பட மொத்த டீ.வி செட்டுக்கும் ஏழு வருட கியாரண்டி அளிக்கிறோம்.

"பல கோடி ரூபாய் செலவில் தெர்மல் ப்ளாண்ட் ஒன்றைத் தொடங்க இருக்கிறோம். ஸ்ரீபெரும்புதூரில் விரைவில் பெருமளவில் டீ.வி. செட்கள் தயாரிக்க இருக்கிறோம். இவற்றின் காரணமாகத்தான் இந்த வித்தியாசமான திட்டம்!"

கூறிய காரணங்கள் உண்மையாக இருக்கக்கூடும். ஆனால் அதே சமயம் அவை மட்டுமே மொத்த உண்மைகள் ஆகிவிடாது என்று நமக்குப் பட்டது. எனவே, "இது எப்படி வீடியோகான் நிறுவனத்தினருக்கு மட்டும் சாத்தியமாகிறது? அப்படியானால் இது போன்ற வாடிக்கையாளருக்குச் சாதகமான திட்டங்களை உங்களைப் போன்ற பிற டீ.வி. தயாரிப்பு நிறுவனங்கள் ஏன் அறிமுகப்படுத்தவில்லை?" என்று தாம்ஸன் டீ.வி. செட் தயாரிப்பு நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவருடைய வாயைக் கிண்டினோம்.

"டெபாஸிட்டில் கிடைக்கும் வட்டியை கணக்கிட்டுப் பாருங்கள். அது மட்டுமல்ல; முன்பு வெறும் நான்கைந்து டீ.வி. தயாரிப்பு நிறுவனங்கள் மட்டுமே நம் நாட்டில் இருந்த போது, ப்ரீமியம் ப்ராண்ட், மீடியம் ப்ராண்ட் என்றெல்லாம் இமேஜை உருவாக்கி அந்த லாபத்தை ஈட்ட முடிந்தது. இப்போது சுமார் பதினைந்து ப்ராண்ட் டீ.விக்கள் விற்பனைக்கு வந்துள்ள நிலையில் இப்படியெல்லாம் லாபம் சம்பாதிப்பது சுலபமல்ல. தவிர இப்படி புதிய போட்டிகள் வரும் போது, "panic reaction" எனப்படும் உணர்வில் சில நிறுவனங்கள் இப்படி அதிரடியான திட்டங்களை அறிமுகப்படுத்துவதுண்டு. சோனி, தாம்ஸன் போன்ற சர்வதேச ஜாம்பவான்கள் தொலைநோக்குப் பார்வையோடு, லாபத்தில் ஒரு பங்கு, வாடிக்கையாளர்களை அடையட்டும் என்கிற வகையில் சில சீசன்களில் புதிய திட்டங்களை அறிவிப்பார்களே தவிர, இன்றைக்கு மார்க்கெட்டில் நம் பங்கு அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக, பொன்முட்டையிடும் வாத்தைக் கொல்ல மாட்டார்கள்" என்று தடாலடியான பதில் வந்தது!

— ஜி.எஸ்.எஸ்.

"பந்த் கம்ரே மே" (மூடிய அறைக்குள்), "ஸாலி பூர் கர்வாலி" (மைத்துனியே முழுமையான மனைவி), "பராய் நாரி லகே ப்யாரி" (மாற்றான் தோட்டத்து மல்லிகைக்குத்தான் மணம் அதிகம்). "பதி அநாடி தேவர் கிலாடி" (கொண்டவன் அசடு; கொழுந்தன் கில்லாடி), "பதி கீ ப்ரேமி" (கணவனின் காதலி), "பதி நரம், பத்னி கரம்" (கணவன்...) சட்... விட்டுத் தள்ளுங்கள், கற்புடைய பேனா எழுத மறுக்கிறது.

இவற்றை எல்லாம் உச்சரித்தாலே ஒரு பாட்டில் ஃபினாயிலை ஊற்றி வாயைக் கழுவ வேண்டும் போல் இருக்கையில், இந்தத் தலைப்புகளில் நாடகங்கள் நடிக்கப்பட்டால்...?

"செக்ஸ் - காமெடி" என்ற பெயரில், பிரதானமாக மும்பையிலும், நாசிக், புனா, நாக்பூர் என்றும், மஹாராஷ்ட்ரா முழுதும் சக்கை போடு போடும் இந்த மேடை நாடகங்கள், நடக்குமிடமெல்லாம் ட்ராஃபிக் ஜாம்தான்! ஆடிட்டோரியங்களெல்லாம் ஹவுஸ் ஃபுல்தான்!

ஐந்து நிமிடத்துக்குகொரு ஜோக் என்ற கணக்கில், இரட்டை அர்த்த வசனங்களும், தரங்கெட்ட கதை அம்சங்களும் கொண்ட இந்த ஆபாசக் குவியல்களை, ரூ. 200, 250 என்று காசு கொடுத்து, டிக்கெட் வாங்கி (வி)ரசிப்பவர்களுக்கு எப்படி இருக்கிறதோ, மந்திரி பிரமோத் நவால்கருக்கு கல்லை விட்டு அடிக்கலாம் போல் தானிருக்கிறது! "கல்"சுரல் அஃபேர்ஸ் மினிஸ்டரா யிற்றே! எடுத்து வீசியும் விட்டார்!

1974 லேயே மராத்திய அரசால் நிறுவப்பட்டு, சாந்தாராம் நந்தகாவ்கர் என்ற கவிஞரின் தலைமையில், 17 நபர்களுடன் குறட்டை விட்டுக் கொண்டிருந்த "Script Scrutiny Board' ஐத் தட்டி எழுப்பி, நகரத்தின் எந்த மூலையில் நாடகம் நடந்தாலும், அதனுடைய ஸ்கிரிப்ட்டை பரிசீலித்து, நமது கலாசாரத்துக்கு ஏற்றதாய் இருந்தால் மட்டுமே, அனுமதிக்கப்பட வேண்டும் என



• பிரமோத் நவால்கர்

கட்டளை பிறப்பித்து விட்டார்.

அதே மூச்சில், "ராக் ம்யூசிக் கான்சர்டு" களையும் விளாசியிருக்கிறார். காம வாடை வீசும் பாடல்களுக்கேற்ப, ஏராளமான இளசுகள், இறுக்கமான சூழலில் (ஜீன்ஸ், டைட்ஸ் இறுக்கம் தான்) நெருக்கமாக நடனமாடுவதும், பீர் ஆறுகளில் நீந்தி, பொது இடங்களில் முத்தமிடுவதும் கூடவே கூடாதென்பதுடன், நிகழ்ச்சியில் இடம் பெறும் பாடல் வரிகளும் முன்னதாகவே போர்டிடம் சமர்ப்பிக்கப்பட்டு சென்சார் செய்யப்பட்ட பின்னரே, மேடையில் இசைக்கப்படும் என்றும் திட்டவட்டமாக வரையறுத்து விட்டார்.

இந்தச் சட்டதிட்டங்களை, குழுவினர் மிகப் பொறுப்புணர்ச்சியோடு சிரமேற்கொண்டிருப்பதால், மேற்கூறப்பட்ட



• யோகேந்திர கோங்கர்

நாடகங்கள் அனைத்துமே தடை செய்யப்பட்டு விட்டன.

நீண்ட காலமாக வெற்றி உலா வந்து கொண்டிருக்கும் இந்த உளறல் களஞ்சியங்கள் மீது திடீரென்று இவர்கள் நெற்றிக் கண்ணைத் திறக்கக் காரணம்?

"பலதரப்பட்ட கம்ப்ளெயிண்டுகள்தான்! அக்னி

அ(ந்த)ரங்க நாயகர்கள்!



* சாந்தாராம் நந்தகாவ்கர்

சிக்ஷா மஞ்ச்சை சார்ந்த திருமதி அல்கா பாண்டே, இந்த நாடகத் தயாரிப் பாளர்கள் வெளியிடும் ஆபாச விளம்பரங்களைக் கூட கத்திரித்து அனுப்பி யிருந்தார்! உடனே 'ஸாவி பூர் கர்வாலி' நாடகத் துக்குச் சென்றேன்; என் னால் ஐந்து நிமிடம் கூட உட்கார முடியவில்லை'' என்கிறார் நந்தகாவ்கர்!

நவால்கர் 'பதி நரம் பத்னி கரம்' பார்க்கச் சென்றிருக்கிறார்; முதல் ஸீனிலேயே கணவன் மனைவியை 'ஒரு மாதிரி'யான போஸில் காட்ட, எழுந்து விட்டார் அமைச்சர்; அடுத் தடுத்து அவர் 'திடீர் விஸிட்' செய்த நாடகங்களில், ஓரினச் சேர்க்கை, ஆண் விபசாரம் போன்றவை தாறுமாறாக அலசப்பட் டிருக்கவே, பொறுத்தது போதும் எனப் பொங்கி எழுந்து விட்டார்.

''முதலில் நாங்கள் ஸ்கிரிப்டை வரவழைத்து, முழுவதுமாகப் பரிசீலிக்கி றோம்; ஒரு சில நாடகங் களில் தலைப்பு மட்டும் கன்னாபின்னா வென் றிருக்கும்; ''பாய்க்கோ பேக்ஷா மெஹனீ பாரி'' (மனைவியைவிட மைத்துனி மேல்) என்ற மராத்தி நாடகத்தில் தலைப்பை மட்டும் மாற்றச் சொன்னோம்; ஸாவி பூரி கர்வாலியில் 81 'கட்'களுக்குப் பின் 'பாஸ்' செய்தோம். ஆனால் அந்த டைரக்டர், கள்ளத்தனமாக பழைய ஸ்கிரிப்டையே உபயோகித்ததால், நாடகத் துக்கு லைசன்ஸை ரத்து செய்து விட்டோம்'' என் கிறார் நந்தகாவ்கர். இப்படி ''ஸர்ப்ரைஸ் செக்'' செய்வ தற்கென்றே, எல்லா நாடக அரங்குகளிலும் இவர்களுக் கென்றே இரண்டு ஸீட்கள் பிரத்யேகமாக ஒதுக்கப் பட்டிருக்கின்றன.

'உன்னதமான வேதத்தையும், ராமாயணத்தையும் பாரதத்தையும் நாம் மேலை நாட் டோருக்குத் தாரை வார்த்து விட்டு, பதிலாக அவர்கள் நிராகரித்த குப்பையையெல்லாம் சுவீகரித்துக் கொண்டுள்ளோமே' என ஏக வருத்தம் நந்தகாவ்கருக்கு!

ஆனால் இது போன்ற 'ஸூப்பர் ஹிட்'டுகளை எழுதித் தயாரித்து, இயக்கி, நடித்தும் வரும் 33 வயது யோகேந்திர கோங்கரின் அலைவரிசை வித்தியாச மாக இருக்கிறது.

''நானும் முதலில் சுத்த பத்தமாகத்தான் ஆரம்பித் தேன்'' என்பவர், ''ஈஷ்வர் , சாக்ஷி'' என்ற என் முதல் நாடகத்தை, அந்த ஈசுவரன் சாட்சியாகச் சொல்கிறேன், பார்த்து ரசித்தது அந்த ஈசுவரன் மட்டுமே! அடுத்து 'ஸாவி பூரி கர்வாலி', 'பராய் நாரி லகே ப்யாரி' இரண்டை யும் தயாரித்தேன்; பிய்த்து உதறுகிறது! மும்பையில் மட்டுமே 81 முறை அரங்கேறிவிட்டது! என் ஆடியன்ஸ் நல்ல குடும் பத்தினரும், உயர் பதவியி லிருப்பவர்களும் தான்! வசூல் ஸூப்பர் என்பதால், இந்தூர், டில்லி முதல், அயல் நாடுகள் வரை எனக்கு அழைப்பு இருக்கிறது. என் ஆர்ட் டிஸ்டுகள் உயர் குடும்பங் களிலிருந்து வருவதால், அவர்களை விளம்பரங் களுக்குப் பயன்படுத்துவ தில்லை! சும்மா, ஒரு கவர்ச்சிக்கு, பிகினி உடையில் அயல் நாட்டு மாடல்களைப் பயன்படுத்துவதில் தவறு என்ன? இந்தி சினிமாவில் ஆபாசம் குறைச்சலா?

"சோலி கே பீச்சே க்யா ஹை" என்று இவர்கள். ஆராய்ச்சி செய்யலாமாக்கும்? அண்மையில் மறைந்த மராத்தி நடிகர் தாதா கொண்ட்கே (கின்னஸ் சாதனையாளர்) தமது இரட்டை அர்த்த வசனங்களுக்குப் பெயர் போனவரா யிற்றே? அவர் பெயரில் மராத்திய அரசு அவார்டே அறிவித்துள்ளதே! அரசின் இந்த இரட்டை வேஷம், இரட்டை அர்த்த வசனங்களைக் காட்டிலும் கேவலமில்லையா?" என்று சாடுகிறார்.

இவரைப் போலவே, "ஓம் நமசிவாய பாடிக் கொண்டு எம்.டி.வியில் பேய் ஆட்டம் ஆடுகிறார்களே? அவல அசைவுகளுக்குப் பெயர் போன மைக்கேல் ஜாக்சனை அரசே ஆரத்தி சுற்றி வரவேற்றதே? 'கர்வாலி - பகர்வாலி' போன்ற ஒரு ஆண் இரண்டு பெண் கதைகளை சினிமாவிலே அனு மதிக்கிறார்களே?" என்பதில் துவங்கி, வழக்கமான கோயில் சிற்பங்கள், கஜுராஹோ விஷயங்கள் வரை இழுத்தடித்து வாதாடுகிறார்கள்.

"இசை நாடக அமைப்புகளுக்கு ஒலி வடிவங்கள் முக்கியம்; ஸ்க்ருடினி போர்டு, செவிக்கு நாராசமானவற்றைக் கண்டிக்கும். கண்ணுக்கு ஒவ்வாதவற்றை கவனிப்பது ஹோம் டிபார்ட்மெண்ட் பொறுப்பு. மத்திய அரசு கலைத்துறையை மேம்படுத்தும் பாருங்கள்...." என நவில்கிறார் நவால்கர்.

தனி மனித சுதந்தரங்கள் பற்றி ஓயாமல் புலம்புவோருக்கு சாந்தாராம் நந்தகாவ்கர் சாந்தமாகக் கூறும் பதில்: "நம் ஆடைகளுக்குக் கீழே நாம் நிர்வாண மானவர்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்தான்; ஆனால் அதைப் பிரகடனப்படுத்திக் கொண்டு அலை கிறோமா? அந்தரங்கம் என்பது அவரவருக்குச் சொந்தமான ஒன்று; அதை அரங்கத்திற்கு கொண்டு வந்து அசிங்கப்படுத்த வேண்டுமா?"


தொய்ந்து கொண்டிருக்கும் அரசியல் 'இமேஜை' சரிக்கட்டத்தான் இந்த தகிடுதத்தங்கள் என்பது பிரிதொரு வாதம். யார் எதைச் சொன்னாலும், அ(ந்த)ரங்க நாயகர்களுக்கு இன்னும் கொஞ்ச நாளுக்கு அஷ்டமத்தில் சனிதான்!


— ஜெயஸ்ரீ ராஜ்

காதில் விழுந்தவை :









இருவரை அழைக்க ஏகப் போட்டி!

●● அ.தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும், பிரதமரையும், அத்வானியையும், தமிழகத்துக்கு அழைப்பதில் போட்டி போடுகின்றன. செப்டெம்பர் மாதம் அண்ணா பிறந்த நாள் விழாப் பேரணிக்கு இருவரையும் அழைத்து விட்டார் வை.கோ. அவருக்கு முன்னால் நாம் அழைத்து வர வேண்டும் என்று ஆகஸ்ட் மாதம் திண்டுக்கல்லில் திடீர் நன்றி அறிவிப்புக் கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டு இந்த இருவரையும் அழைத்திருக்கிறார் ஜெ. 'நாம் மட்டும் சும்மா இருப்பதா? நவம்பர் மாதம் இந்திரா பிறந்த நாளை முன்னிட்டு, மாநில மாநாடு நடத்தி இருவரையும் அழைக்கலாம்!' என்று ராஜீவ் காங்கிரஸ் பிரமுகர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களாம். இந்த நிலையில் மாமல்லபுரத்தில் நடந்த சித்ரா பௌர்ணமி விழாவுக்கே இந்த இருவரையும் அழைத்திருக்கலாம் என்று பா.ம.க.வில் முணுமுணுக்கிறார்கள்!

●● தமக்கு எதிராக வாதாடிய மத்திய அரசு வழக்கறிஞர்களை மாற்றி, ரத்தத்தின் ரத்தங்களை அரசு வழக்கறிஞர்களாக நியமித்தாகி விட்டது. தமது வருமானம் பற்றிய மேட்டரை புலனாய்வு செய்த வருமான வரி அதிகாரிகளையும் மாற்றியாகி விட்டது. சசிகலா, மற்றும் 'சுரன்' சகோதரர்கள் வழக்குகளைப் புலனாய்வு செய்த அமுலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கு மாற்றல் ஆணை வந்து கொண்டே இருக்கிறதாம். அது சரி; அப்புறம் அம்மாவின் அடுத்த குறி? சமீபத்தில் தில்லி சென்று பிரதமரையும் அத்வானியையும் சந்தித்து விட்டு வந்தார் அல்லவா! அப்போது அவர் வைத்த முக்கியமான வேண்டுகோள்களில் ஒன்று, தமிழக கவர்னரை உடனே மாற்றி விட்டுத் தமக்கு அனுசரணையான ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதுதான். ஏற்கெனவே சிறுபான்மையினர் தங்கள் மீது சந்தேகக் கண் கொண்டு பார்த்து வரும் நிலையில் அதுபோன்று செய்வது சரியாக இருக்காது என்று எடுத்துச் சொல்லப்பட்டதாம். ஒரு முஸ்லீம் பிரமுகரையே மறுபடியும் கவர்னராகப் போடலாமே என்று ஐடியா சொல்லப்பட்டிருக்கிறதாம்.

●● இந்தியா அணுகுண்டு வெடித்ததில் தி.மு.க.வுக்குக் கொஞ்சம் நிம்மதி. "இந்த அணுகுண்டு விஷயம் அடங்குவதற்குள் பாராளுமன்றக் கூட்டத் தொடர் துவங்கி விடும். இந்தச் சூழ்நிலையில் ஆட்சிக் கலைப்பு போன்ற காரியங்களில் இறங்கி பா.ஜ.க. உள்நாட்டுப் பிரச்னைகளில் சிக்கிக் கொள்ளாது என்று நினைக்கிறோம்!'' என்றார் அறிவாலயப் பிரமுகர் ஒருவர்.

●● எதிர்க்கட்சிகள் பல குழப்பங்களை உருவாக்கி ஆட்சிக்கு தர்மசங்கடங்களைத் தரப் போவதாக தமிழக அரசின் உளவுத் துறை மோப்பம் பிடித்திருக்கிறதாம். சமீபத்திய பஸ் தொழிலாளர்களின் போராட்டமும், அந்த அடிப்படையில் செய்யப்பட்டதுதானாம். அடுத்து, முன்பு தென் மாவட்டங்களில் நடந்தது போன்ற ஜாதி மோதல்களை உருவாக்கவும் எதிர்க்கட்சிகள் தயங்காது என்பது உளவுத் துறையின் கணிப்பாம். அடுத்த ஒரு மாதத்துக்குள், எல்லா பிரிவு மக்களிடமும் ஆட்சிக்கெதிரான உணர்வை எழுப்பி சட்டம் - ஒழுங்குக்குச் சவால் விடுவதுதான் எதிர்க்கட்சிகளின் லட்சியமாம்.

●● ஷரத் பவார் எதற்காக சென்னை வந்தார்? சோழ மண்டலம் விசிட், சி.எஸ். சந்திப்பு, தமிழக காங்கிரஸ் தலைவர்களிடையே பேச்சு என்பதெல்லாம் வெளிப்படையாக நடந்தவை. மாமல்லபுர ஓட்டல் ஒன்றில் சுப்பிரமணிய சுவாமியை பவார் சந்தித்ததாகச் சொல்கிறார்கள். அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு போயஸ் தோட்டத்திலிருந்து பொக்கே சென்றதாகவும் ஒரு தகவல் சொல்கிறது. ○

— தில்லப்பா

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

மன்னிக்க வேண்டும்! எண்ணத் தொடரில் ஓர் இடைச் செருகல்!

கடைசியில், எழுத வேண்டியதை இப் போதே எழுதி விடுகிறேன்! காரணம் மன உறுத்தல்; நெருடல். சுய சோதனை. யாரு மில்லை சாட்சியாக – மனமே கேள்வியாக!

நண்பர் மணியன் 1980 வாக்கில் என்னை எனது வாழ்க்கை வரலாற்றை எழுதுமாறு பலமுறை சொன்னார். "வின நகரிலிருந்து விஸ்கான்சின் வரை" என்று தலைப்பும் கொடுத்தார். நான் எழுத வில்லை; எழுத மறுத்தேன்.

"என்ன இது! எல்லாம் தெரிந்தவன் போல, என்னை நான் காட்டிக் கொள்ளவா இது? என்னைப் போய் எழுதச் சொல் கிறீர்களே! இது செய்யக் கூடாத விஷயம்; நான் செய்யப் போவதில்லை" என்று மறுத் தேன்.' இரண்டாவதாக அவர் அடிக்கடி சொல்லும் விஷயம், "நீங்கள் சதா எழுதிக் கொண்டிருக்க வேண்டும். எழுதாமல் விட்டு விட்டால், மக்கள் மறந்து போய் விடுவார்கள்" என்பது. நான் சிரிப்பதுண்டு.

அதிலும் அவர் சொன்னதை நான் கடைப்பிடிக்கவில்லை. 1987-ல் இந்தியா திரும்பியதும் நான் ஏதோ ஓரிரு தொடர்கள் எழுதினேனே தவிர, வாய்ப்புக்கள் இருந்தும் நான் முனையவில்லை. நான் ஆன்மீக சம்பந்தமான நூல்களைப் படிக்கத் துவங் கியதில், "என்னை நானே அறிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது: இந்த நிலையில் உபதேசம் செய்வதா? அபசாரம்!" என்ற எண்ணம் வலுத்தது.

இந்த என்னுடைய தேடல், கடந்த பத் தாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண் டிருக்கிறது. சரியான குரு தோன்று வாரா வருவாரா, ஞானோபதேசம் செய்வாரா என்ற தேடல்; எதிர்பார்ப்பு; ஏக்கம்.

சீடன் தயாராக இருந்தால் அல்லவா குரு தோன்றுவார்? நான் இன்னும் தயார் நிலைக்கு வரவில்லை போலும்! இந்தியா பூராவும் சுற்றும் பைராகிகள் போல என் மனம் ஒவ்வொரு தத்துவங்களிலும் யோக மார்க்கங்களிலும் அலைபாய்கிறதே தவிர நிலைத்து ஒரு ஞானம் பெற்ற நிலை ஒன் றைப் பிடித்துக் கொண்ட நிலை – வர வில்லை.

சென்ற ஆண்டு ஏற்பட்ட என் மனை வியின் பிரிவு என்னைப் பெரிதும் பாதித்தது.

இந்த நிலையில் கல்கியில் கேட்டபோது, சற்று யோசனைக்குப் பிறகு, நான் இதை எழுத ஒத்துக் கொண்டேன். நாம் அடைந்த அனுபவங்கள் எல்லாம் கடும் உழைப் பினாலும் விடாமுயற்சியாலும், மனத்தில் எழுந்த ஆழமான எண்ணங்களாலும் எழுந் தவை. அவை எல்லாம் பிறருக்குப் பயன் படக்கூடும்; தைரியத்தைக் கொடுக்கக்கூடும். சளைக்காத மனத்தை அளிக்கக்கூடும் என்ற எண்ணம்தான் காரணம். "தலையைப் போடுமுன் இதைச் செய்து விட வேண்டும்" என்ற எண்ணம் தலைதூக்கியது.

இதில் என்ன குறை என்றால், வாழ்க்கை வரலாறு பற்றி எழுதும் ஓர் அறிஞர், "இதில் பாதி சுயவிளம்பரம்தான்" என்கிறார். அது என்னைச் செதுக்கிய எண்ணமானாலும், யார் எழுதினாலும் நமது குற்றங் குறைகளை நாம் எழுதப் போவதில்லை; எழுது வதில்லை. "தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொள்வது ஆத்மாவுக்கு நல்லது தான்; ஆனால் அது அவர்களது புகழுக்குக் கேடு" என்றொரு ஆங்கில வாசகம் உண்டு. நமது புகழுக்கு, நமது நல்ல பெயருக்குக் கேடு வருவதை யார் விரும்புவார்கள்? எனவேதான் எழுதுவதெல்லாம் செய்வதற்கு நியாயம் சொல்லி சமாதானப்படுத்தும் முயற்சியாக முடியுமே தவிர உண்மைகள் – முழு உண்மைகள் வெளிவருவதில்லை.



மனிதக்

என்னைச் செதுக்கிய எண்ணங்கள் - 20



மேலும் எழுதுபவன் தன்னுடைய குறைகளையோ அல்லது அவர் பழகிய மனிதர்களின் செயல்களை, தன்னுடைய பார்வையில் விமர்சனம் செய்வதோ நியாயமாகாது. உண்மை ஆகாது. விமர்சனம் செய்யப்படுபவருக்கோ, அல்லது உண்மை என்பது மனித உரு எடுக்குமானால்

அதற்கோ நான் என் கருத்தைச் சொல்ல என் வாழ்க்கை வரலாற்றில் இடமில்லை. எனக்குக் கிடைத்த மேடை இது: அதை ஒரு மனிதன் தனக்காகவே உபயோகிக்கிறான்.

மனிதனை வாழவைப்பதே (self esteem) எனப்படும் 'சுயகௌரவம்'தான் என்று மனவியல் அறிஞர்கள் எழுதுகிறார்கள். இதனால்தான் நமது துறவிகள் தங்கள் பூர்வோத்திரம் பற்றி எங்கு வளர்ந்து வாழ்ந்து எந்த சம்பவத்திற்குப் பின் துறவியானார்கள் என்று சொல்வதில்லை. யோசிக்க வேண்டும், ரிஷிமூலம் நதிமூலம் என்பார்கள். நதி மூலத்தைப் போல ரிஷி மூலத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டம். சரியல்ல.

மற்றோர் விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது தன் குறைகளையெல்லாம் ஒருவன் எழுதி அதிலிருந்து மீண்டேன் என்று எழுதுவானானால் படிப்பவர்களும் "அதே போல தவறு செய்து விட்டு நான் திருந்திக் கொள்ளலாம்" என்று நினைக்கக்கூடும். தான் தவறு செய்வதற்கு தவறு செய்ய விரும்புவதற்கு – நியாயம் கற்பிக்கக்கூடும்.

ஒரு பெண் ஒரு கடிதம் எழுதி இருந்தார் யோசனை கேட்டு. "ஒரு சினிமாவில் ஒரு பெண் தன் பெயர் போடாமல் ஒருவனுக்குக் ஒரு கடிதம் எழுதுகிறாள். அதைப் பார்த்தவுடன் அது என் நினைவில் திரும்பத் திரும்ப வந்தது. 'ஏன் நாமும் அப்படிச் செய்யக் கூடாது?' என்ற ஒரு கிறுக்குத்தனம் தோன்றியது. எனக்குப் பிடித்த ஒரு மாணவனுக்கு எழுதினேன். அதன் விளைவு – பிரச்னை" என்று எழுதியிருந்தார்.

எழுத்துக்களாலும், சினிமாவினாலும், இசையினாலும், வாழ்வில் நிகழும் சம்பவங்களாலும் நாம் தூண்டப்படுகிறோம் என்பது மனவியல் உண்மை. தூண்டப்படும் பலர் எது நியாயம், எது சரியில்லை என்று தீர்மானிக்கிற விவேகம் கொண்டவர்கள். ஒரு சில நேர உணர்வுகளால் ஈர்க்கப்படுபவர்கள்; இழுத்துச் செல்லப்படுபவர்கள்.

சில அரசியல் தலைவர்கள் அல்லது தலைவிகளது செயல்கள் நம் நாட்டை லஞ்சக் காடாக மாற்றி விட்டது. சமீபத்தில் அவர்களது செயல்கள் "அடியாட்களை வைத்துப் பிடிக்காதவர்களை ஒழிக்கலாம்" என்று நாட்டை வன்முறைக்காடாக மாற்றி விட்டிருக்கிறது.

'நாடும் மக்களும் எப்படி குட்டிச்சுவராய்ப் போகிறார்கள்' என்பதற்கு அங்கு விதைக்கப்படும் எண்ணங்களும் அதன் விளைவாக எழும் செயல்களும்தான் காரணம். தவறு செய்பவர்கள் வாழ்க்கை வரலாறு மூலமும், அரசியல் மரியாதை மூலமும், முக்கியத்துவம் பெறும்போது, கொள்ளைக்காரி – கொலைகாரி பூலான் தேவி கூட நோபல் பரிசு கேட்கும் நிலைதான் உருவாகும். அதுதான் உருவாகி இருக்கிறது.

குறைபாடுகள்

> செண்ட் போன்ற வாசனைத் திரவியங்களை உடலில் கண்ட கண்ட இடங்களில் தடவக் கூடாது. உள்ளங்கைப் பக்கம் மணிக்கட்டில் தடவலாம். காது மடல்களில் தடவலாம். முழங்கைகளில் தடவலாம். அப்பொழுதுதான் மணம் ஒரு திட்டமான அளவில் வீசும்.
>
> — மகாராம் திருப்பதி

எனவேதான் வள்ளுவர் கூறுகிறார்.

"சொல்லுக சொல்லில் பயனுடைய
சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்" என்கிறார்.

இங்கேதான் நாம் வள்ளுவர் சொல்வதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

இது உண்மை என்று உண்மையைச் சொல்வது மட்டும் போதாது. அந்த உண்மை நன்மை பயக்குமா அல்லது தீமை பயக்குமா என்று பார். நன்மை பயக்குமானால் மட்டுமே சொல். மற்றபடி வாயைத் திறக்காதே!" என்கிறார்.

எனவே வாழ்க்கை வரலாறு என்பது நன்மை பயக்குமானால் மட்டுமே - நல்ல விஷயங்கள் மட்டுமே - எழுதப்பட வேண்டும்.

அப்படி எழுதும் போதும், "பற்றுநீக்கித் தொழில் செய்" என்று பகவத்கீதை சொல்வது போல, நாம் நம்மை மூன்றாம் மனிதனாக எல்லா விஷயங்களையும் பார்க்கும் பக்குவத்துடன் எழுத வேண்டும். அதாவது பல சம்பவங்களுக்கும் நாம் சாட்சியாக - பார்வையாளனாக விலகி நின்று எழுத வேண்டும்; பேச வேண்டும்.

அப்படி எழுதுகிறோமா? பெரிய கேள்வி. நம்மைப் பற்றி நம்மாலே தீர்ப்புக் கூற முடிவதில்லை. அந்த மென்மையான சர்க்கஸ் கயிற்றின் மீது நம்மால் நடக்க முடிவதில்லை; முயல்கிறோம், அவ்வளவு தான். ஆகவே நம் மனத்திற்கு நியாயமென்று பட்டதை எழுதுகிறோம் - நம்மை விட படித்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற நினைவுடன் - ஒரு அச்சத்துடன்.

ஒரு கதை எழுதினால், நாம் மூன்றாவது மனிதனைப் போல எழுதி விடலாம். ஆனால் வாழ்க்கை வரலாறோ, "நான்" "நான்" என்று எங்கு பார்த்தாலும் நான் என்னை இழுத்துச் செல்கிறேன். முன்னிறுத்துகிறேன். இது அகந்தை, ஆணவம், அகங்காரம் என்கிறார்கள் நமது ஞானிகள். சுய விளம்பரம் போய் அகங்காரம் வேறு வந்து சேர்ந்து விடுகிறது!

அடக் கஷ்டமே! என்னை வெளிப்படுத்தி அகந்தையில் விழுந்தானா இதை எழுதுகிறேன்? ...சோகம்! இருபது ஆண்டுகளுக்கு மேலாக இவ்வளவு எழுதிய பின்னும் எனக்கு இந்த சுய விளம்பரம் எல்லாம் தேவையா? முற்றும் துறந்த பக்குவம் வராத போதும் இதையெல்லாம் பொருட்படுத்தாத ஒரு மனநிலையில்தான் வாழ்ந்து வந்தேன். ஆனால் எழுதும்போது, நான் மீண்டும் அந்தச் சம்பவங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலை ஏற்படுவதால், என்னை அறியாமலே என்னிடம் இந்த அகந்தை, ஆணவம், சுய விளம்பரம், பிறரை விமர்சித்து தன்னை உயர்த்தும் பண்பு இதெல்லாம் வந்திருக்கக்கூடும். தென்படக்கூடும். மன்னிக்கவும்.

என்ன சொல்ல முடியும்?

முனிவர்களும் ஞானிகளும் கூட சினத்தை தவிர்த்தவர்களாகவோ, 'தான்' என்பதை மறந்தவர்களாகவோ இருக்கவில்லை என்பதைத்தான் தாருகாவனத்து ரிஷிகளின் கதை வரை பார்க்கிறோம். விசுவாமித்திரரைப் பார்க்கிறோம்.

இதில் நான் எம்மாத்திரம் என்று என்னை நானே மன்னித்துக் கொள்ள வேண்டியதுதான்!

ஆகவே நீங்களும், முடியுமானால்...!

எனக்கு ஒரு திருவாசகப் பாடல்தான் - அதுபற்றி ஒரு ஆங்கில நூலில் வந்த மொழிபெயர்ப்புதான் நினைவுக்கு வருகிறது.

"ஓ ஆண்டவனே!
நீ எங்கும் நிறைந்திருக்கிறாய்; சர்வ
வியாபி
ஆனால் நானோ உன்னை இங்கே
கோயிலில் வைத்து வழிபடுகிறேன்.
உனக்கு ஒரு பெயர், ஒரு நாமம்
கிடையாது.
ஆனால் நானோ உனக்கு ஆயிரம்
திருநாமம் சூட்டி அழைக்கிறேன்.
நீ என்னைப் பாராட்டு என்று
கூறுவதில்லை.
ஆனால் நானோ உன் புகழைப் பாடிப்
பரவசப்படுகிறேன்.
ஆண்டவனே, என்னை மன்னித்து விடு.
இவை எல்லாம் என் மனிதக்
குறைபாடுகள்."

இதில் தெரியும் மனிதக் குறைபாடுகளுக்கு -...மன்னிக்கவும்.

(தொடரும்)

“சச்சினை அவுட் ஆக்குவது சுலபம்!”


ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் வாவை அண்மையில் புது தில்லியில் சந்தித்தபோது, வெளிப்படையாகப் பேசினார். நமது சச்சினைப் பற்றி அப்படிப் புகழ்ந்தார்....

“சச்சினைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?”

“பிட்சிலிருந்து நேராக எகிறும் பந்துகளாகத் தொடர்ந்து வீசும்போது அவற்றைச் சச்சின் அடிக்கவே போவார். அப்போது சச்சினை சுலபமாக அவுட் ஆக்கவும் முடியும். ஆனால் இது எப்போதும் நடக்கும் என்று கூறி விட முடியாது. ஐந்துக்கு மூன்று முறை இப்படி அவரை அவுட் ஆக்கிவிட முடியும். ஆனால் இரண்டு முறை சச்சின் டாமினேட் செய்வாரே! அப்போது அவரைக் கட்டுப்படுத்தவே முடியாது. பேயாட்டம் ஆடி ரன் மழை பொழியும் அவருக்குப் பந்து வீச எல்லா பௌலர்களும் திணறிப் போகிறார்கள். எதிர் அணியின் கேப்டன் யாரை விட்டு சச்சினுக்குப் பந்து போடச் சொல்வது, ஃபீல்டிங்கில் யாரை எங்கே நிறுத்துவது என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். ‘எனக்கு பௌலிங்கே மறந்து விடும் போல் இருக்கு!’ என்று உலகப் புகழ்பெற்ற எங்கள் ஷேன் வார்ன் சச்சினின் ஆட்டம் பற்றி என்னிடம் வருத்தத்தோடு கூறினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சச்சின் அபாரமாக பேட்டிங் செய்கிறபோது, களத்திலுள்ள நாங்களெல்லாம் வெறும் பார்வையாளர்களாகத்தான் இருக்கிறோம்; மரம் மாதிரி நிற்கிறோம்! அவரது ஆட்டத்தின் நுணுக்கத்தையும் லாகவத்தையும் கண்டு ரசிக்கிறோம். பிராட்மனுக்குப் பிறகு இப்படியொரு ஆட்டக்காரரை உலகம் கண்டதில்லை.”

“இந்திய அணியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”

“உங்கள் அணியில் நிறைய வீரர்கள் அறிமுகமாகிறார்கள். ஆனாலும் யாரும் தொடர்ச்சியாக அணியில் விளையாடாததற்கு என்ன காரணம்? இது என்ன பாலிசி? யார் மேல் தவறு? எனக்குத் தெரிந்து கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இருபது பேருக்கு மேல் அறிமுகமானார்கள். ஆனால் யாருமே நிலையாக இருந்து ஆடவில்லை. ஏன்? சரி... சரி... இது உங்கள் தலைவலி. எனக்கென்ன வந்தது! அகார்கர், கனிட்கர் இருவருமே திறமை காட்டுகிறார்கள். ஆனாலும் உங்கள் அணியில் ஆல் ரவுண்டர்கள் தேவை. இந்தியாவின் வெற்றிக்கு சச்சின் மட்டுமே போதாது. நிறைய ஆல் ரவுண்டர்கள் தேவை! இப்படி இல்லாததால்தான் நீங்கள் வெற்றிக்குச் சிரமப்படுகிறீர்கள். நீங்கள் ஜெயிக்காமல் இல்லை என்றாலும் உங்களுடைய வெற்றி என்பது தனிப்பட்ட சில



அருள்வாக்கு



"டிப்ளமஸி"
என்பதற்காக
ராஜாங்கத்தார் அநேக
உண்மைகளை
மறைக்கும்படியாகவும்,
மாற்றிச்
சொல்லும்படியாகவும்
ஏற்படுவதுண்டு. இப்படிச்
செய்யாவிட்டால்
தேசத்துக்கு ஹானி
உண்டாகும்; அல்லது
சட்டத்தை நடத்துவதற்கு
அவசியமான ஸர்க்கார்
என்ற அமைப்பிலேயே
விரிசல் ஏற்பட்டு விடும்.
காந்தி மாதிரியானவர்கள்
இதெல்லாம் கூடத் தப்பு
என்று சொன்னாலும்,
அப்புறம் நமக்கு
ஸ்வதந்திரம் வந்த பிற்பாடு,
சில விஷயங்களிலாவது
"காந்தீயன் ஸத்தியம்"
ஒப்புக் கொள்ளாத
'டிப்ளமஸி'யை
அநுஸரிக்கும்படிதான்
ஆகிறது. மத
புருஷர்களுக்கெல்லாம்
மேலேதான் இப்போதும்
காந்தியைத் தூக்கி
வைத்துக்
கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் செய்கிறது அவர்
கொள்கைக்கு வேறாய்
இருக்கிறது என்னும் போது
'ஹிபாக்ரிஸி' என்ற
தோஷம் ஏற்படுகிறது.
டிப்ளமஸியின் ரொம்பவும்
கீழ் லெவல்களுக்கு War-
time (உலக யுத்தத்தி)ன்
போது போன அநேக
அந்நிய தேச
ராஜாங்கங்கள்
அவர்களுடைய மதங்கள்
சொன்ன ஸத்யக்
கொள்கையை மீறியே
போயிருக்கின்றன. நம்
தேசத்திலோ "அர்த்த
சாஸ்திரம்" என்றுள்ள
ராஜநீதியில் முதலிலேயே
ராஜதந்திரம் என்பதாக
அவசியமான
ஸந்தர்ப்பத்தில் இப்போது
சொல்கிற 'டிப்ளமஸி'யை
அநுமதித்திருப்பதால்,
நம்முடைய ராஜாக்களுக்கு
ஸந்தர்ப்ப நெருசலில்
ஸத்யத்தை ஒளிக்க
வேண்டியிருந்தபோது
சாஸ்திர விரோதமாகப்
போகிற தோஷமோ,
ஹிபாக்ரிஸி தோஷமோ
ஏற்படவில்லை.
இன்னின்ன ஸந்தர்ப்பத்தில்
ஸத்யத்துக்கு விலக்குத்
தரலாம் என்று
வகைப்படுத்தி வரம்புகட்டி
சாஸ்திரத்தில்
வைத்துவிட்டதாலேயே
அவற்றில் மட்டுமே
அப்படிச் செய்வது,
மற்றவற்றில் பரம
ஸத்யமாக நடந்து
கொள்வது என்று நம்
ராஜாக்கள் ஆட்சி
செய்திருக்கிறார்கள்.
இப்படி விதிவிலக்காகச்
சிலதைச் சொல்லாமல்,
விதிவிலக்கே கிடையாது
என்று வைத்த
தேசங்களிலோ, ஏதோ
சிலதில் என்றில்லாமல்,
அநேக விஷயங்களில்
ஸத்ய விரோதமாகப்
போன ராஜாக்களும்,
ராஜாங்கங்களும்
தோன்றுவதும், கிளர்ச்சி,
புரட்சி என்று
ஏற்படுவதுமாய்
இருந்திருக்கிறது.
ஹிஸ்டரியைப் பார்த்தால்
தெரியும். ஆனால் இந்த
அம்சத்தைக்
கவனிக்காமலே அர்த்த
சாஸ்திரம் பண்ணின
சாணக்கியனைக் கபடி,
தந்திரசாலி, unscrupulous
என்று கூட விமரிசிப்பதைப்
பார்க்கிறோம்!

— ஜகத்குரு காஞ்சி
காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்.

ருடைய திறமையால் கிடைப்பதே தவிர, அணியின் ஒட்டுமொத்தத் திறமையால் கிடைப்பது இல்லை என்பதே எனது கருத்து."

"உங்கள் அணி பற்றிச் சொல்லுங்களேன்!"

"இப்போது எங்கள் அணியில் நிறைய இளைஞர்கள் - குறிப்பாக ஆல்ரவுண்டர்கள் இருக்கிறார்கள். இன்னும் இரண்டு வருடத்திற்கு ஓ.கே. அதன் பிறகு டைலர், மார்க், நான் போன்றவர்கள் ஓய்வு பெறும் போது அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும். மேலும் எங்களுக்கு நல்ல துவக்க ஆட்டக்காரர் தேவை. இதெல்லாம் நிச்சயம் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்றே நம்புகிறேன். அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை ஆட்டத்தில் வென்று கோப்பையைக் கைப்பற்ற வேண்டும் என்பதே எங்களின் இப்போதைய லட்சியம்!"

படம், பேட்டி : **நந்தினி**

59

ரோஹிணி நக்ஷத்திரத்தன்று பண்ணக்கூடிய ஒரு யாகத்தைச் சொல்கிறது வேதம். ஒரே நாளில் பண்ணக்கூடிய யாகம் அது.

உலகத்தில் எல்லா ஜீவராசிகளுக்கும் அன்னம் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் செய்யப்படுவது. அந்த மாதிரி அன்னத்தை உண்டாக்கக்கூடிய யக்ஞம் அது. ரோஹிண்யாம் கார்ய :

இந்த ரோஹிணி நக்ஷத்திரத்து யக்ஞத்தை எப்போது பண்ண வேண்டும் என்று கேட்டால் அதிகாலை நேரத்தில் - சூரியன் உதிக்கிறபோதே ஆரம்பிக்க வேண்டும். 'உதிதே சூர்யே...' என்று அந்த மந்திரத்தைச் சொல்லும்போது அந்த ஸ்வரத்திலேயே சூரியனை வரவேற்கும் மதிப்பு மரியாதை தெரிகிறது... சூரியன் உதித்த பிறகு தூங்கக் கூடாது என்பது தெரிகிறது. அதே போல் சூரியன் அஸ்தமிக்கும்போதும் தூங்கக் கூடாது. இந்த இரண்டு வேளையிலும் விழித்துக் கொண்டு இருக்க வேண்டும்.

ராமாயணத்தின் அயோத்யா காண்டத்தில் பரதன் பிரதிக்ஞை பண்ணுகிறான் பாருங்கள்.... ராமன் காட்டுக்குப் போவதற்குக் காரணம் யாராயிருந்தாலும் அதற்குத் தன்னைக் காரணமாக பாவித்துக் கொண்டு சொல்கிறான் :

"அப்படிப்பட்ட கொடுஞ் செயலைச் செய்தவனாக நான் இருந்தால், இரண்டு சந்தியா காலங்களிலே எவன் படுத்து உறங்குகிறானோ, அவனுக்கு என்ன பாவம் சம்பவிக்குமோ, அந்தப் பாவத்திலே போகிறேன்...!" என்கிறான்.

ஆகையினாலே சந்தியா காலத்தில் தூங்குவதென்பது கொடியது என ஏற்படுகிறது அல்லவா....

இன்னொரு இடத்திலே வேதம் சொல்லும் போது, கர்ப்பத்தில் இருக்கிற

குறையொன்றுமில்லை

குழந்தையை அழிப்பது மகா பாவம், பிறந்த சிசுவைக் கொல்வது பாவம்....' என்று பாவங்களை வரிசைப்படுத்தி வருகிறது. ....இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் செய்கிறவர்களின் பாவத்தைப் பகிர்ந்து கொள்ள ஒருத்தர் உண்டா...? என்று கேட்டால், உண்டு என்கிறது சாஸ்திரம்! அது யார் என்றால், இரண்டு சந்தியா காலங்கள் கூடுகிறபோது தூங்குகிறானே அவன்தான்!

ஆகையினாலே அதிகாலை சூரியன் உதிப்பதற்கு முன்னால் நாம் எழுந்து எல்லா அனுஷ்டானங்களையும் முடித்துக் கொண்டு அர்க்கியத்தை வைத்துக் கொண்டு நின்றுகொண்டிருக்க வேண்டும்.

நம்முடைய இடத்துக்கு ஒரு மகான் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். பூர்ண கும்பத்தை வைத்துக் கொண்டு அவர் எப்போது வெளியே வருவார் என்று காத்து நிற்க மாட்டோமா?... அப்படித்தான் சூர்ய மண்டலத்திலே பிரகாசிக்கும்படியான அந்த விஷ்ணுவை ஆராதிப்பதற்காக நிற்க வேண்டும்.

சூரியன் நான்கு நாட்கள் பிரகாசிக்கவில்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். உலகம் நிலைக்குமா? கர்ம கலேபரங்களெல்லாம் நடைபெறுமா? எந்த ஜீவ ராசியாவது வாழுமா?

ஆகையினால், பிரத்யக்ஷ தேவதையாகத் தோன்றி நம்மை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அனுக்கிரஹிக்கும்படியான அந்த சூரியனை நாம் வரவேற்க வேண்டும். அவன் உதயமாவதற்கு முன்னாலும் அஸ்தமனம் ஆகிறதற்கு முன்னாலும் அர்க்கியத்தை விட வேண்டும்.

அதே போல்தான் அக்னிஹோத்ரம் பண்ணுகிறவர்களும் காலை, மாலை இரண்டு வேளையும் அதைச் செய்ய வேண்டும். அதனால்தான் ரோஹிணி நக்ஷத்திரத்தன்று அந்த சூர்ய உதயத்திலே ஆரம்பித்து இந்த யக்ஞத்தைப் பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

சூரியன் உதிப்பதனாலே மனித வர்க்



கம் மட்டுமா சந்தோஷமடைகிறது! யோகமெல்லாம் சந்தோஷமடைகிறது... சமஸ்த ஜீவராசிகளும் சந்தோஷமடைகின்றன. தாவர வர்க்கங்கள், பட்சி வர்க்கங்கள் எத்தனை விதம் உண்டோ, அத்தனையும் சூர்ய உதயத்தைக் கண்டு ஆனந்திக்கின்றன.

நம் நேத்திரம் வேலை செய்ய வேண்டுமென்றால் அந்தச் சூரியன் வேண்டாமா? எல்லோருக்கும் கண்ணே போன்றவன் அவன்....

இதை யார் சொல்கிறார்கள்...?

'நான் சொல்கிறேன்' என்கிறது வேதம். 'நான் மட்டும் சொல்லவில்லை பிரும்ம வித்துக்களும் வேத வித்துக்களுமான ஞானிகளும் 'அதையே கொண்டாடுகிறார்கள்' (பிரும்மவாதினோ வதந்தி) என்கிறது.

வேதமானது, தான் தனித்து சுவதந்தரித்துச் சொல்ல சக்தி படைத்திருந்தாலும் கூட பிரும்ம வித்துக்களினுடைய அனுஷ்-



"எங்க மானேஜர் பயங்கர கில்லாடி."
"எப்படிச் சொல்றே?"
"ஆபீஸுக்கு லேட்டா வர்ற ஸ்டாஃப்புங்க சொல்ற கதைகளை வெச்சு ஒரு தொகுப்பு வெளியிட்டுட்டாரு."

— பா. ஜெயக்குமார்

டானத்தை, அவர்கள் சொல்லக்கூடியதை, இங்கு தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு பேசுகிறது.

எல்லோருக்கும் கண்ணே போன்றவன் என்று வேதத்தால் கொண்டாடப்படும் சூர்ய சக்தியிலேயிருந்தபடி பரமாத்மா சகலத்தையும் ரக்ஷிக்கிறான். அவனிடத்திலே அமலத்வம் என்கிற குணம் பொருந்தியிருக்கிறது. சூரியன் எப்படி அமலனோ, அவனிடத்திலே குணதோஷங்கள் எப்படி ஒட்டிக் கொள்வதில்லையோ அதுபோன்று எம்பெருமான் ,விஷ்ணு அக்னி மண்டல சுந்தரவ்ருத்தியாய் இருந்து சூர்யநாராயணனாய்ப் பிரகாசிக்கிறான்.

பிரும்மசூத்திரத்தில் ஜோதிர் அதிகரணம் என்று ஒரு அதிகரணம். 'ஜோதியினாலே சர்வத்திலேயும் பரவியிருக்கக்கூடியவன் பரமாத்மா... அந்த ஜோதியை உபாஸனை பண்ணுகிறேன்...' என்கிறது. ஒளிப்பிழம்பாய்த் திகழ்பவனிடத்தில் மலம் – அழுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டோ!

ஜ்வலதே! ஜ்வலதே! ஜ்வலதே! என்று கொண்டாடுகிறது நரசிம்ஹ மந்திரம். அப்படிப் பிரகாசிக்கிறான் அவன். அப்படிப் பிரகாசிக்கும்படியான எம்பெருமானை உபாசித்ததனாலே அகஸ்தியருக்கு வாடபல்லி க்ஷேத்திரத்தில் பிரத்யக்ஷமானான்.

இந்த ஜ்வல சப்தத்தினாலும் அவன் அழுக்கற்றவன் என்றாகிறது. சுவயம்பிரகாசம்! அழுக்கே கிடையாது!

சுவர்ணம் இருக்கிறது... நல்ல சுவர்ணமா என்று பார்ப்பதற்கு அக்னியிலே போட்டுப் பார்ப்போம். உயர்ந்த தங்கம் தனித்துக் கிடைத்து விடுகிறது.

அக்னியானது, சூர்ய சக்தியென்பதாலே உயர்ந்த தங்கத்தைத் தனிப்படுத்தித் தருகிறது. சுந்தரமானது தேறி நிற்கிறது.

எதை நாம் சுத்தம் செய்ய வேண்டுமானாலும் சூரியனுக்கு நேரே காண்பித்தோமானால் சுத்தி ஏற்பட்டுப் போகிறது.

அந்த சூரியனைத்தான் காயத்ரி மந்திரத்தினால் ஆராதிக்கிறோம். காயத்ரி, சாவித்ரி, சரஸ்வதி என்று மூன்று திருநாமங்களினாலே ஆராதிக்கிறோம். அந்த தேவதைகளின் ஸ்வரூபமாய் இருந்து ரக்ஷிக்கக்கூடியவன் பரமாத்மா விஷ்ணு என்று தேர்வதனாலே அவன் அமலன்.

தம்மிடத்திலே உள்ள அழுக்கைப் போக்குவதால் அமலன்; அழுக்கே இல்லாததனால் அமலன்!

கோதா என்று ஆண்டாளுக்குப் பெயர். அதற்கு இரண்டுவிதமாக அர்த்தம். நல்ல வாக்கை நமக்கு அவள் கொடுப்பாள். அவள் வழங்கிய திருப்பாவையையும் நாச்சியார் திருமொழியையும் யார் தினமும் சொல்கிறார்களோ... அவர்களுக்கு நல்ல வாக்கு வாய்க்கும்; அந்த ஆண்டாளை மனத்தில் நினைத்தாலே நமக்கு நல்ல வாக்கு கிடைக்கும். உத்தமமான வாக்கு! – இது ஓர் அர்த்தம்.

கோதா என்றால் நல்ல வாக்கை உடையவள். இது இரண்டாவது அர்த்தம்.

அவள் நல்ல வாக்கை உடையவளான தனாலேதான் நமக்கு நல்ல வாக்கைக் கொடுக்கிறாள். அதே போல் அவன் அமலன் ஆனதனாலேதான் நமக்கு அமலத்வத்தை உண்டுபண்ணுகிறான்.

நமக்கு அமலத்வம் எபபடி சித்திக்கிறது? இந்த சரீரத்தையே எடுத்துக் கொள்வோம்... இதிலே ஒரே துர்கந்தம்! இதை பகவான் தோல் கொண்டு போர்த்தியிருக்கிறான். அழகாகப் போர்த்தியிருக்கிறான். அதனால் இந்த தேசத்திலே நாம் சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

தோலை மட்டும் எடுத்துவிட்டு உலகத்திலே சஞ்சாரம் பண்ணுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.... எப்படியிருக்கும்!

தின்பண்டம் விற்கக்கூடிய வியாபாரி கையிலே தட்டை வைத்துக் கொண்டு, அதிலே பலவகையான பணியாரங்களையெல்லாம் பண்ணி வைத்துக் கொண்டு போகிறான்... அதிலே ஈக்கள் வந்து மொய்க்கின்றன; கொசுக்கள் மொய்க்கின்றன. காக்கை வந்து கொத்திக் கொண்டு போய் விடலாம் என்று மேலே பறக்கிறது.

இதையெல்லாம் ஓட்டுவதற்காக அவன் என்ன பண்ணுகிறான்...? ஒரு சின்ன கொம்பிலே துணியைச் சுற்றி ஓட்டுகிறான். தின்பண்டங்கள் பேரைச் சொல்லிக் கூவும்போது ஓட்டிக் கொண்டே போகிறான். இல்லாவிட்டால், ஈ மொய்க்கும், காக்கை கொத்தும்!

தோல் மட்டும் இல்லாமல் நாம் உலகிலே சஞ்சாரம் பண்ண வேண்டியிருந்தால், நாமும் கையிலே ஆளுக்கொரு கம்பைத் தான் வைத்துக் கொண்டு ஓட்டியபடி போக வேண்டும்! இல்லையென்றால், மேலே இருக்கிற பறவைகள் நம்மைச் சும்மா விடுமா...?

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் நம் உடம்பானது எப்படிப்பட்டது. நரகம் என்று ஒன்று தனியே வேண்டாம். இப்படிப்பட்ட உடலிலே வாழ்வது, சரீரத்தைச் சுமப்பது கூட நரகம்தான்! ஒருநாள் நம் சொல்படி ஒன்றி உட்காருகிறது; இன்னொரு நாளோ அதுவே உட்கார மறுக்கிறது!

ஆகையினாலே இது மலமான உடம்புதான். ஆனால், எம்பெருமானின் சம்பந்தத்தினாலே இப்படிப்பட்ட அழுக்கு கூட அற்றுப் போகிறது. அவனைப் போன்றே ஒளி பொருந்திய திருமேனியை அவன் நமக்குக் கொடுக்கிறான்.

வைகுண்டத்திலே கையை நீட்டி நம்மைக் கூப்பிடுகிறான் என்று சொன்னானே, கையைப் பிடித்து அவன் தூக்கும் போது நமக்கு சரீரம் எப்படி இருக்கிறது தெரியுமா...?

அப்ராக்ருதமான திவ்ய மங்கள ஸ்வரூபமாக அது மாறிவிடுகிறது. இந்தச் சரீரம் போய் விடுகிறது! பகவானைப் போன்ற திருமேனி நமக்கும் வந்து விடுகிறது.

சாமான்யர்களாய் இருக்கும்படியான நம்முடைய அழுக்கையெல்லாம் போக்கி, அவன் இருக்கிற இடத்துக்கு நம்மை அழைத்துக் கொண்டு போய் தன்னைப் போன்ற ரூபத்தைக் கொடுத்து, தன் திருவடியிலேயே கைங்கர்யம் பண்ணும்படியான ஓர் உயர்ந்த ஐச்வர்யத்தை பரமாத்மா கொடுக்கிறான் பாருங்கள்... அது தான் மலத்தைப் போக்குதல் - அழுக்கைப் போக்குதல்.

அமலத்வம் என்பதால் இன்னொரு அர்த்தமும் காட்டப்படுகிறது. அது என்னவென்றால், புத்தியிலே அழுக்கு இருந்தாலும் கஷ்டம் அல்லவா... ஒரு விஷயத்தை ஒருத்தர் சொல்லும்போது கோணலாக கிரஹிக்கக் கூடாது. நேர் முறையிலே, ஆசார்யர் சொல்வதை கிரஹிக்க வேண்டும்.

அதற்குக் காரணமாயிருந்து உதவுகிறவனும் அமலனான விஷ்ணுதான்....

(தொடரும்)



''ஆறுமாசமாத் தேடியும் கண்டுபிடிக்க முடியலே! நீங்கதான் கண்டுபிடிச்சுத் தரணும்!''


''எதை?''

''அரசாங்கம் எனக்கு வழங்கிய இலவச நிலப்பட்டாவுக்குரிய நிலத்தைத்தான்!

- உ. ராஜாஜீ

நந்தகுமார் படுக்கையில் குப்புறப் படுத்துக் கண் மூடிக் கொண்டிருந்தான். இரு கன்னங்களிலும் நைல் நதியும், நயாகராவும் ஓடிக் கொண்டிருந்தன. மெல்லிய விம்மலில் உடல் குலுங்கினான்.

யமுனா, பாரதிராஜாவின் தேவதை உடைகளில் செல்களெங்கும் பறந்தோடினான். ஆயிரம் மெகாவாட் மின்சாரம் வெடித்தது போல் வெளிச்சமடிக்க மெலிதாக கண் சிமிட்டினான் கையசைத்துக் கொண்டே இன்னொருவன் தோளில் கைபோட்டபடி நடந்து போனான். இவன் இதயத்தில் டைனமைட் ஒன்று வெடித்து, சுக்குநூறாகிப் போனான்.



நந்தகுமார் நல்லவன்தான், காதலி நல்லவள் தானா என்று கூட கண்டறிய முடியாத அளவுக்கு... நிஜமாய் நேசித்தான். மின்னலின் வேரைப் பிடுங்கி, சூரியனைக்

காதல் போயின்

கொஞ்சம் ஊற்றி இவன் எழுதிய காதல் வார்த்தைகளெல்லாம், யமுனாவுக்கு 'அருண் ஐஸ்கிரீம்' இருக்கும் போது மட்டுமே இனித்தது. நந்தகுமார் தன்னையே ஊற்றிக் கொடுத்த கவிதையை விட ஃப்ரிட்ஜி லிருக்கும் பெப்ஸிக்குத்தான் சிலிர்த்தாள்.

தன்னையே சுற்றியலையும் டாட்டா சியாராக்காரனுக்காக இவனை வெறுத்து, டாடா சியா ராவிலேறி, ஸ்டார் ஓட்டலுக்குள் ஓடி விட்டாள். சமாதானமாகப் பேச வந்தவனிடம் இதயத்தில் செருகுவதற் கென்றே வைத்திருந்த கொடுக்குகளை யெல்லாம் ஒரே நேரத்தில் செருகத் துடித் துப் போய் திரும்பினான். அது சரி பெண் தேளென்றால் வலி இல்லாமலா போகும் கொட்டும் போது?

வேதனை தாங்காமல் அவன் விஷ மருந்தப் போக, கடைசி நொடியில் அவன் தந்தை பார்த்துத் தடுத்து விட்டார். அத்தனை நினைவுகளும் அவனுள் புழுங்கப் புழுங்கப் பொங்கி அந்தக் கட்டிலையே கண்ணீரால் கழுவுவது என்று கங்கணம் கட்டியது போல் விம்மிக் கொண்டிருக்கிறான்.

மேகத்தை வெல்வெட் துணிக்குள் சுருட்டி ஒத்தடம் கொடுப்பது போல் ஒரு கை நந்தகுமாரின் முதுகு வருடியது. அவன் சோகத்தையெல்லாம் அள்ளியெடுப்பது போல் அது ஆறுதல் பேசி, மெல்ல நகர்ந்து முடி கோதியது. நந்து மெல்ல முகம் நிமிர்த் தினான். ரகுநாதன் டேபிளின் மேலிருந்த நைட் லேம்ப்பைப் போட்டார்.

"விஷம் வேணுமா?"

"..............................."

"நிசமாத்தாண்டா கேக்குறேன். எனக்கு நீ, உனக்கு நான். அவளுக்காக நாம விஷம் சாப்பிடுவோம்."

"..............................."

"நந்து"

"ம்."

"பழசெல்லாம் ஞாபகம் வருதா?"

"ஆமாம்பா."

கே. கலாபாரதி

"குப்பை யெல்லாம் கூட்டி வைக்கக் கூடாது. கொட் டிடணும்டா."

"காதல் குப்பையாப்பா?"

ஒரு நிமிடம் கேள்வியின் கனத்தில் ரகு ஆடித்தான் போனார்.

"நீ சூரியன்டா, மெழுகா உருகி ஒளிஞ் சுக்கலாம்னு பார்க்காதே. டாட்டா சியா ராவுக்குப் பின்னால ஒரு ஹெலிகாப்டர் வந்தா அவ அதுல ஏறிப் பறக்கணும்னு நினைக்கறவ.

'என்னவள்
கொலுசுச் சத்தம்
கேட்க வேண்டும்.
இதயமே
மௌனமாயிரு'ன்னு நானும் எழுதிட்டு வந்தவன்தான்டா. அழகை மூலதனமா நினைக்கறவ பெண்ணில்ல. அதுக்கு மேல நான் சொல்லக் கூடாதுடா."

"தெரியும்பா. அவ நல்ல காதலியில்ல. ஆனா என் காதல் நிஜம். என் காதல் பொய்யின்னு தாஜ்மஹால் பக்கம் போய் அழுத்திச் சொல்லுங்க. அது இரண்டா உடைஞ்சிடும்."

ரகுநாதன் பேச்சில் இப்போது சூடேறியது. "அப்ப சாதிச்சுக் காட்டுடா. அவ வெக்கப்படறது மாதிரி சாதிச்சுக் காட் டுடா. இதே விம்மலும், அழுகையும் அவ வாயிலிருந்து வரணும். தப்புப் பண்ணிட் டேன்னு தலைகுனிஞ்சு முந்தானைல கண் துடைக்கணும்.... சாரி கோபமா பேசிட் டேனில்ல. காதல் தோல்வினு குரங்கு கூட தூக்குப் போட்டதில்லை. அதை விட

ஓரறிவு உனக்கு ஜாஸ்தினு நான் நம்பறேன். குட்நைட்! தூங்கு. அழாதடா."

ரகுநாதன் அந்த அறையிலிருந்து விலகிப் போனார்.

சூரியன் வாளி வாளியாய் வெளிச்ச மிறைத்து இருட்டை அலசிக் கொண்டிருந் தான். காயாத மிச்சம் புல்வெளிகளிலும் இலைகளிலும் பனித்துளியாய் சிரித்துக் கொண்டிருந்தது. பூத்துச் சிரித்த பூக்களைக் காற்று 'ஈவ்டீசிங்' பண்ணிக் கொண்டிருந் தது. நகரச் சாலைகள் நெரிசலை எதிர் நோக்க ஆயத்தமாயின.

ரகுநாதன், நந்துவுடன் வந்து அந்த நடுத்தர வீட்டின் முன் இறங்கினார். "எதற்கு என்னை இங்கே அழைத்து வந்தீர்கள்?" என்பது போல நந்து பார்க்க, ரகுநாதன் "வா உள்ளே போகலாம்" என்றழைத்தார்.

அதற்குள் நடுத்தர வயதுள்ள வாலிபன் வந்து அவர்களை எதிர்கொண்டழைத்தான்.

"நந்து இவங்க சூர்யா" - ரகு அறிமுகப் படுத்தி வைக்க, சூர்யா வணக்கம் சொன் னான். ஒரு மெல்லிய புன்னகை ஓடி மறைந் தது.

அவர்களை உள்ளே அமர வைத்து டீ, பிஸ்கெட் பரிமாறியபடி, தானும் அந்தச் சிற்றுண்டியில் கலந்து கொண்டான். ரகு நாதன் சிரித்துக் கொண்டே. "நந்து, இவர் உன் ஜாதி. புரியலை லவ்பெய்லியர் கேஸ்."

சூர்யா மெல்லப் புன்னகைத்தான்.

"அப்பா எல்லாம் சொன்னார். அட் வைஸ் ஏதும் பண்ணப் போறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க. கொஞ்சம் ப்ரீயாப் பேசினா ஆறுதலாயிருக்கும்னு நினைக்க றேன்."

நந்து இம்முறை லேசாகச் சிரித்து வைத் தான்.

"நந்து நீங்க பெட்டருங்க, இந்த விஷ யத்துல. என் கதை திரைக்கதை கணக்கா எசகுபிசகா இருக்குங்க. திடீர்னு ஒருநா என் லவ்வரோட அண்ணன் வந்தான். ஐஸ்க்ரீம் பார்லருக்கு கூட்டிட்டுப் போய் என் சாய்ஸ கேட்டு ஆர்டர் பண்ணான். நான் என்ன டான்னு திணறிட்டிருக்கும்போதே, அவன் தங்கச்சியோட கல்யாணப் பத்திரிகையை நீட்டினான். எனக்கு உடம்பெல்லாம் குப்புனு வேர்த்திருச்சு...

"எவ்வளவோ கஷ்டப்பட்டு, அவ வீட்டு சுவரேறிக் குதிச்சு அவளைப் போய்ப் பார்த்தேன். ஓடிவந்து என்னை கட்டிப் பிடிச்சு அவ அழுவான்னு நினைச்சேன். சிரிச்சுக்கிட்டே 'அண்ணன் உங்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கலையா? இருங்க, எடுத்திட்டு வர்றேன். நீங்க கட்டாயம் வந்திடுங்கண்ணா'னு சொன்னாளா, கோபம் குப்புனு பத்திக்கிச்சு.

"விட்டேன் ஒரு அறை, வாய்வழியா இரத்தம் வழியற மாதிரி, பிறகு என்ன.... அங்கிருக்கிறவன் எல்லோரும் என்னை மொத்திட்டாங்க. வீட்ல வந்து படுத்தா ஈஸ்ட்மென் கலர்ல வித்தியாசமா நிறைய தாலிங்களா வருது கனவுல. தாங்க முடியாம விஷத்தை குடிச்சுப்புட்டேன். அம்மாக்கு தெரிஞ்சு கதறினாங்க.

"அப்பா என்னடான்னா 'தேவதாஸ் வம்சம்டா அவன். காவியம் படைக்கப் போறான். விட்டுருன்னுட்டார். அம்மா தான் ஓட்டமா ஓடி ஒரு டாக்டரை கூப் பிட்டு வந்து காப்பாத்தினாங்க. பிறகு காலத் துல காதல் மெல்ல மறந்துடிச்சு. ம்... அப் புறம் உங்க அப்பாதான் மெக்கானிக்கல் ஷாப் வைக்க லோன் தந்தாரு. நல்லாருக் கேன்!"

கொஞ்ச நேரம் எல்லோரும் மௌனமா யிருந்தார்கள். "இப்ப அவ நினைவே வர்றதில்லையா?"

"வரத்தான் செய்யுதுங்க. இங்க அடை யாறுலதான் இருக்கா. இரண்டு குழந்தைங்க வேற இருக்கு. அன்னைக்கு இருந்த ஃபீலிங் இன்னைக்கு இல்ல..." என்று சூர்யா சொல் லவும்,

"நிஜமான காதல் அமுதசுரபி மாதிரி. வற்றாது. ஊறிக்கிட்டேதான் இருக்கும்."


"நிஜந்தாங்க. அவ கூந்தலிலிருந்த உதிர்ந்த ஒரு மல்லிகைப்பூ இன்னமும் என் புத்தகத்தில இருக்கு. அவ உதடு ஒற்றின கர்ச்சிப்பை திருடி, என் பெட்டியோட அடி யாழத்துல வெச்சிருக்கேன். நானும் வாழ்ந் துட்டிருக்கேன். ஒரு ஓரமா என் காதலும் வாழ்ந்துட்டிருக்கு. அதான் நீங்களே சொல்லியிருக்கீங்களே. என் காதல பொய்னு தாஜ்மஹால்கிட்ட நின்னு சொல் லிப் பாருங்க, தாஜ்மஹால் உடைஞ்சிரும்னு. ஆனா..."

"என்ன, சொல்லுங்க சூர்யா?"

"நந்து நீங்களே சொல்லுங்க. எது முக்கியம்? தாஜ்மஹாலா, உங்கப்பாவோட இதயமா?"

நந்துவுக்குள் இடி இடித்தது. மின்னல்கள் நரம்புகளெங்கும் வெட்டியது. கண்ணீர் சொட்டொன்று கரையேறியது.

• விசுவாசப்...





• ...போட்டி!

● கோபி நாகராஜன், கலிங்கியம்.

? '356 வது பிரிவைப் பயன்படுத்தி ஆட்சிக் கலைப்பு' எனும் ஜெ கருத்தில் பா.ம.கவுக்கு உடன்பாடு இல்லை.... என்று அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் தலித் எழில்மலை கூறியுள்ளாரே?

! நாடாளுமன்றத் தேர்தல் முடிவை யொட்டி மாநில அரசு ராஜி னாமா செய்ய வேண்டும்

'ஜெ'யின் உண்மையான விசுவாசி சு.சுவாமியா? சே.முத்தையாவா?

என்ற பா.ம.க. கருத்திலும் நமக்கு உடன் பாடு இல்லை.

● இரா. புவனேஸ்வரி, சென்னை – 81.

? சு. சுவாமி எங்கள் கூட்டணியில் இருக் கிறாரா இல்லையா என்பதே எங்களுக்குக் குழப்பமாக உள்ளது என்கிறாரே இல. கணேசன்?

! இந்த ஒரு குழப்பம் மட்டும்தானா...? தங் கள் கட்சிக்காரர்தாம் பிரதமராக இருக் கிறாரா என்கிற குழப்பம் கூட இல. கணே சனுக்கு வர வேண்டுமே!

● க. நா. இராஜேஸ்வரன், மொரட் டுப்பாளையம்.

? கூட்டணியில் உள்ள கட்சி களுக்கு எதிர்பார்த்ததை விட அதிகமாகவே மரியாதை தரு கிறார் ஜெயலலிதா என்று ராம தாஸ் கூறியிருப்பது பற்றி...?

! நம்மை நிற்க வைத்துத்தான் பேச வார் என்று ஒருவரைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் போது, அவர் உட்காரச் சொன்னால் அதுவே எதிர்பார்த்ததை விட அதிக மரி யாதை கிடைத்ததாகத்தானே அர்த்தம்!

● எம். அசோக்ராஜா, திருச்சி – 15.

? கருணாநிதியும் வெடிகுண்டு கலாசார மும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தை கள் என்கிறாரே ஜெ...?

! எப்போதும் போல் மிகைப்படுத்தி அம் மையார் சொல்வதை உண்மையென்றே வைத்துக் கொண்டாலும் அம்மையாருடன் வெடிகுண்டு கலாசாரம் மட்டுமின்றி வேறு பலவும் ஒட்டிப் பிறந்துள்ளனவே, பட்டியல் போடவா?... கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கல்லெறிவதா?

● விக்கி விக்னேஷ், மயிலாடுதுறை. ❑

? அரசியல்வாதிகள் அடுத்த பிறவியில் என்னவாகப் பிறப்பார்கள்...?

! மீண்டும் பிறந்து இந்த உலகைப் படாத பாடுபடுத்த வேண்டுமா...? உலக நன்மை கருதி உடனடி மோட்சம் தந்து விடுவார் கடவுள்!


● கே. வி. சூர்யா, நல்லத்துக்குடி.

? 'என்னால் எதையும் சாதிக்க முடியும்' என்பது தன்னம்பிக்கையா? அகந் தையா?


! என்னால் முடியும் என்பது



• கண்ணாடி வீடு....!



• தோல்விப் பேச்சு!



• எதிர்பாராத மரியாதை!

தன்னம்பிக்கை; என்னால் மட்டுமே முடியும் என்பது அகந்தை!

● **சூர்யநிலா, சேலம் – 2.**

? தமிழகத்தைச் சுடுகாட்டாக்கி விட்டது தி.மு.க. என குற்றம்சாட்டுகிறாரே தம்பிதுரை?

! சுடுகாட்டிலும் ஊழல் செய்த ஆட்சிக்காரர்கள் இப்படித்தான் பேசுவார்கள்.

● **மணிப்புறா, திருச்சி – 8.**

? எவ்வளவோ விஞ்ஞானம் வளர்ந்தும் பெண்களையும் மரணத்தையும் புரிந்து கொள்ள முடியவில்லையே, ஏன்...?

! அறிவால் மட்டுமின்றி மனத்தாலும் அணுகினால்தான் புரியும் என்பதால் விஞ்ஞானத்தைக் குறைகூற வேண்டாம்!

● **தி. மகாராசன், கடமலைக்குண்டு.**

? 'ஜெ'யின் உண்மையான விசுவாசி, சு. சுவாமியா? சே. முத்தையாவா...?

! நல்லவேளை, வாஜ்பாயா, அத்வானியா என்று கேட்காமல் விட்டீர்கள்!

● **பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.**

? சென்னைக்கு ஏ-1 சிறப்பு கிரேடு அந்தஸ்தை மத்திய அரசு வழங்கியுள்ளது குறித்து...?


! அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி உயரப் போகிறது. அன்றாடங்காய்ச்சிகளுக்கு அதனால் என்னவாகப் போகிறது!



* உடன்பாடு இல்லை!



* ஒரு குழப்பம், ஒரே குழப்பம்!



* அன்றைய ஜஸ்வந்த்!

● **கோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.**

? அ.தி.மு.க. என்ற ரயில் டெல்லி செங்கோட்டைக்குப் போய் விட்டது; இனி புனித ஜார்ஜ் கோட்டைக்குச் செல்லும் என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே?

! மனக்கோட்டை!

● **ஆர். ஆசிஸ்வா, திருவிடைமருதூர்.**

? நடிகர் சரத்குமார் ஒரு பேட்டியில், அரசியல்வாதிகளை, அரசாங்கத்தை மக்கள் குறைசொல்வதற்கு முன்னால் வோட்டுப் போடக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியுள்ளாரே?

! தோற்றுப் போன கையோடு இப்படிப் பேசினால் யார்தான் ஏற்பார்கள்? இவரே ஜெயித்து வந்திருந்தால் மக்கள் மகா புத்திசாலிகளாகத் தெரிய மாட்டார்களா...? எந்த நோக்கில், எப்படி வோட்டுப் போட்டிருந்தாலும், அரசைக் குறைகூற மக்களுக்குப் பூரண உரிமை உண்டு. அவர்கள்தான் இந்நாட்டின் மன்னர்கள்.

● **மூக்கனூர் என். தாமோதரன், சேலம் – 6.**

? மனித வாழ்க்கைக்கு ஆதாரமான உணர்ச்சி எது? துக்கமா? சந்தோஷமா?

! துக்கமும் மகிழ்ச்சியும் ஒரே நேர்க் கோட்டின் இரு எல்லைகள் என்ற உணர்வு – அதுதான் ஆதாரம்!

● **கே. எஸ். நாராயணன், சென்னை – 78.**

? ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு 1. ஐக்கிய முன்னணியின் கன்வீனராக இருந்த காலத்தில், தமது நேரத்தில் பதினைந்து சதவிகிதம் டெல்லி செல்வதிலேயே வீணாகக் கழிந்து விட்டது என்றும் 2. தற்போதைய மத்திய அரசு, ஐக்கிய முன்னணி அரசை விட நிலையானது என்றும் சமீபத்தில் கூறியுள்ளது குறித்து?

! 1. ஐ.மு.வின் convenor ஆக இருந்ததால் அவர் போக வேண்டியிருந்தது. இப்போது பி.ஜே.பிக்காக ஜஸ்வந்த் சிங் சென்னைக்கும் டெல்லிக்கும் பறக்கவில்லையா?! வேதாளத்துக்கு வாழ்க்கைப்பட்டால் முருங்கை மரத்தில் ஏறித்தானே ஆக வேண்டும்!

2. அன்றைய ஆட்சியின் ஸ்திரத்தன்மை பலரிடம் பரவலாக இருந்து இன்றைய ஆட்சியின் நிலைப்பாடும் செயல்பாடும் தனி நபரின் விருப்பு வெறுப்புக்குள் சிறைப்பட்டிருக்கிறதே! எது பெட்டர்?

● **அ. ப. ஜெயபால், பொன்னந்திட்டு.**

? வெற்றியின் ரகசியம் எதில் இருக்கிறது...?

! விடாமுயற்சியில்...

❑ **ரூ. 50 பரிசு பெறுபவர் :**
விக்கி விக்னேஷ்,
த/பெ முத்துக்குமாரன்,
63 ஏ, சொத்த தெரு,
மயிலாடுதுறை – 609 001.

அமைச்சருக்கே அழைப்பு விடுத்த இளைஞர்!

கும்பகோணத்தைச் சேர்ந்த சந்தானராமன், எம்.ஏ. முடிந்த பிறகு மும்பை ஐ.ஐ.டி.யில், பொருளாதாரத் துறையில் பி.எச்டி செய்து விட்டுக் கொஞ்ச காலம் மும்பையிலேயே தங்கிவிட்டார். அதற்குக் காரணம் இருந்தது!

சாராயம் காய்ச்சும் தொழிலிலும், சினிமாவில் பிளாக்கில் டிக்கட் விற்றும் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த மும்பைத் தமிழர்களின் நிலை!

ஒரு தடவை மாதுங்கா பகுதியில் ஒருவரை போலீஸ்காரர் செமையாக அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தபோது, அவரைத் தடுத்து நிறுத்தி விசாரித்தார். பிளாக்கில் டிக்கட் விற்ற குற்றத்துக்காக போலீஸ்காரரிடம் அடிபட்டவர் ஒரு தமிழர். திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அவரை போலீசாரிடமிருந்து மீட்டு, வீடு திரும்பியவருக்கு, ஒரு திடமான தீர்மானம் உண்டாயிற்று. பொருளாதாரத் துறையில் ஆராய்ச்சி மேற்படிப்புப் படிக்க அமெரிக்கா செல்லவிருந்த வாய்ப்பை நிராகரித்தார். மும்பையிலேயே தொடர்ந்து தங்கியிருந்து, சமூகக் குற்றங்களை இழைத்துப் பிடிபடும் தமிழர்களை மனமாற்றம் செய்ய வைத்தார் சந்தானராமன்.

மும்பையிலிருந்து திரும்பி சொந்த கிராமமான (கும்பகோணம் அருகில்) ஆலங்குடிக்கு வந்தபோது, உணர்வுபூர்வமான சமூக சேவகர் ஆகியிருந்தார் சந்தானராமன்.

அப்போது காவிரி பிரச்னை மும்முரமாக இருந்தது. கல்லூரிகளில் போய்ப் பேசி, பத்து சுறுசுறுப்பான மாணவர்களைத் தம்மோடு அழைத்துக் கொண்டு நேரே தில்லி நாடாளுமன்ற வளாகத்துக்குப் போனார். மணிசங்கர ஐயர், வாழப்பாடி ராமமூர்த்தி இருவரையும் சந்தித்துப் பேசிவிட்டு, நாடாளுமன்றம் முன்பாகவே, தம்மோடு கூட வந்து பத்துக் கல்லூரி மாணவர்களோடு உண்ணாவிரதப் போராட்டத்தை



ஆரம்பித்து விட்டார்!

வாஜ்பாய் அப்போது எதிர்க்கட்சித் தலைவர். அவரைச் சந்தித்து, காவிரி பிரச்னையை விளக்கினார் சந்தானராமன். "எங்கள் கர்நாடக அணி ஒரு மாதிரி ஸ்டெப் எடுத்தால், தமிழ்நாட்டு அணி வேறொரு மாதிரி ஸ்டெப் எடுக்கிறார்கள்! இருந்தாலும் ஒரு எம்.பி.யை நாடாளுமன்றத்தில் இதுபற்றிப் பேசச் செய்யுங்கள். மேற்கொண்டு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்றார் வாஜ்பாய்.

"வி.சி. சுக்லா வந்து பேசினார் எங்களிடம். இரண்டு மாதம் டைம் கேட்டார். உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடச் சொன்னார். அவருக்காக அன்று போராட்டத்தை நிறுத்திக் கொண்டோம்" என்று நினைவுகூர்ந்தார் இளைஞர் சந்தானராமன்.

தில்லி செய்தித்தாள்களில் மட்டுமல்ல, தஞ்சாவூரிலும் கொஞ்சம் அறிமுகம் கிடைத்தது அவருக்கு!

கும்பகோணம் திரும்பியதும், 'ஸ்டூடன்ட்ஸ் கவுன்ஸில் ஃபார் பொலிடிகல் என்டவர் (SCOPE)' என்ற அமைப்பை ஏற்படுத்தி, கல்லூரிகளில் எல்லாம் போய், சமூகச் சேவை மனப்பான்மை கொண்ட மாணவர்களைத் திரட்டினார். வேலை இல்லாத் திண்டாட்டம் பெரிய பிரச்னையாகத் தெரிந்தபோது, கூடுமான வரை அந்த வகையில் கவனம் செலுத்தினார். பணம் அதிகமாகச் செலவழிக்க வழியில்லாத போது, தம்மை நம்பி வந்த இளைஞர்களுக்குத் தமது அலுவலகத்திலேயே தங்க இடம் கொடுத்தார். அவர்களை சமூகப் பிரச்னைகளில் தமக்கு உதவப் பயன்படுத்திக் கொண்டார்.

கும்பகோணம் பஸ் ஸ்டாண்ட் ஒன்றரைக் கோடி ரூபாய் உலக வங்கிக் கடன் பெற்றுக் கட்டி முடிக்கப்பட்டும், திறந்து வைக்கப்படாமல் அப்படியே கிடந்தது.

பார்த்தார் சந்தான ராமன். அன்றைய அமைச்சர் செல்வகணபதிக்கு ஓர் அறைகூவல் விடுத்தார். "நீங்கள் திறந்து வைக்கவில்லை என்றால், மக்களுக்காகக் கட்டப்பட்ட பஸ் நிலையத்தை, மக்களைக் கொண்டே திறக்க வைப்பேன்!" என்று ஒரு தேதியும் குறிப்பிட்டார்.

அன்றே அமைச்சர் செல்வகணபதி வந்து பஸ் ஸ்டாண்டைத் திறந்து வைத்தார்!

சட்டம் படித்து டிகிரியும் வாங்கியவர் சந்தானராமன். மனித உரிமை வழக்குகள், லாக்அப் மரணங்கள் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு அவர்களுக்காக வாதாட இறங்கினார். பம்பாயிலிருந்தபோதே யூனிவர்சிடி ஸ்டூடன்ட்ஸ் அசோசியேஷன் வாயிலாக இந்த மாதிரி வழக்குகள் அவர் கவனத்தை ஈர்த்திருந்தன.

திருச்சி, கும்பகோணம், புதுக்கோட்டை பகுதிகளில் அவ்வப்போது போய் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான வழக்குகளில் ஆஜராகி உதவினார் இந்த இளைஞர்.

புதுக்கோட்டை கலெக்டராக ஷீலாராணி சுங்கத் இருந்தபோது, விராலிமலைப் பகுதியில் விபசாரம் பெருமளவில் பரவத் தொடங்கியதை அறிந்து, அவர் உதவியுடன் செயற்கை வைரம் வெட்டும் தொழிலை அங்கு அறிமுகப்படுத்தி அவர்களை மீட்டிருக்கிறார்.

"பெண்கள் பொருளாதார சுதந்தரம் பெற்றால்தான், சமூகத்தில் அவர்களால் கௌரவமாக வாழ முடியும். இல்லை என்றால் அவர்களுக்கு வாய்ஸ் கிடையாது!" என்கிறார்.

பெண்களுக்கான ஆட்டோ ஓட்டும் பயிற்சி கொடுத்து, அவர்களைச் சொந்தக் காலில் நிற்கவைத்திருக்கிறார்.

"அடுத்து பெண் பஸ் டிரைவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். அரசுத் துறையில் அவர்களுக்கு வேலை கொடுப்பது சிரமமாக இருக்கும். எனவே தனியார் துறையில் அவர்களை வேலையில் அமர்த்த முயற்சிகள் எடுத்து வருகிறேன்!" என்கிறார் சந்தானராமன்.

— சாருகேசி



ரத்னா

'ரத்னா' என்பது ஒரு பெண்ணின் பெயரும் அல்ல, நாட்டின் உயர் விருதும் அல்ல. தன் கண்முன்னே பெற்றோர் இறந்து குடும்பம் சிதறக் காரணமானவர்களை, பெரியவனானதும் பழிவாங்கும் 'அண்ணன்' முரளியின் பெயர்! (அடப் போங்கய்யா, அடுத்த நூற்றாண்டே வந்திடுச்சு. இன்னும் இந்த 'நாட்'டை விட்டுத் தொலைக்க மாட்டேங்கறீங்களே!)

முதல் பாதி தொய்வில்லாமல் நகர்வதற்கு முக்கியக் காரணம் டக்டக்கென்று முடியும் காட்சிகள். பின்பாதிதான் ஆனாலும் ஜவ்வு.

முரளிகளுக்கு அம்மாவாக ரேவதி - சின்ன வயது முரளிகளுக்குத்தான். குறைந்தபட்சம் இடைவேளைக்கு முந்தைய காட்சியிலாவது கதைக்குத் திருப்புமுனையாக ரேவதி என்டர் ஆவார் என நினைத்தால், ஊஹூம், படம் கிட்டத்தட்ட முடியும் வேளையில், ஃப்ளாஷ் பாக் காட்சிகளில் வருகிறார். பாத்தம்தான் என்றாலும் இவ்வளவு - சின்ன மட்டுமல்ல, சாதாரண ரோலை ரேவதி இதற்கு முன் ஏற்றதாக நினைவில்லை.

ஜாக்கிரதை உணர்வு கொண்ட எளிமையான கிராமத்துப் பெண்ணாக சங்கீதா தன் பாத்திரத்தில் பசையாக ஒட்டிக் கொண்டு பரிமளிக்கிறார்.


கதாசிரியராக 'வைகைப்புயல்'. யாரைப் பார்த்தாலும் ஒரு கதை சொல்லியே ஆகவேண்டுமென்ற துடிப்பு இவருக்கு. வடிவேலு சொல்லும் கதையைக் கேட்டு ஒருவர் ரத்தம் கக்கி செத்துப் போக, இன்னொருவருக்குப் பக்கவாதம் வர, மூன்றாமவர் "இதைக் கேட்பதை விட ரயிலின் முன் விழுந்து சாவதே மேல்" என்று கூறி அதைச் செயல்படுத்துகிறார். "சொன்னதைச் செய்து காண்பிச்சுட்டியே, நீ மானஸ்தன். இனி உன் கதையையே அடுத்தவனுக்குச் சொல்றேன்" எனும் வடிவேலுவை. ரசிக்க முடிகிறது.

இளம் வயதில் சிறிதும் முக ஒற்றுமையே இல்லாத இரண்டு சிறுவர்களைக் காட்டிய பிறகு, அவர்கள் வளர்ந்தவுடன் ஒரே முக ஒற்றுமையை அடைவதாக வேறு காட்டியிருக்கிறார்கள்! அபத்தம்! "நீ யாரையும் கொன்னுட்டு ஜெயிலுக்குப் போகக் கூடாது" என்று அடிக்கடி தம்பியிடம் கூறிவிட்டு அண்ணன் முரளி தானே கொலைகளைச் செய்கிறார். ஆனால் தம்பி முரளி பலரது கைகால்களை வெட்டுகிறாரே அதற்கெல்லாம் சிறைத் தண்டனை கிடைக்காதா?

தம் முகம் திரையில் வரவேண்டுமென்று இயக்குனர் ஆசைப்பட்டதில் தவறில்லை. தமது புகைப்படத்தை டைட்டிலில் காட்டியிருக்கலாம் அல்லது ஏதாவது ஒரு பாத்திரத்தில் நடித்திருக்கலாம். அல்லது 'பன்ச்'சான ஒரு காட்சி வந்ததும் (பாக்யராஜ் போல) தம் பெயரையும் முகத்தையும் பதிவுசெய்திருக்கலாம். அதைவிட்டு என்னவோ பின்புறத்தைக் காட்டியபடி நடந்து விட்டு, திடீரென்று முகத்தைத் திருப்பி க்ளோஸ்-அப்பாக்கி டைட்டில் கார்ட் போட்டுக் கொள்வது குழந்தைத்தனமாக இருக்கிறது. ஆனால் பாவம், தம் படத்தில் 'பன்ச்' காட்சியே இல்லையென்கிறபோது இளஞ்செழியன் வேறு என்னதான் செய்வார்!

— ஜி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


SILVER JUBILEE YEAR
வெள்ளிவிழா ஆண்டு
1974-98
கசடறக் கற்கும் பள்ளிப்பருவம்
முழுவதும் இதமான துணையாய்
வரும் என்டைஸ் சீருடைகள்.
தேர்ந்தெடுக்கப் பல
வண்ணங்கள் மற்றும்
டிசைன்கள். தரத்தில் முதலிடம்.
மாணவமணிகளின் இதயத்தில்
தனியிடம். என்றென்றும்.
அறிவுக்கு
அழகூட்டும்
என்டைஸ்
பள்ளிச் சீருடைகள்
10% தள்ளுபடி
01-05-98 முதல் 30-06-98 வரை
உங்கள் அருகிலுள்ள என்டைஸ்
விற்பனை நிலையத்தில் கிடைக்கிறது.
என்டைஸ் ®
சிறந்த துணி ரகங்கள். சரியான விலை.
நேஷனல்
டெக்ஸ்டைல்
கார்ப்பொரேஷன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS(S) [illegible]
prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

